
கல்கி




தோல்வி அவளை எதிர்நோக்கி நின்றது!
அவள் என்னவோ நன்றாகப் படித்துக் கொண்டுதான் வந்தாள். ஆனால் பரீட்சைக்கு சில வாரங்களே இருந்தபோது அவளுக்குப் படிப்பில் அக்கரையே இல்லாமல் போய்விட்டது...
அவளை டாக்டரிடம் அழைத்துச் சென்றோம். படிப்பில் அதிக நேரம் செலவழித்ததால் ஏற்பட்ட ஓய்ச்சல் மட்டும் அல்ல. அது என்றும், செலவழியும் சக்தியை ஈடு செய்யப் போதுமான போஷாக்குக் கிடைக்காமையும் காரணம் என்று டாக்டர் சொன்னார்.
Horlicks
டாக்டர் சிபாரிசு செய்தபடியே அவளுக்கு ஹார்லிக்ஸ் கொடுத்து வந்தோம். விரைவிலேயே மீண்டும் ஊன்றிப்படிக்க ஆரம்பித்ததோடு பரீட்சையிலும் முதன்மையாகத் தேறினாள். எல்லாம் ஹார்லிக்ஸ் செய்த நன்மைதான்!
வளரும் குழந்தைகளின் சக்தி மிக விரைவில் செலவழிந்து விடுகிறது. இந்த சக்தி முழுவதும் ஈடு செய்யப்படாவிடில் அவர்கள் களைப்புற்று எதிலும் ஊன்றிக் கவனம் செலுத்த முடியாமல் ஆகி விடுகிறார்கள். ஹார்லிக்ஸ் குழந்தைகளுக்குத் தேவையான அதிக போஷாக்கை அளித்து அதிக சக்தியை ஊட்டுகிறது என்பதை டாக்டர்கள் அறிவார்கள். அடைச் சத்து மிகுந்த பால், கோதுமை மாவு, மால்ட் பார்லி, இவற்றின் போஷாக்குச் சத்துக்களைக் கொண்ட ஹார்லிக்ஸ் சோர்வை போக்க அதி ஆச்சரியமான முறையில் உதவுகிறது.
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி
யளிக்கிறது!
Horlicks
JWT-HL-3487A



மே 26 முதல்
வெலிங்டன்
பிரபாத்
ராக்ஸி.ராம்
மற்றும்
தென்னாடெங்கும்
ஏ வி எம்
புரொடக்ஷன்ஸ்
அதே கண்கள்
ஈஸ்ட்மென்கலர்
BY ஜெமினி லாப்
கதை-டைரக்ஷன்
A.C.திருலோகசந்தர் MA.,
M.முருகன் M.குமரன் M.சரவணன்
பாலசுப்ரமணியம் & கோ
AVM
PRODUCTIONS



கல்கி

பொருளடக்கம்

பிலவங்க, வைகாசி 14 — மே 28

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

நினைவுத் திரையில்...

'ஏ' என்பவன் 'பீ' என்பவனுக்கு 'ஸி' வட்டி விதம் 'டி' ரூபாய் கடன் கொடுத்தான். 'எம்' வருஷத்தில் வட்டியும் முதலும் 'ஜீ' ஆனால் 'டி' என்னவாகு?

இரண்டாவது பாரத்துக்குரிய கணக்கும் புத்தகத்தில் முதல் அத்தியாயத்தில் முதல் கணக்கைக் கேளுங்கள்:


''o747315ல் 'ஏ' ஆயிரங்களும் 'பீ' பத்துக்களும் 'ஸி' ஒன்றுகளும் இருக்கின்றன. ஏ., பீ., ஸி.யின் மதிப்பு என்ன?''

இம்மாதிரிக் கணக்குகளை யெல்லாம் போட்டும் நம் குழந்தைகள் மூளை குழம்பிப் போகாமல் இருக்கிறார்கள் என்றால், ஏதோ நம் தமிழ்நாட்டுப் பெரியோர்கள் செய்த புண்ணியந்தான்.

'ஸிம்பல்' மூலமாக ஒரு விஷயத்தை அறிவதோ உணர்த்துவதோ மிகவும் கஷ்டமான விஷயம். அதெல்லாம் வயது முதிர்ந்தவர்களுக்கே உரியது அல்லது மூளை ஒரு பக்கமாக வளர்ச்சி அடைந்திருக்கும் பிடித்த குழந்தைகளுக்கு உரியது. சாதாரணக் குழந்தைகளை இப்படியெல்லாம் ஏன் வதைக்க வேண்டுமோ, கடவுளுக்குத்தான் தெரியும்.

''பெற்றோன்''

''எத்தனை நாள் இந்தக் கொடுமை'' என்ற கட்டுரையிலிருந்து ஒரு பகுதி. கல்கி மே 2, 1948


நான் எங்கே
நிற்கிறேன்!
கடன்
கடன்
கடன்
திட்டம்
Rali

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ✲ இதழ் 43



எதிர்க்கட்சிகளுக்கு ஓர் அழைப்பு

குருவை மிஞ்சிய சீடனாகி விட்டது காங்கிரஸ்! கேரளாவின் கம்யூனிஸ மந்திரி சபை வெளி ராஜ்யத் தனி முதலாளிகளைக் கூடக் கேரளத்துக்கு வந்து தொழில்கள் தொடங்குமாறு கோருகிறது; சர்க்கார் தொழில் நிறுவனங்களில் தனியார் துறையில் அநுபவம் வாய்ந்தவர்களை நிருவாகப் பொறுப்பு ஏற்குமாறு அழைப்பு விடுகிறது; அவர்களுக்கு லாபத்தில் பங்கும் தருவதாகச் சொல்கிறது. இதே சமயத்தில் காங்கிரஸ் மேலிடமோ மேலும் பல தனியார் தொழில்களைச் சர்க்கார் வசமாக்க விரும்புகிறது!

பாங்குகள், பொது இன்ஷூரன்ஸ் முதலியவற்றை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்பது போன்ற பல தாக்கீதுகளைக் காங்கிரஸ் மேலிடத்தார் மத்திய சர்க்காருக்குப் பிறப்பித்திருக்கின்றனர். உணவுப் பிரச்னை, விலைவாசி உயர்வு முதலியவற்றைக் கவனியாத காங்கிரஸ் கட்சி சந்தர்ப்பத்தின் தேவைக்கேற்ற நோக்கை அடியோடு தவற விட்டிருக்கிறது. இது பற்றிப் புகழ் வாய்ந்த 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' எழுதுவதாவது:

> பழைய தவறுகளிலிருந்து காங்கிரஸால் ஏதாவது பாடம் பெற முடியலாம் என்று நாம் வைத்திருந்த சிறிதளவு நம்பிக்கைக்கும் இனி இடமில்லை. விவசாயத்திலும் தொழில் துறையிலும் கடந்த இருபதாண்டுகளில் காங்கிரஸ் செய்த ஊழல் நிருவாகத்தால் நமது சரித்திரம் கண்டிராத பயங்கரமான பொருளாதார நெருக்கடியின் முன்னால் நாடு நிற்கிறது. இவ்விரு துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்குவதே நம்முடைய முக்கியமான பொறுப்பாக இருக்க வேண்டிய இத்தருணத்தில் காங்கிரஸ் பண்டிதர்களோ — இவர்களில் பெரும்பாலோர் தேர்தல்களில் கழிக்கப்பட்டவர்கள் — தொழில்களைச் சர்க்கார் உடைமையாக்குவது பற்றியும், சர்வாதிகாரக் கட்டுப்பாட்டின் இதர ஆயுதங்களைப் பிரயோகிப்பது பற்றியும் பேசி, விஷயஞானமற்றவர்களின் கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டி விடுவதிலேயே திருப்தி அடைந்துள்ளனர்.

இன்னமும் காங்கிரஸ் பழைய பாட்டையிலேயே பிடிவாதமாகச் செல்வதைக் காணும் எதிர்க்கட்சிகள், தருணத்தின் தேவை அறிந்து எழுச்சி பெற்றுச் சிந்திக்கவும் செயலாற்றவும் வேண்டும். தேசத்தின் தலைவிதி தங்களுக்கு விடுக்கும் உறுதியான அழைப்பே இது என்று அவர்கள் கருத வேண்டும். இடதுசாரி — வலதுசாரி என்ற இருவகைக் கம்யூனிஸ்டுகளும் நீங்கலாக, எதிர்க்கட்சிகளிலுள்ள சோஷலிஸ்ட் கட்சிகளும் இவ்வழைப்பை ஏற்கவேண்டும். ஏனெனில், சோஷலிஸம் வேறு; சர்க்கார் சர்வாதிபத்தியம் வேறு. பார்லிமென்டில் உள்ள பல சோஷலிஸ்ட் கட்சிகளும்கூட மத்திய அரசோ, ராஜ்ய அரசுகளோ இவ்வளவு அதிகாரம் பெற்றிருப்பதை விரும்பவில்லை என்று நம்ப இடமுண்டு. அரசாங்க நிறுவனம் பெருத்த அதிகாரம் பெற்றிருப்பதால் ஏற்பட்டுள்ள உற்பாதங்களைக் கண்ணுக்கு நேராகப் பார்த்தாகி விட்டது. நிருவாகத்தில் பரவிய ஊழல்களும் லஞ்சமும்தான் சென்ற தேர்தலில் காங்கிரஸ் தலை குப்புற விழுந்ததற்குக் காரணம். கட்சிக்குப் பொதுவாகத் தண்டனை கொடுப்பது மட்டும் போதாது என்று கருதியே மக்கள் அக்கட்சியின் முக்கியமான தலைவர்களுக்கும் தீர்மானமாகத் தோல்வி தந்தனர். காங்கிரஸின் கொள்கைகளிலுள்ள தவறுகளுக்கும், மக்களின் மனநிலைக்கும் இதைவிட வேறு சான்று தேவையில்லை. இதை சோஷலிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தோரும் உணரத்

அறியாதிருக்க மாட்டார்கள். எனவே, இவர்களும் இன்று காங்கிரஸின் திட்டத்துக்கு ஒரு மாற்றுத் திட்டத்தையே தேசம் அறைகூவி அழைப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களின் தீர்ப்புக்குப் பிறகும் காங்கிரஸ் திருந்தவில்லை. கொள்கையை மாற்றிக் கொண்டால் அது தனது பழைய தவற்றை ஒப்புக்கொண்டதாகும் என்பதால் பழைய பல்லவியையே பாடி வருகிறது. கொள்கையை மாற்றிக் கொள்வதால் கடந்த இருபதாண்டுகளாகக் கட்சியில் சேர்ந்துள்ள பல அபிமானிகளின் ஆதரவை இழந்து, தானாகவே பதவியிலிருந்து விலக வேண்டிய நிலைமை உருவாகிவிடலாம் என்று அஞ்சுவதாலேயே அதிகாரத்துக்கு ஆசை கொண்ட காங்கிரஸ் தவறுகளைத் திருத்திக் கொள்ள மறுக்கிறது. நொண்டிக் கொண்டாயினும் நிருவாகத்தைத் தானே தொடர வேண்டுமென விரும்பிக் காங்கிரஸ் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. இது எதிர்க்கட்சிகளுக்கு நல்ல அவகாசத்தைக் கொடுத்திருக்கிறது. 'சர்க்காரின் சர்வாதிபத்தியம் கூடாது; சமூகத்துக்குச் சமநீதி கிடைக்க வேண்டும்; ஏழைகளின் வாழ்நிலைமை உண்மையாகவே உயர்த்த வேண்டும்; உழவிலும் தொழிலிலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்' என்றெல்லாம் கருதுகிற எல்லா எதிர்க்கட்சிகளும் தங்களது தனித்தனிக் கொள்கைகளை ஆழப் பரிசீலனை செய்து, ஏகோபித்த தேசியக் கொள்கைகளை உருவாக்கிக் கொண்டு, அவற்றின் அடிப்படையில் பொறுப்பு ஏற்பதற்கு முன்வர இது ஒரு வாய்ப்பு. இவ்வாறு இவர்கள் ஒன்றுபட்டால், மக்கள் இவர்களை நிச்சயமாக ஆதரிப்பார்கள். காங்கிரஸ் பதவியிலிருந்து விலகியே தீர வேண்டிய நிலையும் ஏற்படும்.

ராஷ்டிரபதித் தேர்தலில் தங்கள் வேட்பாளர் வெற்றி பெற்று விட்டதால் தேர்தலில் நாடு தந்த தீர்ப்பு மாறி விட்டது என்று காங்கிரஸ் எண்ணுமாகில் அது மதியீனமே ஆகும். ராஷ்டிரபதித் தேர்தல் என்ற மாய மானைக் கண்டு எதிர்க்கட்சிகள் குழப்பமடைந்து தேச க்ஷேமத்துக்கான சரியான பாட்டையை விட்டு விலகலாகாது.

கலியாண வயது

பெண்களுக்கு இருபது வயதுக்குமேல் திருமணம் செய்தால் மக்கட் தொகையைக் கணிசமாகக் கட்டுப்படுத்திவிட முடியும் என்பது மந்திரி ஸ்ரீ சந்திரசேகர் அவர்களின் முடிபு. 'பிள்ளைப் பேறு என்பது எந்தெந்த வயதுக் கட்டங்களில் எப்படியெப்படி அமைகிறது என்று அவரிடம் புள்ளி விவரம் இருக்கிறதா?' என்று சிலர் கேட்டிருக்கிறார்கள்.

புள்ளிவிவரம் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். ஆனால் இதல்ல நமக்கு முக்கியமான விஷயம். இந்தியப் பிரஜைகளின் திருமணம் என்பது அவர்களின் மனப் போக்கு, மத உணர்வு முதலியவற்றைப் பொறுத்ததா, அல்லது டாக்டர் சந்திரசேகர் அவர்களின் மனோராஜ்யத்தைப் பொறுத்ததா என்பதே கேள்வி. பாரத மக்களின் தனி வாழ்வுச் சுதந்திரங்களை இப்போதே பல விதங்களில் குறைத்தாகி விட்டது. எஞ்சியுள்ள ஓரிரு அம்சங்களிலும் சர்க்காரின் சர்வப் பிரவேசத்தை அனுமதிப்பது இந்நாட்டைக் கம்யூனிசத்தின் பெரும் பாசறையாக்குவதிலேயே முடியும்.

பதினொன்று வயதுக்கு முன்னர் பெண்களின் பௌதிக அமைப்பு தாம்பத்தியம் வகிப்பதற்கு ஏற்றதல்ல என்ற கருத்தின் மீதும், இளம் பருவக் கைம்மையைத் தவிர்க்கவும் முன்பு சாரதாச் சட்டம் செய்யப்பட்டது. அது கீழ் வரம்பு விதித்ததோடு நில்லாமல் மேல் வரம்பும் விதிக்காவிடில் — அதாவது இத்தனை வயதுக்குள் திருமணம் செய்தேயாக வேண்டும் என்றும் விதிக்காவிடில் — சமூக ஒழுக்கங்கள் தடம் புரள ஏதுவுண்டு என அந்த நாளிலேயே சில பெரியோர்கள் வற்புறுத்தி வந்தனர். அதிலுள்ள நியாயத்தைத் துரதிர்ஷ்டவசமாக இப்போதே ஓரளவுக்கு நிதரிசனமாகப் பார்த்து வருகிறோம். இயற்கையாகத் தாம்பத்தியத்தில் மனம் செல்கிற வயதுக்குப் பின்னரும் மணம் செய்து கொள்ள இயலாத பெண்களும் ஆண்களும் புதிய கல்வி, உத்தியோக அமைப்புகளில் ஓரளவுக்கு நெருங்கிப் பழகுவது பற்றி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கும் மக்கள் இன்னும் இத்தேசத்தில் இருக்கிறார்கள். சர்க்கார் சட்டப்படி எல்லோரையும் குறிப்பிட்ட வயதுவரை கலியாணம் செய்து கொள்ளாமல்தானிருக்க வேண்டும் என்று பலவந்தம் செய்தால் நிலைமை என்னாகுமோ? மண வினையைத்தான் அரசாங்கம் கட்டுப்படுத்தலாமேயன்றி, மன நிலையைக் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் மக்கள் மனோபாவம் பற்றியும் தேச ஆசாரத்தைப் பற்றியும் பொருளாதாரக் கற்பனையாளர்களுக்குத் தெரியாது.

பல மாதர் சங்கங்களும், சமூக ஒழுக்கத்தில் அக்கறையுள்ள கழகங்களும் சுகாதார மந்திரியின் உத்தேசத் திட்டத்தினால் பெற்றோருக்கு ஏற்படும் பயங்கரப் பொறுப்பைச் சுட்டிக் காட்டி, இவ்வேற்பாட்டைக் கண்டித்துள்ளன. இப்போதே பெண்களின் கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகுதான் அநேகமாகத் திருமணம் செய்கிறார்கள். சர்க்காரின் உத்தேச வயது வரம்பும் இதுவும் ஏறத்தாழ ஒன்றாகவே இருக்கும். என்றாலும் அரசாங்கம் 'இருபது வயது' என்றால் அதற்குப் பிறகுதான் வரன் வேட்டையிலேயே ஈடுபடத் தோன்றும். மேலும் இப்போது 'இருபது' என்பதற்கு இடம் தந்தோமாயின், நாளைக்கே மீண்டும் ஜனசங்கியைப் பட்டியலை வைத்துக் கொண்டு கணக்குப் போட்டு 'இருபத்திரண்டு', 'இருபத்தி நாலு' என்று வரம்பை மந்திரியார் உயர்த்திக் கொண்டே போகக் கூடும். சமூக ஒழுக்கத்தில் அக்கறையுள்ளவர்கள் இதைக் கவனிக்க வேண்டும்.

என்ன சேதி?

- ☐ படியரிசி
- ☐ மாறுதல் எதில் தேவை?
- ☐ உலக வர்த்தக உடன்பாடு
- ☐ புதிய அகில இந்தியக் கட்சி

தமிழகத்தில் ரேஷன் அமுலில் உள்ள நகரங்களில் ரூபாய்க்குப் படி அரிசி தரத் தொடங்கியாயிற்று. ஆட்சியாளரின் நெடுநாளைய வாக்குறுதி நிறைவேறிற்று; தமிழ்மக்களின் நெடுநாளைய நம்பிக்கை நிறைவேறிற்று.

ஆரம்ப கட்டத்தில் உள்ள சில்லறைக் குறைபாடுகளைப் பெரிதாக்கிக் காட்ட வேண்டாம். மகத்தான காரியத்தில் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டு வரும் அரசுக்குத் தயங்காமல் பாராட்டுக் கூறுவோம்.

மத்திய சர்க்காரின் பொருளாதாரக் கொள்கையும், நிதிக் கொள்கையும் முற்றிலும் மாறினாலொழிய உணவுப் பண்டங்களின் விலை இயற்கையாகக் குறைய வாய்ப்பில்லை. எனவே, தமிழக அரசின் திட்டம் பூரணமாக வெற்றி காணவிடிலோ, அல்லது இது காரணமாக உணவு உற்பத்தியாளர்களுக்கு ஈடுபாடு குறைந்தாலோ அதற்கு மத்திய அரசைத்தான் பொறுப்பாளியாக்க வேண்டும். குறுகிய காலத் திட்டமாகத் தன்னால் இயன்றதைத்தான் ஒரு ராஜ்ய சர்க்கார் செய்ய முடியும். எனினும், அதே சமயத்தில் மத்திய அரசு தன் கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் தி. மு. க. அயராமல் போராட வேண்டும்.

திட்டக் கமிஷனில் பிரதம மந்திரியும், மற்ற மந்திரிகளும் அங்கம் வகிப்பதால் அதன் முக்கியத்துவம் அளவுக்கு மீறிப் பெரியதாகி விடுகிறது என்றும், அதில் அரசியல்வாதிகளின் ஆதிக்கம் குறைந்து நிபுணர்கள் அதிக இடம் பெற வேண்டும் என்றும் நிர்வாகச் சீர்திருத்தக் குழு கூறிய யோசனை வரவேற்க வேண்டிய ஒன்று. ஆயினும் தேசிய அபிவிருத்திக்குழு என்ற பெயரில் இயங்கிவரும் மந்திரிகளடங்கிய அமைப்பு, திட்டக் கமிஷனுக்கு மேலாக விளங்கும்வரை அரசியல்வாதிகளின் திட்டமே வலியுறுத்தப்படும். இப்போது தேவை திட்டக் கமிஷனில் மாறுதல் செய்வது மட்டுமல்ல. திட்டமிடும் முறையே அடியோடு மாற வேண்டும். ஏதோ ஒருவிதத்தில் இன்றைய மந்திரிசபையே திட்டத்துக்குப் பொறுப்பாக உள்ள வரையில் இந்த அவசியமான மாற்றத்தைக் காண்பதற்கில்லை. பிரதமர் திட்டக் கமிஷனில் முக்கியமான அங்கம் வகிக்க வேண்டும் என்று ஆளும் கட்சி கருதுவதிலிருந்து அவர்கள் தங்கள் கையில் சிக்கின பொருளாதார அதிகாரத்தைக் கைவிட விரும்பவில்லை என்பது தெளிவு.

இயற்கை வளங்களை ஒட்டி எந்த நாட்டில் எந்தப் பண்டத்தை உற்பத்தி செய்ய முடிகிறதோ அதை இயற்கையான வர்த்தகப் போட்டி மூலம் நியாயமான விலைக்கு உலகம் முழுவதற்கும் கிடைக்கச் செய்வதற்குக் குறுக்கே நிற்பவை காப்புச் சுங்கங்கள். பொருளாதாரத்தின் இயற்கை விதிப்படி உலக அரங்கில் பண்டங்கள் பரிவர்த்தனை ஆகி, விலைகளும் நியாயமாக நிர்ணயமாக வேண்டும் என்று கருதிய காலம் சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்கள் சர்வதேச ரீதியில் இப்பிரச்னை பற்றி விவாதங்கள் நடத்தினார். எல்லா நாடுகளும் காப்புச் சுங்க வரியைச் சரிபாதியாகக் குறைத்துக் கொண்டு, பண்டங்களின் இயற்கையான போக்குவரத்துக்கு உதவ வேண்டும் என்பது கென்னடி அவர்களின் கொள்கை. ஆனால் அவர் ஜீவியவந்தராக இருக்கும்போது மற்ற நாடுகளின் ஆதரவு போதிய அளவு கிட்டாததால் முடிவு ஏதுவும் எடுக்கப்படவில்லை.


நாலாண்டு விவாதத்துக்குப் பின் இப்போது சுமார் பத்தாயிரம் பொருள்கள் குறித்த காப்பு வரியை முப்பது சதவிகிதம் குறைக்க வேண்டும் என 54 நாடுகள் உடன்பாடு கண்டுள்ளன. சர்வதேச வர்த்தகத்தில் ஐந்தில் நாலு பங்குப் பண்டங்கள் இவ்வுடன்படிக்கையின் கீழ் வருகின்றன. இதனால் இந்தியாவுக்கு ஏற்படும் லாப நஷ்டங்கள் என்னவென்பது இப்போது தெரியவில்லை. அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற முறையில் அது சலுகைகள் பெறலாம் என்று நம்பப்படுகிறது.

அதெப்படியாயினும், சுங்கச் சுவர்களை எழுப்பிக் கொண்டு உலகக் குடும்பம் வர்த்தகத்தில் பிரிந்து நிற்கும் நிலை என்றேனும் மாறியே ஆக வேண்டும் என ராஜாஜி நீண்ட காலமாகக் கூறி வருவதில் இது ஓர் ஆரம்ப கட்டம் என மகிழலாம்.

பீஹார் முதன் மந்திரி ஸ்ரீ மகாமாயா பிரசாத் சின்ஹாவை அக்கிராசனராகக் கொண்டு, காங்கிரஸின் பிளவுக் கட்சிகள் பலவும் 'ஜனக் கிராந்தி தளம்' என்ற அகில இந்தியப் புதுக் கட்சியை நிறுவியுள்ளன. ஸ்ரீ ஹரேகிருஷ்ண மகதாப், ஹுமாயூன் கபீர் முதலிய பெரிய பெயர்கள் கட்சியுடன் சேர்த்துப் பேசப்படுவதால் அது தனிக் கவனம் பெற்றுள்ளது. ஆசாரிய கிருபளானி கட்சியின் தொடக்க விழாவில் கலந்து கொண்ட போதிலும் அவர் கட்சியிலேயே கலந்து விட்டார் என்று கொள்வதற்கில்லை.

இதுவும் ஒரு சோஷலிஸக் கட்சிதான். நாட்டில் இப்போதுள்ள சோஷலிஸக் கட்சிகளுக்கே குறைவில்லை. இன்றைய ஜனநாயகத் தேவையோ வலதுசாரிக் கொள்கையினர் வலுப் பெறுவதுதான். புதிய சோஷலிஸக் கட்சியால் பலன் ஏற்படாது.

ராஜாஜியின் கருத்துக்கள்



நமது மகோன்னதமான ராஷ்டிரபதியாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார்கள். எல்லாப் பக்கங்களிலிருந்தும் அவர் மீது பொழியப்படும் பாராட்டுக்களுக்கும் புகழுரைகளுக்கும் அவர் தக்க பாத்திரமே யாவார். தனிப்பட்ட முறையில் நானும் அவரைப் பாராட்ட முயல்வது, பொன்னுக்கு மூலாம் பூசுவதும், தாமரைக்கு வர்ணம் தீட்டுவதும் போலவே ஆகும்.

ஃஃஃ

ஒரு விஷயம் தெளிவானது: காங்கிரஸாக இருந்தாலும் சரி, வேறெந்தக் கட்சியாக இருந்தாலும் சரி — ஆட்சிப் பொறுப்பை ஏற்கிற கட்சி நிரம்ப அதிகாரத்தைத் தன்னிடம் வைத்துக் கொள்ளக் கூடாது. பெர்மிட் — லைசென்ஸ் வழங்குவதன் மூலம் அதிகாரம் முழுமையும் தன்வசமாக்கிக் கொள்கிற எந்தக் கட்சியும் படுகுழியில் விழுந்துதானாக வேண்டும். இப்படுகுழியை எதிர்க்கட்சிகளும் தவிர்த்தாக வேண்டும். எதிர்க்கட்சிகளின் ஆட்சி ஏற்பட்டாலும் சர்க்காரின் அதிகாரம் குறைந்தபட்சமாக்கப்பட வேண்டும்; மக்கள் உழைக்கவும் உற்பத்தி செய்யவும் வெளிப்படையாக ஊக்கம் தரப்பட வேண்டும். ஆட்சியில் உள்ள கட்சி சொந்த நலனுக்காக அதிகார துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமேயில்லாதபடி, அதன் அதிகாரம் குறைக்கப்பட வேண்டும். இது சுதந்திரக் கட்சியின் உடம்போடு பிறந்த ஓர் அங்கம். இதுவே அக்கட்சி மக்களுக்குத் தரும் காப்புமாகும். ஆட்சியதிகாரம் பெறுவதற்கு முன்கூட்டியே அது, சுதந்திரப் பொருளாதாரத்துக்கு நிரம்ப இடம் தருவதென்றும், சர்க்கார் தலையீட்டை அத்தியாவசியமான அளவுக்கு மட்டுமே குறைப்பதென்றும் முடிவு செய்து, இக்கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறது.

சென்ற வாரம் சென்னைக்கு வந்திருந்த டாக்டர் லோஹியா அவர்கள் அன்போடு என்னைப் பார்க்க வந்திருந்த போது, சுதந்திரக் கட்சியும் ஆட்சிக்கு வந்தால் இந்தக் கொள்கையை விட்டு விடுமோ என்னவோ என்றார். அது அப்படிச் செய்யுமாயின், சற்றும் தாமதமில்லாமல் மக்களே அதைப் பதவியிலிருந்து 'உதைத்துத் தள்ளுவார்கள் என்று நான் பதில் கூறினேன். சுதந்திரப் போராட்டம் என்ற பழைய மூர்த்தியைக் காட்டியே இன்னும் உயிர் வாழும் காங்கிரஸைப் போன்றதல்ல சுதந்திரக் கட்சி. தன் கொள்கைகளைக் காட்டி வோட்டுக் கேட்டு, அக்கொள்கைகளை அமுல் செய்வதன் மூலமே வாழ வேண்டிய கட்சி அது. தன் உடலில் ஓர் அங்கமாகிவிட்ட கொள்கையை அது விட முடியாது.

ஃஃஃ

லோஹியா அவர்கள் எதிர்காலத்தில் நம் நாடு ஜனநாயக முறையில் முன்னேறக் கூடிய வாய்ப்புப் பற்றி மிக மிக நம்பிக்கை இழந்திருந்தார். அவரது அமைதியின்மை வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனபடியால், அவர் வன்முறைகளை ஆதரித்துப் பேசாவிடினும்கூட நான் வன்முறை பற்றியும், சட்டவிரோதமான நடவடிக்கைகள் பற்றியும் அவருடன் விவாதித்தேன். 'அஹிம்சை என்ற தருமத்தை ஒருபுறம் வைத்து விடுவோம்; நன்னெறிகள், சமயோசிதம் என்பனவற்றைக் கொண்டே இப்பிரச்னையை அணுகுவோம். அஹிம்சா மார்க்கத்துக்கோ அரசியல் சாஸனத்துக்குட்பட்ட மார்க்கத்துக்கோ தேவைப்படுவதைவிட வன்முறையையும் சட்ட விரோதமான நடவடிக்கைகளையும் பின்பற்றும்போது மக்கள் அதிகக் கட்டுப்பாட்டுடன் நடக்கவேண்டியிருக்கும். சட்டத்துக்கு உட்பட்டு அரசாங்கத்தை மாற்ற விரும்புகிறவர்களிடம் கட்டுப்பாடு குலைந்து, அவர்களது நோக்கம் உடனடியாகத் தோல்வியுற்றாலும்கூட அவர்களின் இயக்கம் அதோடு அழிந்து விடாது. அது தொடர்ந்து நடத்தப்படும். ஆனால் வன்முறையாளர்களிடம் கட்டுப்பாடு குலைந்து விட்டால் உடனடியாக அவர்களது நோக்கம் தோல்வியுறுவது மட்டுமின்றி, அவர்களது இயக்கமே அடியோடு அழிந்து விடும். சட்டத்தை மீறிய வழிகளை மீறுவதற்குத் தேவைப்படும் உறுதியான கட்டுப்பாடுகள் இன்றைய நிலையில் நம் நாட்டில் தோன்ற முடியாது' என்றேன்.

ஃஃஃ

காங்கிரஸ் 'மேலிட'த்தின் விவகாரங்கள் பற்றிப் பத்திரிகைகள் கூறும் கதைகளையெல்லாம் முற்றிலும் சரியானவை என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. எனினும் இறுதியில் கட்சியே வெளியிட்ட அறிக்கையிலிருந்து முடிவு தெளிவாகத் தெரிகிறது. அதாவது, பிரதமரும் அவரது சகாக்களும் கட்சி எஜமானர்களிடம் சரணாகதியாகி விட்டனர். இனி கட்சிதான் பிரதானமாக இருக்கப் போகிறது; சர்க்கார் அல்ல.

தேசத்தின் நோக்கில் இது ஒரு மோசமான முடிவு. இந்தப் போக்கு அபாயகரமானது. இதிலிருந்து காங்கிரஸ் அமைப்பு கம்யூனிஸ பாணிக்கே மிக மிக நெருக்கமாகச் செல்வது தெரிகிறது. கட்சியே ஆணைகளை செலுத்த வேண்டும்; அதற்குக் கீழ்ப்பட்டே அரசியல் சாஸனத்தின்படி அமைந்த சர்க்கார் இருக்க வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் தலைவர்களின் விருப்பம். அதாவது பார்லிமென்டில் உள்ள எதிர்க் கட்சிகளின் கருத்தைக் கேட்க

வேண்டிய சர்க்கார் அந்த மாற்றுக் கருத்துக்களில் சிலவற்றையாவது எடுத்துக் கொள்ளக் கூடும் என்பதால், அப்படி நடக்க விடாமல் கட்சியின் கருத்தையே வலியுறுத்தி அரசாங்கத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்க விரும்புகின்றனர்.

கருத்த மேகத்தின் விளிம்பிலும் வெள்ளிக் கரை இருப்பதுண்டு. அதுபோல் இன்றைய சூழ்நிலையிலும் ஒரு வெள்ளி விளிம்பு உள்ளது. மத்திய சர்க்காரை நடத்தும் காங்கிரஸ் கட்சியைச் சேராதவர்கள் இயக்கும் பல ராஜ்ய சர்க்கார்கள் உள்ளன. அரசாங்கம் காங்கிரஸ் கட்சிக்கு உட்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்ற ஏற்பாடு இந்த ராஜ்யங்களில் செல்லுபடியாகாது. இந்த ராஜ்யங்கள் தங்களுக்கு அதிகாரமுள்ள விஷயங்களில் மத்திய சர்க்காரின் கட்டுப்பாட்டைத் தடுக்காமலிரா.

ஃஃஃ

எது நேர்ந்தாலும் தானே பதவியிலிருக்க வேண்டுமெனத் தில்லியிலுள்ள யூனியன் சர்க்கார் கருதுவது தெளிவாகத் தெரிகிறது. சுய சிந்தனை தவிர, தேசத்தின் பொருளாதாரப் பிரச்னைகள் பற்றி அதற்குக் கவலை இல்லை. வேண்டியவர்களுக்குச் சலுகை தருவதிலேயே அதிகாரம் உபயோகிக்கப்படுகிறது என்று டாக்டர் ராம் மனோஹர் லோஹியா கூறியது உண்மை.

ஃஃஃ

ராஷ்டிரபதித் தேர்தல் முடிவு எப்படியாயினும், மக்கள் விரும்புவது பெர்மிட்–லைசென்ஸ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதே. தங்களுக்காகவும் தேசத்துக்காகவும் சுதந்திரமாக உழைத்து உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே அவர்களின் ஆசை. திட்டக் கமிஷனிலுள்ள புள்ளிவிவர நிபுணர்களுக்காக உற்பத்தி செய்வதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதில் அவரவருக்காக உற்பத்தி செய்து கொள்ள வகை செய்ய வேண்டும். தேச உற்பத்தி உயர இதுவே உபாயம். வரிகளைக் குறைத்துச் சேமிப்பை வளக்க வேண்டும். இப்படிச் செய்தால் இரவு முடிந்ததும் பகல் தொடங்குவது போலத் தானாக முதலீடுகளும் தொழிலபிவிருத்தியும் ஏற்படும். தனியாரின் தொழில்களில் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கு இடம் செய்த பின்பே சர்க்கார் துறையில் ஆட்குறைப்பு செய்தல் நலம். இயற்கை விதிகளைப் புரிந்து கொண்டு நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்.

ஃஃஃ

சர்க்காருக்கும் மேம்பட்டது கட்சி என்று காங்கிரஸ் கமிட்டி செய்துள்ள முடிவு எதிர்க்கட்சிகளை மட்டுமின்றிப் பார்லிமெண்டையே அலட்சியம் செய்வதாகும். இது அரசியல் சாஸனத்துக்கும் புறம்பாகும். சர்க்காரின் அங்கத்தினர்கள் சாஸனத்தின் கீழ் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டவர்கள். கட்சி இவ்விதம் பிரமாணம் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே, கட்சியையே அதிகார ஸ்தானமாக்குவது சாஸனத்துக்கு விரோதமாகும்.

மத்திய சர்க்காரின் மீது கட்சியின் ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டும் என்பதும், அதன் மூலம் ராஜ்ய சர்க்கார்களின் மீதும் ஆளுகை பெறலாம் என்பதுமே காங்கிரஸ் கட்சியின் தீர்மானம். இப்போது பார்லிமென்டில் எதிர்க்கட்சிகளில் அமர்ந்துள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து அரசியல் சாஸனத்தை ஏக கட்சி ஏகாதிபத்தியத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று இதயமார வேண்டிக் கொள்கிறேன். ஆண்டவன்பேரில் ஒன்று சேருங்கள், தனிப்பட்ட கட்சி மூர்த்தியில் உள்ள பாசத்தை விட்டு ஒன்று சேருங்கள். தேசத்தைப் பொருளாதார விநாசத்திலிருந்து காப்பாற்றுங்கள்.

எதிர்க்கட்சிகளிடையே உள்ள வேறுபாடுகளைப் பெரிது பண்ணிக் கொண்டிருக்க வேண்டாம். இது வரை ஐக்கிய ஜனநாயக முன்னணியாக முன்னேறியது போலவே இனியும் செய்வதற்கு முயல்வோம். ஆன்ம நாசத்தைத் தரும் இன்றைய சலுகை ஆட்சியை நீக்கி நாட்டுக்கு நல்ல ஆட்சி தரப் பாடுபடுவோம்.

இவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கப் படாவிடில் சுதந்திரக்கட்சி தனிப்படத் தன் வழியே பாடுபட வேண்டியதுதான். தோல்விகளால் தளராமல், சத்தியமே வெல்லும் என்ற நம்பிக்கையுடன் தனது கொள்கை இறுதியில் நிலைக்கத்தான் வேண்டும் என்ற உறுதியுடன் சுதந்திரக்கட்சி தன் பணியைத் தொடர வேண்டும்.

காமகோடியின் கருணைமொழி

தருமமும் சத்தியமுமே வாழ்க்கையின் குறிக்கோள்களாக இருக்கும் நிலையை ஸ்தாபிக்க வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதன் மூலமும், பாரதம் போன்ற இதிகாசங்களைக் கேட்பதன் மூலமும் உள்ளும் புறமும் உள்ள குறைபாடுகளை நீக்கித் தூய்மை பெற வேண்டும். பாமர மக்களைப் பரவசப்படுத்தும் நாட்டுக் கலைகளையும், வழிவழியாக வந்துள்ள கதை சொல்லும் முறைகளையும் பிரபலப்படுத்தி, அவற்றின் மூலம் அறத்தின் வழி நின்று, உண்மையில் வேரூன்றியவர்களாக — நற்பண்பினராக — மக்கள் வாழ்வதற்குத் துணைபுரிய வேண்டிய பொறுப்பு எல்லாவகைப் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் உண்டு.





ஒவ்வொரு துளியிலும் ஊக்கம் துள்ளும்

மற்றெந்த உணவு பானத்தையும்விட அதிக மால்ட் அடங்கியது ஓவல்டின்! மால்ட் என்பது சக்தி தரும், இயற்கையின் ஒப்பற்ற ஊட்டப் பொருள்களில் ஒன்றாகும். 1932 முதல் எல்லா ஒலிம்பிக் ஆட்ட விழாக்களிலும் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு பானமாக ஓவல்டின் விளங்குவதில் வியப்பில்லை.

அதிக மால்ட் தவிர, பால், வைட்டமின்கள், வலிமையூட்டும் இதர சத்துக்கள் யாவும் அடங்கியது ஓவல்டின்.

அதிகத் தெம்புதரும் மால்ட் அடங்கியது ஓவல்டின்

உழைப்பாளிகளுக்கும், வளரும் குழந்தைகளுக்கும் இன்றியமையாத, உன்னதமான உணவுபானம் ஓவல்டின்.

ஒவ்வொரு நாளும் அருந்துங்கள் ஓவல்டின்.

ஒவ்வொரு துளியிலும் ஊக்கத் துள்ளலை அளிப்பது ஓவல்டின்.



ஓவல்டின்

ஓவல்டினைப் பாரதத்தில், ஜகத்ஜித் டிஸ்டிலிங் & அலைடு இண்டஸ்ட்ரீஸ் லிட்., நிறுவனம், லண்டனிலுள்ள ஏ. வாண்டர் லிமிடெடின் லைசென்ஸ் பெற்றுத் தயாரிக்கிறது.

ASP/JDA-9 TAM

ஸ்டாலின் மகள் ஸ்வெட்லானா



டில்லி மக்கள் சபையை இந்தப் பெண் ஸ்வெட்லானா என்ன பாடுபடுத்தி விட்டாள்! டாக்டர் லோஹியாவும் மற்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் இந்திய சர்க்காரை உண்டு இல்லை என்று ஆக்கி விட்டார்கள். வெளிவிவகார மந்திரி திரு சாக்ளா, அக் கேள்விக் கணைகளைத் தாங்கிப் பதிலிறுப்பதற்குள் திக்குமுக்காடிப் போனார்.

தற்சமயம் அமெரிக்காவில் உள்ள ஸ்வெட்லானா ருஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலினின் மகள். ஸ்வெட்லானாவுக்குத் தற்சமயம் நாற்பத்திரண்டு வயதாகிறது. அவளது இளமைப் பருவம் கிரம்ளின் அரண்மனையில் கழிந்தது. தந்தை ஸ்டாலினை எப்பொழுதோ ஒரு நாளைக்கு ஒரு வேளை அதுவும் மாலையில் சாப்பிடும் நேரத்தில்தான் பார்க்க வாய்ப்புக் கிடைக்கும்! அப்பொழுது அவரிடம் காணப்பட்ட மிடுக்கும், கண்டிப்பும் அச்சம் கலந்த பாசத்தை ஸ்வெட்லானாவின் உள்ளத்தில் வளர்த்தன. அத்துடன் உணவில் தந்தையின் விருப்பு வெறுப்புக்களைத் தெரிந்து கொள்ளவும் முடிந்தது. பின்னர், பிற நாட்டுத் தலைவர்கள் வரும்போது விருந்துபசாரம் நடத்துவதிலும் கைதேர்ந்து விளங்கியிருக்கிறாள் இவள்.

ஸ்வெட்லானாவுக்கு ஏழு வயது நிரம்பு முன்னே அவள் தன் தாயை இழந்துவிட்டாள். தாய், ஸ்டாலினின் கொடுமை தாங்காமல் தற்கொலை செய்து கொண்டு விட்டாள் என்று ஒரு வதந்தியும், ஸ்டாலினே அவளைக் கொன்றுவிட்டார் என்ற ஒரு கதையும் வழங்குகின்றன! உண்மை என்னவாயினும் வாழ்க்கைத் தொடக்கத்தின் முக்கியமான கட்டத்தில் ஸ்வெட்லானா தாயன்பையும், பரிவையும் பெற வாய்ப்பில்லாமற் போய் விட்டது.

அவள் தனது இளமையில் ஒரு யூத இளைஞனைக் காதலித்தாள். இதை அறிந்த தந்தை கண்டிப்புச் செய்து தடுத்தார். ஸ்வெட்லானா தான் காதலித்த இளைஞனைத் தான் கல்யாணம் செய்து கொள்வேன் எனப் பிடிவாதம் செய்தாள்! அவர்களுக்கு ஒரு மகனும் பிறந்தான். ஆனால் அந்தக் காதலன் வேறு பெண்களையும் துரத்திச் செல்லவே முறிவு ஏற்பட்டது. பிறகு அவன் என்ன ஆனான் என்பதே தெரியவில்லை.

ஸ்டாலினுக்கு அடுத்து அதிகார பீடத்தில் விளங்கிய ஜோடனூவ் என்பவரின் மகனுக்கு ஸ்வெட்லானா மணம் முடிக்கப் பெற்றாள். திருமணம் வெகு சிறப்பாக ஒரு வாரம் கோலாகல விருந்துகளுடன் வெற்றிகரமாக நடைபெற்றது. ஆனால் வாழ்க்கைதான் படுதோல்வி அடைந்தது. விரைவிலேயே விவாகரத்தில் முடிந்தது.

ஸ்வெட்லானா கல்லூரியில் இலக்கிய பாடம் எடுத்துப் படிக்க விரும்பினாள். அதிலும் அவள் விருப்பம் நிறைவேறவில்லை. ஸ்டாலின் அவளைச் சரித்திரபாட வகுப்பில் சேர்க்கும்படி கலாசாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு விட்டார். அப்படிப்பை 1951ல் முடித்து டாக்டர் பட்டம் பெற்றாள்.

ஸ்வெட்லானாவின் வாழ்க்கை — தந்தையுடன் வாழ்ந்த நாட்களிலும் சரி, கணவன்மாரோடு வாழ்ந்த நாட்களிலும் சரி ஒரு விதமான நிறைவற்ற நிலையில்தான் இருந்தது. தந்தை ஸ்டாலின் 1953ல் இறந்தார். ருஷ்யாவில் அதிகார பீடத்திலிருந்தவர்கள் அனைவரும் மாற்றப்பட்டார்கள். ஸ்வெட்லானாவை மரியாதையுடன் நோக்கியவர்கள் இப்பொழுது அலட்சியமாகப் பார்க்கத் தொடங்கினார்கள்! கிரம்ளின் அரண்மனையை விட்டு, ஸ்வெட்லானா வெளியில் சாதாரண பிரஜை போல் வாழ வேண்டியதாயிற்று.

மாஸ்கோவில் அந்நிய மொழிகள் பிரசுராலயத்தில் மொழிபெயர்ப்பாளராக ஸ்வெட்லானா வேலை செய்ய நேர்ந்தது. அங்குதான் 1964ல் பிரஜேஷ் சிங்கை ஸ்ரீமதி ஸ்வெட்லானா சந்திக்கவும் நட்புக் கொள்ளவும் நேர்ந்தது.

பிரஜேஷ் சிங் ருஷ்யாவின் அந்நிய மொழிகள் பிரசுராலயத்தில் வேலை பார்த்து வந்தார். இவர் இந்திய கம்யூனிஸ்டுகளில் ஒருவர். காங்கிரஸிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சென்றவராம். உத்தரப் பிரதேசத்தில் உள்ள கலகங்கார் என்ற ஒரு சிறு ஊருக்கு ராஜாவாக இருந்தார். தற்சமயம் இந்திய அரசாங்கத்தில் வர்த்தக மந்திரியாகவும், பிரதமர் இந்திரா காந்தியின் பெருநம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்று கருதப்படுகிறவருமான தினேஷ்சிங்கின் மாமா இந்த பிரஜேஷ்!

பிரஜேஷுக்கும், ஸ்வெட்லானாவுக்குமிடையில் பதினேழு ஆண்டு வித்தியாசமிருப்பினும், அவர்கள் மிக அந்நியோந்நியமாகவே வாழ்ந்து வந்தனராம்! அவர்கள் கல்யாணம்

செய்து கொள்ள விரும்பினர். ஆனால் ருஷ்ய அரசாங்கம் ஸ்வெட்லானா 'அரசாங்கச் சொத்து' ஆதலால் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கவில்லை. எனினும் அவர்கள் கணவனும் மனைவியுமாகவே வாழ்ந்தார்கள். 1966ல் பிரஜேஷ் நோய்வாய்ப்பட்டார். ஸ்வெட்லானா அவரை இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல விரும்பினாள். ருஷ்ய அரசாங்கம் அதற்கு அனுமதியளிக்கவில்லை.

சென்ற டிசம்பர் மாதத்தில் பிரஜேஷ் காலமானார். ஸ்வெட்லானா அவர் உடல் எரிக்கப்பட்ட சாம்பலுடன் இந்தியாவுக்கு வந்தாள். கங்கையில் சாம்பலைக் கரைக்கும் நோக்கத்துடன் வந்ததாகச் சொல்லப்படுகிறது. மத நம்பிக்கை இல்லாத கம்யூனிஸ்ட் கணவன்–மனைவிக்கு இந்த நம்பிக்கை எப்படி வந்தது? மத நம்பிக்கை இல்லாத கம்யூனிஸ்ட் அரசாங்கம் எப்படி அனுமதித்தது என்பவையெல்லாம் புரியாத புதிர்கள் !

எனினும், ஸ்வெட்லானா மத உணர்வு நிரம்பியவள் என்பதும், சமய சுதந்திரத்தில் அவளுக்குள்ள ஆசையும் அவள் கம்யூனிஸ்ட் பிடியிலிருந்து விலகி வெளி வந்துவிட்டதற்கு ஒரு காரணம் என்றும் இப்போது தெரிய வருகின்றன. தன் குழந்தைகளைக்கூட ருஷியாவிலேயே விட்டு விட்டு வெளியேறுமளவுக்கு இச் சுதந்திர தாகம் முற்றியிருக்கிறது!

இந்தியாவுக்கு வந்த ஸ்ரீமதி ஸ்வெட்லானா தினேஷ் சிங்கின் மனைவியின் விருந்தினராகத் தினேஷ் சிங்கின் வீட்டில் தங்கினாராம்!

தினேஷ் சிங்குக்கு இவ் விவகாரத்தில் தொடர்பு இல்லை போல் இந்திய அரசாங்கம் நிலைநாட்டப் பார்க்கிறது.

இந்தியாவுக்கு வந்த ஸ்வெட்லானா, இந்தியாவில் தங்கிவிட விருப்பம் தெரிவித்தாள். அதற்கு அனுமதித்தால் ருஷ்ய அரசாங்கம் தவறாக எண்ணிக் கொள்ளும், இந்திய — ருஷ்ய உறவு பாதிக்கப்படலாம் என்று கருதப்பட்டது. ஆகவே, தினேஷ் சிங்கின் மனைவி அவளை மீண்டும் ருஷ்யாவுக்கே திரும்பிப் போகும்படி வற்புறுத்தினாள்.

கலகங்கார் என்பது, பிரதமர் இந்திரா காந்தியின் தொகுதியில் உள்ள ஊர். சென்ற தேர்தலின் போது, பிரசாரத்துக்காக அந்தப் பகுதிக்குப் பிரதமர் இந்திராகாந்தி வந்த போது ஸ்வெட்லானா அவரைச் சந்தித்து, இந்தியாவிலேயே தாம் தங்கிவிட விரும்புவதைப் பற்றித் தெரிவித்தார் என்றும், அது மறுக்கப்பட்டது என்றும் பரவலாக வெளியே பேசப்படுகிறது. இதைப் பற்றிப் பிரதமரைக் கேட்டபோது, ஸ்வெட்லானா தம்மைச் சந்தித்தது வாஸ்தவம்; ஆனால் புகலிடம் கேட்கவில்லை என்று கூறிவிட்டார்.

தினேஷ்சிங்கிடமும் புகலிடம் கேட்கப்படவில்லை என்று இந்திய அரசாங்கம் பார்லிமென்டில் வற்புறுத்திக் கூறியது.

இந்தியாவில் தனக்குப் புகலிடம் இல்லை என்று தெரிந்தவுடன் ஸ்வெட்லானா தில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குச் சென்றாள். தான் ''ஸ்டாலினின் மகள்'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள். அமெரிக்கத் தூதரகத்தினரின் உதவியோடு, தன் தாயின் பெயரான அலுலுயியா என்ற பெயரில் தில்லியிலிருந்து விமான மூலம் இத்தாலிக்குச் சென்று, அங்கிருந்து ஸ்விட்ஜர்லாந்து நாட்டுக்குப் போய்ச் சில வார காலம் அஞ்ஞாதவாசம் செய்துவிட்டுப் பின்னர், அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறாள்.

இந்தியாவை விட்டு, இந்திய அரசாங்கத்துக்குத் தெரியாமலே தப்பிச் சென்றிருக்கிறாள்.

அவள் ஸ்விட்ஜர்லாந்து நாட்டுக்குப் போய்ச் சேர்ந்த போதுதான் தில்லி மக்கள் சபையில் பெரும் பூசல் கிளம்பியது. தில்லி வெளி விவகார காரியாலயம், ஓர் அதிகாரியை ஸ்விட்ஜர்லாந்துக்கு அனுப்பி ஸ்வெட்லானா இந்தியாவுக்கு வர விரும்புகிறாளா என்று கேட்டு வரச் செய்தது. ஸ்வெட்லானா மறுத்து விட்டாள்.

டாக்டர் லோகியா ஸ்விட்ஜர்லாந்திலிருந்த ஸ்வெட்லானாவுடன் தனிப்படத் தொடர்பு கொண்டார். ஸ்வெட்லானா இந்தியாவில் புகலிடம் கேட்டதாகவும், அது மறுக்கப்பட்டது என்றும் அவள் தமக்கு எழுதிய கடிதத்தைப் பத்திரிகைகளில் வெளியிட்டு, இந்திய அரசாங்கத்தைத் தர்மசங்கடமான நிலையில் வைத்திருக்கிறார்.

அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஸ்வெட்லானாவைப் பல பத்திரிகைகள் முற்றுகையிட்டு, லட்சக்கணக்கில் டாலர்கள் வழங்கி, அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதுமாறு தூண்டி விடுகின்றன.

இதனிடையில் ஒரு ருசிகரமான தகவல் வெளியாகியுள்ளது. ஸ்வெட்லானா ஏற்கனவே ருஷ்யாவில் வேலையிலிருந்த போதே, ரகசியமாகத் தனது வாழ்க்கை நினைவுகளைக் குறித்து வந்தாள் என்றும், நூலை எழுதி முடித்ததும் அதனை வெளியிடுவதற்காக வேண்டியே இந்தியா வர விரும்பினாள் என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

இச்செய்தி அமெரிக்காவிலிருந்து வருவதால், கம்யூனிஸச் சார்புள்ள பத்திரிகைகள் இது முழுப் பொய் என்று கூறுகின்றன.

இளமையிலிருந்து, இலக்கியத்தில் ஆர்வம் மிக்கவளாக ஸ்வெட்லானா இருந்ததால், இப்படி ஒரு சுயசரிதையை அவள் எழுதி வைத்திருக்கலாம்; அது சாத்தியமே என்று நம்பத் தோன்றுகிறது.

அதற்கு ஏற்றாற்போல், அமெரிக்காவில் அவள் கூறியது எல்லாக் கட்சி மக்களும் ஒப்புக் கொள்ளக்கூடிய உள்ளத்தைத் தொடும்வாக்காக அமைந்துள்ளது. அதாவது:

''என்னைப் பொறுத்தவரை உலகில் முதலாளிகள் என்றோ கம்யூனிஸ்டுகள் என்றோ கிடையாது. உலகில் நல்லவர்களும் இருக்கிறார்கள்; கெட்டவர்களும் இருக்கிறார்கள். யோக்கியர்களும் இருக்கிறார்கள்; அயோக்கியர்களும் இருக்கிறார்கள். மக்கள் எந்த நாட்டில் எப்பகுதியில் வாழ்ந்தாலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். ஒரே மாதிரியான ஆசைகள், அபிலாஷைகள், தார்மிக உணர்ச்சிகள் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.''

—எஸ். வி. எஸ்.

கென்னடி அவர்களுக்கு எழுந்த நினைவுச் சின்னம் போல இருபதாம் நூற்றாண்டில் வேறு எந்த நபருக்குமே எழுப்பப்படவில்லை என்று சொன்னால் 'அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை'. இம்மாதம் இருபத்தொன்பதாம் தேதி அவருடைய பிறந்தநாள்.

நெஞ்சிருக்கும் வரை

அ. இராமதுரை

ஜான் கென்னடிக்கு முதன் முதலில் எழுப்பப்பட்ட நினைவுச் சின்னம் ''அமர ஜோதி'' யாகும். ஆர்லிங்டன் கல்லறையில் அவரது புகழுடல் புதைக்கப்பட்ட நாளிலிருந்து தினமும் அது எரிந்து கொண்டே இருக்கிறது. அதைத் தொடர்ந்து அமெரிக்க அரசாங்கம் அமெரிக்காவின் ''ராக்கெட்'' நகரான பிளாரிடா மாநிலத்தில் உள்ள கானவெரால் முனையைக் கென்னடி முனையாக மாற்றியது. நியூயார்க் பெருநகரில் உள்ள ஐடில் வைல்ட் சர்வதேச விமான நிலையம் ஜான் பிட்ஜெரால்ட் கென்னடி சர்வதேச விமான நிலையம் எனப் பெயர் பெற்றது.



கென்னடி மறைந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு அமெரிக்க சட்டசபை வாஷிங்டன் நகரில் உருவாக்கப்படவிருக்கும் தேசிய கலாசாரக் கழகத்தை ஜான் கென்னடி கலாசாரக் கழகமாக மாற்றியது. ஓர் இசையரங்கம், ஒரு நாடக அரங்கம், ஒரு நடன அரங்கம் முதலியவைகளைக் கொண்ட அக்கலாசாரக் கழகத்தை உருவாக்க அமெரிக்க அரசாங்கம் பொருளுதவி செய்ய இசைந்தது. கென்னடி வாழ்ந்த நகரமான மசாசுஸெட்ஸ் நகரில் உள்ள கேம்பிரிட்ஜ் கல்லூரியில் அவரது நினைவால் ஜான் கென்னடி நூல்நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஜான் கென்னடியைப் பற்றிய புகைப் படங்கள், கட்டுரைகள், திரைப் படங்கள் முதலியவற்றைக் கொண்டது இந்த நூலகம். அமெரிக்க அரசாங்கம் கோடிக்கணக்கான அமெரிக்கர்களின் விருப்பத்துக்கு இணங்க கென்னடியின் நினைவாகத் தபால் தலைகளையும், அவரது உருவம் பொறிக்கப்பட்ட ஐம்பது செண்ட் நாணயங்களையும் வெளியிட்டது. இவை மட்டுமின்றி, பள்ளிக் கூடங்கள், மருத்துவ மனைகள், நூலகங்கள், சாலைகள், பொழுது போக்குமிடங்கள், கலை அரங்கங்கள் முதலியவற்றுக்கும் கென்னடியின் பெயர் வைக்கப்பட்டுள்ளது. சான்றாக, ஒஹையோ நதி மீது கட்டப்பட்ட பாலத்தையும் நியூஜெர்ஸி நகரில் உள்ள கலைக் கழகம் ஒன்றையும், ஹவாயி பல்கலைக் கழகத்தில் உள்ள நாடக அரங்கம் ஒன்றையும் குறிப்பிடலாம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டும்தான் அவருக்கு இவ்வளவு நினைவுச் சின்னங்கள் என்று நினைக்க வேண்டாம். இங்கிலாந்தில் ரன்னி மேட் என்ற இடத்தில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் கென்னடிக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டு வருகிறது. இங்கிலாந்து அரசாங்கம் பன்னிரண்டு கல்லூரி மாணவர்களுக்குக் கென்னடியின் நினைவுக்காக உபகாரச் சம்பளம் வழங்கியுள்ளது. அதைப் பெறும் மாணவர்கள் கென்னடியின் பிறப்பிடமான மசாசுஸெட்ஸ் நகரில் உள்ள ஹார்வார்ட் பல்கலைக் கழகம், ராட்கிளிப் கல்லூரி அல்லது உலகப் புகழ் பெற்ற எம். ஐ. டி. தொழில் கல்வி நிலையத்தில் ஓராண்டு கல்வி பெறலாம்.

1. கென்னடியின் நினைவாக அமெரிக்கா வெளியிட்டுள்ள அரை டாலர் நாணயத்தின் இருவித தோற்றங்கள்.

2. கேப் கென்னடி.



1963ம் ஆண்டில் ஜூன் மாதம் கென்னடி மேற்கு ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் பெருநகருக்கு விஜயம் செய்தார். அப்போது அவர் கூறினார்: ''நானும் ஒரு பெர்லின் நகரக் குடிமகன்'' என்று. அந்தப் புகழ்பெற்ற சொற்களைத் தாங்கிய வெண்கலப் பதக்கம் ஒன்று பெர்லின் நகராட்சி மன்றத்தில் இடம் பெற்றுள்ளது. அந்த நகராட்சி மன்றத்தின் எதிரே அமைந்துள்ள ஒரு சதுக்கம் இன்று கென்னடியின் பெயரைத் தாங்கி நிற்கிறது.

இத்தாலி நாட்டில் உள்ள ராவென்னு, விமாலாமேறு என்ற இரு நகரங்களில் உள்ள சதுக்கங்கள் அல்ஜியர்ஸ், சைகோன் ஆகிய நகரங்களில் உள்ள சதுக்கங்கள், ஜாக்ரேப், மசூலிப்பட்டணம், டெஹ்ரான், லிபோலியா ஆகிய நகரங்களில் உள்ள வீதிகள் ஆகியவைகளும் இன்று கென்னடியின் பெயரில் உள்ளன. சாதாரணமாக ஒரு வீதியின் பெயரை மாற்றுவதற்கு ஐந்தாண்டுகள் யோசனை செய்யும் பாரிஸ் நகராட்சி மன்றம் ஒரே நாளில் ஒரு வீதிக்குக் கென்னடியின் பெயரை வைக்க ஒப்புக்கொண்டது! ''ஜோன் ஆஃப் ஆர்க்'' பிரெஞ்சு மக்களின் மதிப்பில் எவ்வளவு உயர்ந்தவள் என்பது சரித்திரம் உணர்ந்த அனைவருக்கும் தெரியும். அப்படியிருக்க பிரான்ஸ் நாட்டில் உள்ள பிரதான வீதியான ஜோன் ஆஃப் ஆர்க் வீதி இன்று ஜான் கென்னடி வீதியாக மாற்றப் பட்டுள்ளது என்றால் அதை என்னென்பது?

ஜப்பானின் மாபெரும் நகரான டோக்கியோவில் உள்ள ஹனேடா விமான தளத்திலும் மெக்ஸிகோ நகரில் உள்ள சாயினால் விமான தளத்திலும் கென்னடி உருவம் சிலை வடிவில்உள்ளது.

கென்னடி தமது ஆட்சிக் காலத்தில் தென் அமெரிக்க நாடுகளின் முன்னேற்றத்திற்காக 'வளர்ச்சிக்கான கூட்டணி' (Alliance for Progress) என்ற ஒரு திட்டத்தை வகுத்து அந்த நாடுகள் முன்னேற்றமடையப் பொருளாதார உதவி அளித்தார். அந்த நன்றியை மறவாமல் சிலி நாட்டில் உள்ள ஹுவாலியான்டா நிலமீட்புத் திட்டம், வெனிசூலா நகரில் உள்ள நகர் குடியிருப்புத் திட்டம், பிரேஸில் நாட்டில் சா பாலோ நகரில் உள்ள குடியிருப்புத் திட்டம், பொலிவியா நாட்டில் உள்ள விமான நிலையம் ஆகியவற்றுக்குக் கென்னடியின் பெயரையே அந்த நாடுகள் சூட்டின.

பேறு நண்பர்கள் சங்கம், புத்தகக் கடை, மக்கடை போன்றவை முதல் அமெரிக்க ராக்கெட் தளம் வரை ஜான் பிட்ஜெரால்ட் கென்னடியின் நினைவாக அவர் பெயரைத் தாங்கி நிற்பதைக் கண்டு அவரது சகோதரர் ராபர்ட் கென்னடி கூறினார்: ''கென்னடியின் உருவம் சிலை வடிவிலோ, வெள்ளி நாணயத்திலோ பெயர்ப் பலகைகளிலோ இன்று இருக்கும்; நாளை இருக்காது. ஆனால் மனித சமுதாயத்தின் இதயங்களிலே அவ்வுருவம் நெஞ்சிருக்கும்வரை நிலைத்திருக்கும்.''




அமுல் அளிக்கும் புதுமை!


அமுல்ஸ்ப்ரே

புரதச் சத்துச் செறிந்த குழந்தை உணவு



உடல் வளர்ச்சிக்கான
புரதம் இதைவிட
அதிகமாக அடங்கிய
பாலுணவு வேறில்லை!





கரைய 20 விநாடிகள் கூட ஆகாது . . . ஜீரணிக்க எளிது.

இரு மடங்கு எடை ஏறும்படி, முதல் இரு ஆண்டுகளில் உங்கள் குழந்தை அதிவேகமாக வளரும்; அதற்கு பெருமளவிலும் ஆதாரம்: புரதசத்து. உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதத்தை உங்கள் குழந்தைக்கு அளிக்கிறது அமுல்ஸ்ப்ரே.

வைட்டமின்கள், வேறு பல நலன்கள் எல்லாமடங்கியது.

அவசியமான வைட்டமின்களும் அடங்கப் பெற்றது அமுல்ஸ்ப்ரே. கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்து, உலோக தாதுக்கள், குழந்தையின் வளர்ச்சிக்குரிய இதர சத்துப் பொருள்கள் யாவும் உகந்த விகிதங்களிலே பொருந்தப் பெற்றது அமுல்ஸ்ப்ரே. நியாஸின், சோடியம் ஐயோடைட், ஃபாலிக் அமிலம் ஆகியவையும் இயல்பான வடிவிலே இடம் பெற்றுள்ளன.

ஜீரணிக்க எளிது.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் கையாளப்படும் ஸ்ப்ரே-ட்ரை செய்முறை மூலம் ஆக்கம் பெறுகிறது அமுல்ஸ்ப்ரே. உயரிய ஜீரணத் தன்மையை அளிக்கிறது அம்மேலான முறை; பாலின் புரதச் செறிப்பையும் பண்பையும் மேம்படப் பாதுகாக்கிறது.

அற்புதமாகக் கரையும்:

விழுது குழைக்கத் தேவையில்லை. முழு அளவு வெந்நீரிலே அமுல்ஸ்ப்ரே சேர்த்து, நன்கு கலக்கினால் 20 விநாடிகள் ஆவதற்குள் தயார். இப்புள் துகள்கள் அடைந்துக் கொள்ளாது.



உங்கள் குழந்தைக்கு உகந்தது அமுல்ஸ்ப்ரே!

அமுல்ஸ்ப்ரே 500 கிராம டப்பாக்களில் வருகிறது. (1 பவுண்டுக்கு 45 கிராம அதிகம்).

ASP/AS-1167-TM

ஏகபோக விநியோகஸ்தர்கள்: வோல்டாஸ் லிமிடெட்.
கெய்ரா டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேடிவ் மில்க் ப்ரொட்யூசர்ஸ் யூனியன் லிமிடெட், ஆனந்த்.
சென்னை, கேரள, ஆந்திர மாநிலங்களில் விநியோகிக்கப்படுகிறது



அஃப்ஸானா

கதை என்று பொருள் தரும் சொல் அஃப்ஸானா. பொருளுக்கேற்பக் கதையாகவே முடிந்து விடுகிறது, மனத்தில் நில்லாமல். இந்தப் படத்தில் எந்த நிகழ்ச்சியும் நம்பித்தான் ஆகவேண்டும் என்று நம்மைக் கட்டாயப் படுத்தவில்லை. ஆனால் படம் எடுத்திருக்கும் முறை மட்டும் ஒருமுறை பார்த்துத் தான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தப் படுத்துகிறது. அதே நேரத்தில் ஒரு சில இடங்களில் கண்ணுக்கு ஓய்வும் தருகிறது. எனவே, அலுக்காமல் படத்தைப் பார்க்கலாம்.

கார் என்றால் பிரேக் உண்டு. பிரேக் என்றால் கழன்றலாம், கழன்றினால் விபத்து உண்டு. அந்த விபத்து கதை வளர உதவும் என்பதைக் கற்பனைத் திறம் வாய்ந்த (?) - ஒன்று இரண்டா? - விமர்சகருக்குத் தெரிந்த வரையில் சமீபத்தில் மூன்று ஹிந்திப் படத்தயாரிப்பாளர்கள் கண்டு கொண்டிருக்கிறார்கள். அதோடு அதைப் பயன்படுத்தி வெற்றி காணவும் முயன்றிருக்கிறார்கள். இந்தத் திரையுலக 'ஃப்ளு' ஜுரம் 'அஃப்ஸானா'வையும் பிடித்திருக்கிறது. இல்லாவிட்டால் ஒருவருக்குப்பின் ஒருவராகத் திரைப்பட டைரக்டர்கள் 'கார் பிரேக்'கில் கைவைப்பானேன்?

இருந்தாலும் பிற்பகுதி - கதை முடியும் பொழுது கூடச் சிறந்த நாடகமாக நிகழ்கிறது. படப்பிடிப்பும் வண்ணமும் பார்ப்பவர்களைப் பரவசப் படுத்துகின்றன.

பத்மினி சிரமப் படாமல் உணர்ச்சிகளுக்கு ஒரு சிறிதும் இடம் கொடாமல் நடிக்கிறாள் என்றால், பிரதீப் குமாரும் நடிப்பில் தாம் அவளுக்குச் சோடையில்லை என்பதை நிரூபிக்கிறார். கோபாலாக வரும் அசோக் குமாருக்குப் படத்தில் நல்ல வேலை இருக்கிறது. ஜீவனின் நடிப்பில் உயிர் இருக்கிறது. சொல்லப் போனால் உயிரை விட்டே நடித்திருக்கிறார். ஜீவனுக்கேற்ற வில்லனாக வரும் அன்வரும் தமது முக பாவத்தில் அலட்சியத்தைக் காட்டி அநாயாசமாக நடிக்கிறார்!

'இப்படியும் நடக்குமா, அப்படியும் இருக்குமா!' என்று கேட்காமல் படத்தைப் பார்த்தால் கலைப்படத்துக்கும் ஒரு சுவை இருப்பதைக் கண்டு களிக்கலாம்.



தோ பதன்

பொதுநல வாழ்வில் உணவுப் பஞ்சத்தைப் போலத் திரையுலகத்திலே கதைப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்பதற்கு, 'இரு உடல்' என்னும் பொருள் தரும் இந்த ஹிந்திப் படமும் ஒரு சான்றாக நிற்கிறது. கதையின் முற்பகுதி 'சகாயி' என்னும் படக் கதையை ஒட்டியே செல்கிறது. பிற்பகுதி தஞ்சையிலிருந்து பாதை பிரியும் கும்பகோணம், நாகை வண்டிகளென மாறுகிறது. இருந்தாலும் விபத்துக்குக் கார் பிரேக்கையே கழற்றி விடுகிறார்கள் இரு படத் தயாரிப்பாளர்களும், கற்பனைப் பஞ்சத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக.

நடிக — நடிகைகள் மட்டும் வேறானவர்களே ஒழிய உணர்ச்சியைப் பிரதிபலிப்பதனைத்தும் ஒருவிதமாகத்தானே இருக்க முடியும்? ஆயினும் ஒரு நல்ல காரியம். ஆஷா பாரேக், சிம்மி, மனோஜ்குமார், பிரான் — இவர்கள் நடிக்கும் இந்தப் படத்தில் விரசக் காட்சிகள் குறைவு. குத்துச் சண்டைகள் கிடையாது. இரட்டைப் பாடல்கள் கிடையாது. வில்லன் நல்லவனாக இருக்கிறான். புரட்சிகரமான திருப்பமோ என்று எண்ணும் வேளையில் எவ்விதப் புரட்சியுமின்றித் திரைப்படம் புரட்சிகரமாக முடிந்து விடுகிறது. சோக முடிவான இப் படத்தில் லதா — முகம்மது ரஃபியின் உருக்கமான பாடல்கள் ஒன்றிரண்டு உள்ளத்தைத் தொடுகின்றன. வசனங்கள் சில உணர்ச்சியோடு அமைந்திருக்கின்றன.

வண்ணக் காட்சிகளுக்கு ஜம்மு — காஷ்மீர் இருக்கவே இருக்கிறது. படம் பார்க்கிறவர்கள் இருக்கவே இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில்.

"அழகு என்பது நல்ல ரக ஊதுவத்தியின் நறுமணம் போல் பரவ வேண்டும். ஆனால் அழகுப் போட்டிகளில் அழகு மீனைக் வறுக்கும் நெடிமாதிரி வீசுகிறது."

— ஒரு கல்லூரி மாணவி.







அழகும் புகழும்



அழகு என்ற பதத்துக்குச் சரியான பொருள் என்ன?

ஒருவர் 'ஆஹா' என்று பார்த்து வியக்கும் அழகு பிம்பத்தை, 'ஐயோ! கன்றாவி' என்று வேறொருவர் அலட்சியப்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அழகின் தன்மை அது! இதை நன்கு தெரிந்துகொள்ள, சமீபத்தில் பம்பாய் 'ஃபெமினா' பத்திரிகையும், அழகு சாதனங்கள் தயாரிப்பதில் பிரபலமடைந்திருக்கும், ஜே. கே. ஹெலன் கர்ட்டிஸ் ஸ்தாபனமும் கூட்டாக நடத்திய அழகிகள் போட்டி உதவியது.

'மிஸ் இந்தியா'வைத் தேர்ந்தெடுக்கும் வகையில் பூர்வாங்கமாக ஏழு நகரங்களில் பிராந்தியவாரியாக அழகிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்தப் பிராந்தியப் பரிசு பெற்றவர்களிலிருந்துதான் 'மிஸ் இந்தியா' பொறுக்கப்பட வேண்டும். இந்தப் பட்டத்தைப் பெறுபவருக்கு அமெரிக்க நாட்டில் நடக்கும் உலக அழகிப் போட்டி


யில் கலந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது! அழகின் வெற்றி ஒவ்வொரு கட்டத்திலும் புகழைக் கொடுப்பதோடு அல்லாமல் பொருளையும், பரிசுகளையும் கொடுக்கிறதே! பிராந்திய அழகிக்கு, ஐந்நூறு ரூபாய் பரிசு என்றால் தேசிய அழகிக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு! உலக அழகிக்கு எவ்வளவு தெரியுமா? ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம்!

அழகிய யுவதிகள் ஆயிரக் கணக்கில் முண்டியடித்துக் கொண்டு வந்து முற்றுகை விடுவார்கள் என்றுதான் நினைக்கத் தோன்றும்! அது தான் இல்லை. மொத்தம் இருபத்தி எட்டே பேர்கள். இவர்களில் சரி பாதி காலையில் நடந்த பூர்வாங்கப் பரிசீலனையில் ஒதுக்கப்படவே, அசல் போட்டிக்குப் பதினான்கு பேர்கள்தான் அனுமதிக்கப் பட்டார்கள். அப்போதே அவர்கள் ஒவ்வொருவரும், தாங்கள் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதாகவே நினைத்துக் கொண்டார்களோ, என்னவோ?



போட்டியில் கலந்து கொண்ட நவநாகரிக நங்கைகளையும் போட்டிக்கு வந்த விசேஷ அழைப்பாளர்களையும், ஆடை அலங்கார அணிவகுப்பையும் படங்களில் காணலாம்.





ஸஃபையர் தியேட்டர் விசேஷ அழைப்பாளர்களால் நிரம்பி வழிகிறது. அழைப்பாளர்களிலேயே பெரும்பாலோர் போட்டியில் கலந்து கொள்பவர்கள் போல் அலங்காரம் செய்து கொண்டிருக்கிறார்கள். நீதிபதிகள் (ஓர் அசல் உயர்நீதி மன்ற நீதிபதிஉள்பட) அரங்கத்துக்கு எதிராக நிறைய இடைவெளி விட்டு உட்கார்ந்திருக்கிறார்கள். இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதி பெற்ற பதினாலு யுவதிகளும் (பத்தொன்பது வயதிலிருந்து இருபத்தி ஏழு வயதுக்குள்ளும், கல்யாணமாகாமலும் இருக்க வேண்டும் என்பது நிபந்தனைகள்) தங்களுக்கு அளிக்கப்பட்ட நம்பர் அட்டையைக் கையில் தாங்கி ஒவ்வொருவராக அரங்கத்திலிருந்து பிரத்தியேகமாகப் போடப்பட்டிருக்கும் பாதை வழியாக நீதிபதிகளை நோக்கி நடந்து வந்து அவர்களைத் தாண்டி நடக்கிறார்கள்.

இந்தப் பதினான்கு பேர்களில் 'பதினொரு பேர் தலைக்கு விதம் விதமான கொண்டை யிட்டிருக்கிறார்கள். சென்னை நகர் போலீஸ் தொப்பி, வெளியூர் போலீஸ் தொப்பி, மதுரைக் கோபுரம், கொத்தவால்சாவடிக் கூடை, 'பௌவர் ஹாட்', தேன்கூடு முதலியவற்றையெல்லாம் நினைவூட்டும் கொண்டைகள்! இரண்டு பேருக்கு பாப் செய்த தலை! ஒரே நபர் மாத்திரம் அசல் தென்னிந்தியப் பாணியில் பின்னல், பூச்சரத்துடன் காட்சி அளிக்கிறார்! இவர்களில் சிலர் ஆடை ஆபரணங்

களைக் கடைகளில் வாங்கி மாட்டிக் கொண்டிருப்பது போல, ஒருவித உயிரற்ற போலிச் சிரிப்பையும் ஆபரண மாக உதடுகளில் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

என்ன காரணங்களினாலோ, இந்தப் பதினொன்று பேர்களில் நால்வர் நிராகரிக்கப்படு கிறார்கள். இரண்டாவது கட்டப் 'பரிசீலனைக்குப் பத்துப் பேர்கள் நிற்கிறார்கள்.

இந்தத் தடவையும் முன் போலவே, அரங்கத்திலிருந்து ஒவ்வொருவராக நம்பர் அட்டைகளைப் பிடித்துக் கொண்டு நடந்து வருகி றார்கள். இந்தக் கட்டத்தில் மேலும் நான்கு பேர்கள் நிராகரிக்கப்பட்டு, கடைசிச் சோதனைக்கு ஆறு பேர் மிஞ்சு கிறார்கள்!

இதில் என்ன ஆச்சரியம் தெரியுமோ? முதல் கட்டத் திலேயே விடுபட்டிருக்கலாம் என்று நாம் நினைக்கும் ஒரு பூனைக்குட்டி அழகியோ, கோழிக் குஞ்சு அழகியோ, கடைசிச் சோதனையிலும் இடம் பெறுகிறார்கள். இந்தப் பெண் கடைசி வரை ஒருகை பார்க்கலாம் என்று நாம் நினைக்கிறோம். அவர் இரண் டாவது கட்டத்தில் ஒதுக்கப் படுகிறார். தென்னிந்தியப் பாணியைத் தெள்ளத் தெளி யக்' கடைப்பிடித்த குமாரி ஸ்டெல்லா துரைசாமிக்கு இந்தக் கதி நேர்ந்தது! கொண்டையர் குழாம் நடுவில் அவர் பின்னல் பின்தங்கி விட்டது.



தென்னிந்தியப் பாணியில்
குமாரி ஸ்டெல்லா துரைசாமி.

கடைசி ஆறு பேரும் மீண்டும் அரங்கத்தி லிருந்து நடை பழகுகிறார்கள். நீதிபதிகள் தங்கள் தீர்ப்பை அளிக்கிறார்கள். தீர்ப்பு அறிவிக்கப்படுகிறது. முதலில் இரண்டாவது பரிசைப் பெறும் இருவர் பெயர்களை அறிவிக் கிறார்கள். ஜெனிபர் ஸ்டோரி என்னும் ஆங்கிலோ இந்திய யுவதியும், ராணி ஆறுமுகம் என்னும் தமிழ்க் குமரியும் கர கோஷத்துக்கிடையே வந்து நிற்கிறார்கள்.

'என்ன! இந்தப் பெண்ணுக்கு இரண் டாவது பரிசுதானா?' என்று பலர் அரங்கத்தில் பெருமூச்சுவிடும் நேரத்தில், உள்ளே காத் திருக்கும் நால்வர் இதயங்களும் படபடக் கின்றன! 'மிஸ் மதராஸ்' பட்டம் தன்னை விட்டு விட்டு மற்ற மூவரில் யாரையோ துரத்திக் கொண்டு ஓடுகிறதோ என்று ஒவ் வொருவரும் துடிக்கிறார்கள்! முதல் பரிசு பெற்றுப் பட்டம் பெறப் போகும் யுவதி யின் பெயரும் அறிவிக்கப்படுகிறது!

ஆண்டனெட் ரூசா என்னும் ஆங்கிலோ இந்திய அழகி ஒய்யாரமாக நடந்து வந்து இரண்டாவது பரிசு பெற்ற இருவருக்கும் இடையே நிற்கிறாள். சென்ற ஆண்டு இதே முதல் பரிசைப் பெற்ற பெண்மணி இப்போது ரூசாவின் தலையில் பரிசு பெற்றதற்கு அடையாளமான கிரீடத்தைச் சூட்டுகிறாள். காமிரா விளக்குகள் பல கோணங்களிலிருந்தும் பளிச் சிடுகின்றன. மூன்று பேருக் கும் பரிசுகள் வழங்கப்படு கின்றன!

ஆண்டனெட் ரூசா, சென்னை வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் சுருக்கெழுத்துக் குமாஸ்தா! விழுப்புரத்தைச் சேர்ந்தவர்! 'மிஸ் இந்தியா' பட்டமும் தனக்கே கிடைக்க லாம் என்று நம்புகிறார்!

இரண்டாவது பரிசைப் பெற்ற குமாரி ராணி ஆறு முகம் மதுரையைச் சேர்ந்த வர். சென்னைக் கல்லூரி ஒன்றில் மாணவி. இதற்கு முன் இரண்டு தடவைகளில் இதே போட்டியில் இரண் டாவது பரிசைப் பெற்றவ ராம்! இந்தத் தடவையும் மரபை விடாமல் அதைப் பெற்று 'ஹாட் டிரிக்' அடித்து விட்டார்!

இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்கள், ஏதோ சொல்லி வைத்தாற் போல் ஒரேவித நோக்கத் தையே வெளியிடுகிறார்கள்! உடலை வனப்புடன் வைத்துக் கொள்ளத் தோன்றுகிறதாம்! இந்த முயற்சி ஆரோக்கியத் துக்கும் அடிகோலுகிறதாம்! வாழ்க்கை யில் முன்னேற்றத்துக்கு உதவுகிறதாம்! வாழ்க்கையில் முன்னேற்றம் என்னும்போது பல விளம்பரங்களுக்கு மாடல்களாக மாறிப் புகைப்படத் தேவிகளாகத் தோன்றுவதை மாத்திரம் மனத்தில் கொண்டு அவர்கள் பேசியிருக்க மாட்டார்கள் என்று நம்புவோம்.

இந்தப் போட்டியின் மூன்று கட்டங்களுக் கும் இடையே கிடைத்த இரண்டு இடைவெளி அவகாசத்தில், ஃபெமினா நிறுவனத்தார், ஆடை அலங்கார அணிவகுப்பு ஒன்றை நடத்தினார்கள். இதற்காகவே பம்பாயி லிருந்து வந்திருந்த ஆறு யுவதிகள், வெவ் வேறு நெசவாலைகளின் விசேஷ ஆடைகளை அணிந்து, அரங்கத்தில் உலாவிப் பலவிதத் துணிகளைப் பிரபலப்படுத்தினார்கள். ஒரு யுவதி ஆண் உடையில் தோன்றி ஆங்கில சினிமா நடிகர் ஸ்டுவர்ட் கிரான்ஜரை நினைவூட்டினார். மற்றொரு பெண்மணி நாம் கல்லூரியில் படித்த ஷேக்ஸ்பியரின் 'லேடி. மாக்பெத்தை' ஞாபகப்படுத்தினார். ஒரே ஒரு அலங்காரம்தான் — ஓரளவுக்குச் சென்னைக்குப் புதிதாக இருந்ததால், ரசிக்கக் கூடியதாக இல்லை. அதற்காக எல்லோரும் கண்களை மூடி விட்டார்கள் என்று சொல்வதற்கும் இல்லை! அதுதான் தொண்ணூறு சதவிகிதம் உடலை மறைக்காத 'பிக்கினி' நீச்சலுடை!

"அழகு என்பது தென்றலைப் போல் இதமாக இருக்க வேண்டும். நல்ல ரக ஊது வத்தியின் நறுமணம் போல் பரவ வேண்டும்! ஆனால் இந்த மாதிரிப் போட்டிகளில் அழகு என்னவோ மிளகாய் வறுக்கும் நெடி மாதிரி வீசுகிறது! 'நான் அழகு, நான் அழகு' என்று தம்பட்டமடிக்கும் உணர்ச்சி தோன்றும் போதே அந்த அழகின் மதிப்பு வீழ்ந்து விடுகிறது! போட்டி என்று பங்கெடுத்துக் கொண்டால், இந்த உணர்ச்சி எப்படியும் தோன்றி விடும்" என்று இந்த வகைப் போட்டிகளில் கலந்து கொள்ளாத ஒரு கல்லூரி மாணவி கூறியபோது சற்றுப் பெருமிதமாகவே இருந்தது. அந்த யுவதி உண்மையிலேயே நல்ல அழகி!

"எனக்குத் தெரியாமற் போயிற்று! தெரிந்திருந்தால் நானும் கலந்து கொண்டிருப்பேன்! முதல் பரிசும் பெற்றிருப்பேன். 'நான் அழகி, நான் அழகி' என்று நினைத்துக் கொண்டிருந்தால் போதுமா? அதை உணர்ந்து நாலு பேர்கள் பாராட்டும்போது தானே நமக்குப் பெருமையாக இருக்கிறது! டென்னிஸ் கிருஷ்ணன் அவர் வீட்டுக் காம்பௌண்டுக்குள்ளேயே ஆடிக் கொண்டிருந்திருந்தால் இப்படி உலகப் புகழ் அவருக்குக் கிடைத்திருக்குமா? ஆகையால் இந்த வகை வாய்ப்புக்களைப் பெண்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று கூறினார் மற்றொரு குமாரி. இவர் தனியார் ஸ்தாபனம் ஒன்றில் அலுவல் பார்ப்பவர்.

அழகுப் போட்டி நடந்ததற்கு மறு நாள் திரு நாகேஷ் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் இந்த அழகுப் போட்டிகளைப் பற்றி அபிப்பிராயம் கேட்டபோது சொன்னார்:

" இந்த மாதிரிப் போட்டிகளிலே நம்முடைய யுவதிகள் கலந்து கொள்ள முன் வர்றபோது அவர்களுக்கு 'அறுபது வயதுக் காரர்களுக்கான உணர்ச்சியும் தைரியமும் வந்து விடுகின்றன. இதனாலே, போட்டியிலே கலந்துகொள்ற ஒவ்வொருத்தருக்கும் அறுபது வயது என்று அடிப்படையாக வைத்துக்கொண்டு, அவர்களுடைய ஆடை அலங்கார வகை ஒவ்வொன்றுக்கும் மூன்று மூன்று வயதைக் குறைத்துக் கொண்டே வரவேண்டும்! அப்புறம் கணக்கில் கிடைக்கும் விடைக்குத் தகுந்த பரிசைக் கொடுக்க வேண்டும்! சில பேருக்குச் சைபீரியா சீதோஷ்ணம் மாதிரி வயசு சைபருக்குக் கீழ் மைனஸாகக்கூடப் போயிடும்! இன்னொரு சங்கடம்! சில பேர் ஒரு டேபிள் கிளாத்துக்கு நாடா வைத்துத் தைத்து அதை மாட்டிக் கொண்டு வந்து நிற்பார்கள். அவர்கள் வயசு ஐம்பதிலேயே நிற்கும்! அழகின்னு எப்படி எடுத்துக்கறது! வேண்டாம், ஸ்வாமி! ஆளை விடும்! இரண்டு பேர் சந்தோஷப்பட்டா இருபது பேர் வருத்தப்படுவா! போட்டின்னு அவ்வளவுதான்!"

அழகும் சதமல்ல! புகழும் சதமல்ல! தெரியும்! ஆனாலும் உலகத்தில் இதன் மதிப்புக் குறைந்தா விடுகிறது! —**கோமதி சுவாமிநாதன்**

இந்தத் தம்பதியர் யார்?

படத்தில் இடது கோடியில் டாக்டர் ராதாகிருஷ்ணனைக் காண்கிறீர்கள். அவர் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் இருக்கையில் இத்தம்பதியும் பிரிட்டனில் உயர் கல்வி பெற்றனர்.

இப்பொழுது ஒரு கட்சியின் தலைமைப் பதவியைப் பெற்றுள்ளார் கணவர். இவர் யாரென்று உங்களால் சொல்ல முடிகிறதா?

தெரியவில்லையென்றால் 42-ம் பக்கம் பார்த்தால் உங்களுக்கு விளக்கம் கிடைத்துவிடும்.



பறக்கும் பூவை

வான வீதியில் விமானத்தில் பறக்கும்
குமுதினிக்குத்தான் எத்தனை
சுவைமிகுந்த அனுபவங்கள்!
அவற்றில் ஒரு சில:

"யுவர் அட்டென்ஷன் பிளீஸ்! பம்பாய்க்குச் செல்லும் விமானம் புறப்படத் தயாராக நிற்கிறது. பயணிகளே விமானத்துக்குச் செல்லுமாறு கோருகிறோம்."

அறிவிப்பைத் தொடர்ந்து விமானத்தின் நுழைவாயிலுக்குச் சென்றால், கூப்பிய கரங்களுடன் ஒரு பதுமை நிற்கிறது; 'நமஸ்தே' சொல்லி வரவேற்கிறது. முகத்தில் மாறாத முறுவல் இழையோடி நிற்பதைக் காணும் பொழுது அப்ஸரை மாதோ எனத் திகைக்க வைக்கிறது.

பயணிகள் தங்கள் தங்கள் ஆசனங்களுக்குச் சென்று அமர்ந்ததும் விமானத்தின் கதவு சாத்திக் கொள்ளுகிறது.

'ஜ்ரிய்' என்ற ஒலி வெளியே இருப்பவர்களின் செவியைத் துளைக்கிறது. உள்ளே இருப்பவர்களுக்கு அந்தச் சிரமம் இல்லை.



"தயவுசெய்து பெல்ட்டைப் போட்டுக் கொள்ளவும்."

எதிர்த்தாற்போல் அறிவிப்புப் பலகையில் தோன்றும் ஒளியெழுத்து உபதேசிக்கிறது.

பயணிகள் பெல்ட்டை மாட்டிக்கொள்ளுகிறார்கள். முதன் முதலாகப் பயணம் செய்யும் ஓர் அம்மையார் பெல்ட்டைப் போட்டுக் கொள்ளத் தெரியாமல் திணறுகிறார்.

வாசலில் வரவேற்று நின்ற பதுமை அன்ன நடை நடந்து அவளருகே வருகிறது. தன் மென்கரங்களால் பெல்ட்டை அவளுக்கு மாட்டி விடுகிறது.

அடுத்த அல்லது பக்கத்து ஆசனத்திலிருந்து ஒரு பெருமூச்சு எழுகிறது. விமானம் எழுப்பும் ஒலியிலே அந்தப் பெருமூச்சு தேய்ந்தாலும், 'இந்தப் பெல்ட்டை மாட்டிக் கொள்ள நமக்கும் தெரியாமலிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்ற ஏக்கம் மட்டும் அதன் அடித்தளத்தில் கருதி கூட்டாமல் இராது.

விமானம் வானவெளியிலே பயணத்தை மேற்கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் விமான நங்கை ஒவ்வொரு பிரயாணிக்கு அருகிலும் வருகிறாள். காதோடு ஏதோ கிசுகிசுக்கிறாள். அந்தன்னடை நகருகிறாள். அதைக் கண்ணுற்று ஏக்கப் பெருமூச்சுக்கு ஆளான இளைஞனின் முகம் மலருகிறது. நம் அருகிலும் இவள் வருவாள், ஏதோ செய்தி சொல்லுவாள் என்று! சந்திரனைக் கண்டு குமுதம் மலரும் என்பது இலக்கிய ஏட்டில். குமுதினியைக் கண்ட சந்திரனும் மலருவான் என்பது வாழ்க்கை போலும்! இளைஞனை நெருங்கிய குமுதினி, 'தேநீரா, காப்பியா?' என்று அன்போடு கேட்கிறாள். 'தேநீர்க் காப்பி' என்று திகைப்பில் தோய்ந்து குழறுகிறது அவன் வாய்.

குமுதினி குறுநகை புரிந்த வண்ணம் நகருகிறாள். திரும்பவும் அவனை அவள் நெருங்கும்போது டிரேயில் தேநீர்க் கோப்பை — பிஸ்கட் ஆகியவை இருக்கின்றன.

இப்படியெல்லாம் வான வீதியிலே உபசாரம் நடக்கிறது. இப்பணியை மேற்கொண்டிருப்பவர்கள் 'ஏர்ஹோஸ்டஸ்' என்று அழைக்கப்படும் விமானப் பணிப் பெண்கள். அவர்களில் ஒருத்திதான் குமுதினி. தன்னோடு ஊழியம் புரியும் தோழிகள் சார்பில் அவள் இதோ நமக்குப் பேட்டி தருகிறாள்.

குமுதினி தமிழகத்தைச் சேர்ந்தவர். உதகையைப் பிறப்பிடமாகக் கொண்ட குமுதினிக்கு மூன்று சகோதரிகளும் ஒரு சகோதரரும் உண்டு. தந்தை ராஜரத்தினம் அவர்கள் சென்னையில் ஜெயிலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வு நேரங்களிலே ரேடியோ செய்வதைப் பொழுது போக்காகக் கொண்டவர். குமுதினியும் அப்பாவுக்குப் பெண். இத்துறையில் நாட்டம் கொண்டிருப்பதோடு எம்பிராய்டரி, சமை



யல் ஆகியவற்றிலும் ஆர்வம் மிக்கவள். எஸ். ஐ. ஈ. டி. கல்லூரியில் குடும்ப விஞ்ஞானத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துக் கொண்டு, பி. எஸ்ஸி. பரீட்சை தேறிய உடனேயே விமான உபசரிப்புப் பெண்ணாகப் பணியாற்றத் தொடங்கி விட்டார். ஆம், 1962ம் ஆண்டுதான் இவ்விரு காரியங்களும் நடைபெற்றன. இவருக்குத் தமிழோடு ஹிந்தியும் நன்றாகப் பேசவும் படிக்கவும் வரும்.

விமான உபசரிப்புப் பற்றி ஆரம்பத்தில் இரண்டு மாதங்கள் பயிற்சி அளிக்கிறார்களாம். இந்தப் பயிற்சியை அளிக்கத் தில்லி, பம்பாய் போன்ற இடங்களில் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. முதலுதவி, விமானத்தின் பாகங்கள், பிரயாணிகளோடு பழகும் வகை — ஆகியவை பற்றியெல்லாம் சொல்லித் தருவார்களாம். மூன்றும் மாதம் இத்துறையில் அநுபவப்பட்ட பிரதம உபசரிப்பு நங்கையின் மேற்பார்வையில் விமானத்திலேயே நேரிடைப் பயிற்சி தருவார்களாம். நல்ல அநுபவம் பெற்றுத் தேர்ந்த பின், விமானங்களில் தனியாகவே செயலாற்றும் பொறுப்பை இவர்களுக்கு நல்கி விடுவார்களாம்.

இதையெல்லாம் கேட்டறிந்த பின், "உலகத்தில் எத்தனையோ தொழில்கள் இருக்க இந்தத் தொழிலில் உங்கள் நாட்டம் செல்வானேன்?" என்று குமுதினியைக் கேட்டேன்.

"அதுவா? குழந்தைப் பருவத்தில் நான் எதற்கும் அவசரப்படுவேனாம். 'எதற்கடி இப்படி இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறாய்?' என்று கூறுவாளாம் அம்மா" என்று வேடிக்கையாகக் கூறிய குமுதினி, "இல்லை சார், இல்லை! ஊர் உலகத்தைச் சுற்றிப் பார்க்கணும் என்ற ஆசை யாருக்குத்தான் இல்லை? அதுவும் கை நிறையச் சம்பளத்தோடு!" என்றார்.

"இந்தத் துறையில் ஆண்களும் இருக்கிறார்களா?"

"இருக்கிறார்கள். 'ஸ்டுவர்ட்' என்று அழைக்கப்படுகிறார்கள். இந்தச் சென்னையைப் பொறுத்த வரை நாங்கள் இருபத்து நான்கு பெண்களும் ஐந்து ஆண்களும் இந்தப் பணிக்காக இருக்கிறோம்."

"ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்குத்தானே இத்துறையில் வேலை வாய்ப்பு அதிகம்?"

"ஆமாம்."

"பலதரப்பட்ட மனிதர்களோடு பழகும் பொழுது உங்களுக்குச் சிரமம் ஏற்படுவதில்லையா?"

"என்ன சிரமம்? பலதரப்பட்ட பிரயாணிகளோடு பழகும் வாய்ப்பு எனக்குச் சிறந்த உலக அநுபவத்தை ஊட்டுகிறது!"

"விமானப் பயணத்தின்பொழுது உங்களுக்கு நேர்ந்த அநுபவங்கள் ஓரிரண்டைக் கூற முடியுமா?"

"எதை என்று கூறுவது? எத்தனை எத்தனையோ அநுபவங்கள்! கடந்த ஆண்டு நான் விமான உபசரிணியாகக் கொழும்புக்குச் சென்றபொழுது எங்கள் விமானத்துக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. நாங்கள் மயிரிழையில் உயிர் தப்பினோம்."

"என்ன விபத்து?"

"சமீபத்தில் ஒரு விமானம் இடியுண்டு பலியாகிப் பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டு விடவில்லையா? அதேபோன்ற விபத்து எங்கள் விமானத்துக்கும் ஏற்பட்டது. விமானம் பறந்து கொண்டிருந்தபோது காது செவிடுபடும்படியாக ஓர் இடியோசை! அதலத்துக்கும் பாதாளத்துக்கும் போய் வருவது போன்ற ஒரு குலுக்கல்! இத்தனைக்கும் எங்கள் விமானம் கீழே விழாமல் பறந்து கொண்டிருந்தது. பறந்தது மட்டுமா? கொழும்பு விமான நிலையத்தில் போய் ஜாக்

இரைதையாக இறங்கவும் செய்தது. 'என்ன ஓசை, என்ன ஓசை?' என்று ஒருவரை ஒருவர் கேட்டு இடி ஓசை என்று முடிவுக்கு வந்தோமே ஒழிய அந்த இடி எங்கள் விமானத்தைத் தாக்கியிருக்கக் கூடும் என்று நாங்கள் எண்ணவில்லை. இறங்கிப் பார்த்த பிறகுதான் 'புரொபெல்லர்' என்ற முற்பகுதியை இடி தாக்கிக் குடைந்து சென்றிருக்கிறது என்பது தெரிய வந்தது!''

''குலை நடுங்கும் செய்திதான்!''

''அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் கூற்று மீண்டும் ஒரு முறை ஊர்ஜிதமாகியது எங்களைப் பொறுத்தவரை அந்த நிகழ்ச்சியினால். — இயற்கை செய்யும் விந்தையினால் வானவீதியில் பறக்கும் விமானம் ஒரொரு சமயம் பலமாகக் குலுங்குவது உண்டு. இந்த மாதிரி விமானம் அலைபாயும் நேரத்தில் கையில் 'டிரே'யுடன் செல்லும் என்னைப் போன்ற ஒருத்தி பிரயாணி எவருக்காவது காப்பி அபிஷேகம் செய்ய நேர்ந்துவிட்டால் என்ன ஆகும்? அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் என்ன, காப்பிக் கொட்டையேகூட அல்லவா காந்தி வெடிக்கும்? அவரைச் சாந்தப்படுத்துவதற்குள் நாங்கள் படும் பாடு....''

''ரொம்பவும் சிரமம்தான்!''

''ஆனால் அவர் கோபித்துக் கொள்வதில் நியாயம் இருக்கிறதே! அநாவசியமாக யாராவது கோபித்துக் கொள்ளும்போதுதான் எனக்கு வருத்தமாக இருக்கும். நாங்கள் 'க்ரு'வுக்குக் காப்பி எடுத்துச் செல்வோம். அந்தக் காப்பி உயர்ந்த ரகமாக இருக்கும் என்பது சில பிரயாணிகளின் அபிப்பிராயம்.''

இப்படிக் கூறிய குமுதினி, எங்கள் எதிரே காப்பி டிரேயை நீட்டி, ''இதில் யார் எந்தக் கோப்பையை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்!'' என்றார் குறுநகையோடு. பிறகு தொடர்ந்தார்:

''தொலை தூரம் செல்லும் விமானங்களில் விமானிகளுக்கு உணவு வழங்குவோம். விமானம் புறப்படுவதற்கு முன்பாகவே, சைவமா, அசைவமா என்று கேட்டுத் தகவல் சேகரித்து வைத்திருப்பார்கள். ஆனால் விமானத்தில் பயணம் செய்யும்போது சிலர் சைவத்தை அசைவமாகவும் அசைவத்தைச் சைவமாகவும் மாற்றுவார்கள். நாங்களே விமானத்தில் சமைத்துப் போடுவதாக அவர்களின் எண்ணம் போலும்! எங்கள் நிலையை விளக்கினாலும் வானுயரப் பறக்கும் அவர்கள் கீழிறங்கி வரமாட்டார்கள். நாங்கள் சொல்வதையே திரும்பத் திரும்பச் சொல்வார்கள்.''

''உங்கள் விமானப் பணியின்போது யாராவது பிரமுகர்கள் பயணம் செய்திருக்கிறார்களா?''

''ஓ! சமீபத்தில் ஊ தான்ட் அவர்களைக் கொழும்பிலிருந்து சென்னை வரை அழைத்து வரும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நேப்பாள மன்னரின் தென்னாட்டு விஜயத்தின் பொழுது பணியாற்றியிருக்கிறேன். இது போன்ற நிகழ்ச்சிகள் மற்றத் தொழில்களுக்குக் கிடைக்காத அரிய வாய்ப்புத்தானே?''

''உங்களுக்குத் திருமணம்...?''

''ஆகவில்லை. விமான உபசரிப்புப் பெண்ணாகப் பணியாற்றும்வரை திருமணம் செய்துகொள்ள முடியாது. செய்துகொண்டால் இத் தொழிலில் இருக்க முடியாது. இப்படி ஒரு நிபந்தனை எங்களுக்கு விதித்திருக்கிறார்கள். நாங்கள் முப்பது வயதுவரை இத் தொழிலில் இருக்கலாம். இரு தரப்பாரும் விரும்பினால் இன்னும் இரண்டொரு வருடங்கள் நீடிக்கலாம். பிரதம உபசரிப்புப் பெண்ணாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் முப்பத்தெட்டு வயது வரை வேலை பார்க்கலாம். திருமணம் செய்து கொள்ளுவது என்று முடிவு செய்தால், எந்த நேரமும் நாங்கள் விலகிக் கொள்ளலாம்; தடையேதும் விதிக்க மாட்டார்கள்.''

''நியாயமான ஏற்பாடு!''

''பயணம் என்று புறப்பட்டால், உங்களைப் போன்றோர்களால் முடியாத காரியம் ஒன்று எங்களால் முடியும்!''

''முடியாத காரியம் என்று ஒன்று உண்டா? பெல்லறையை வீசி எறிந்தால் எதுவும் சுலபமாக நடைபெறும்!''

''அதைத்தான் சொல்ல வந்தேன். எங்கள் பயணத்துக்குப் பணமே தேவையில்லை. விமானம் புறப்படுவதற்கு ஒன்றரை மணி நேரத்துக்கு முன் எங்களை வீட்டிலிருந்து 'வானில்' விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்வார்கள். வேலை முடிந்ததும் வீட்டுக்குத் திருப்பிக் கொண்டு வந்து விடும் பொறுப்பும் அவர்களுடையதே. ஏதாவது காரணத்தினால், எங்கள் விமானம் புறப்படக் குறிப்பிட்ட காலத்துக்கு மேல் தாமதமானால் வீட்டுக்கு எங்கள் பெற்றோருக்குத் தகவல் தரும் பொறுப்பும் அவர்களுடையது. பணியாற்றும் காலத்தில் வெளியூரில் தங்க நேர்ந்தால் எங்களுக்கு ஆகும் செலவு அவர்களுடையது. எனவே, எத்தனை ரூபாய் எடுத்துப் போனாலும் அப்படியே திருப்பி எடுத்துவர முடியும். அதனால் நாங்கள் அதிகம் எடுத்துச் செல்வதில்லை.''

''அப்படியா? அதிர்ஷ்டசாலி நீங்கள்!''

''சந்தேகமென்ன? சென்னஞ் சிறு குழந்தை ஒன்றுக்கு நான் கன்னித் தாயாக...''

''பார்த்தீர்களா? இதுதான் உங்கள் தொழிலில் உள்ள சிரமம்...''

''அடடா! அதற்குள் அவசரப்பட்டு, தப்புக் கணக்குப் போடத் தொடங்கிவிட்டீர்களே! நான் சொல்ல வந்தது என்னவென்றால், ஒரு சிறு குழந்தையை அதன் பெற்றோர்களிடம் சேர்ப்பிப்பதற்காக நான் விமானத்தில் திருவனந்தபுரத்திலிருந்து கொச்சிக்கு எடுத்துச் செல்ல நேர்ந்தது. பாலூட்டிச் சீராட்டி அழாமல் அதை எடுத்துச் சென்றபோது எனக்கு...''

''கல்யாணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமுமாக இருக்கத் தோன்றியதாக்கும்!''

''போங்க ஸார்!'' என்ற குமுதினியின் முகம் இலேசாகச் சிவந்தது.

''இதோ போய்க் கொண்டே இருக்கிறோம். எங்களுக்கும் நேரமாகிறது'' என்று கூறி எழுந்தோம்.

குமுதினியின் கரங்கள் இரண்டும் குவிந்தன. உதடுகள் முறுவலோடு நெளிந்தன. இனிய ஒலி ஒன்று எழுந்தது: ''நமஸ்தே.''—ரா. வீ.

நாடகம்

சரஸ்வதியின் சபதம்

சினிமாத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் அந்தத் துறையைப் பற்றிக் குறை கூறத் தயங்குவார்கள். நாடக மேடையில் புகழ் பெற்று, சினிமா உலகில் புகுந்து பணமும் பிராபல்யமும் அடைந்த பின்னர் நாடக மேடையை நினைவில் கொள்வது அரிது. இந்த இரு விஷயங்களிலும் 'சோ' நம் பாராட்டைப் பெறுகிறார்.


அவரது புதிய நாடகமான சரஸ்வதியின் சபதம் திரைப்பட உலகை நையாண்டி செய்கிறது. இந்த நையாண்டி, கதை வசன கர்த்தா, டைரக்டர், படாதிபதி, நட்சத்திரங்கள், ஸ்டண்ட் மாஸ்டர்கள் போன்ற பலரையும் சுற்றி வளைத்து வெளுத்து வாங்குகிறது. இடையிடையே ஓரிரு அரசியல் தலைவர்களும் அகப்பட்டுக் கொள்கிறார்கள். என்ன கேலி செய்தால்தான் என்ன? சினிமா உலகம் இதனால் உருப்பட்டு விடவா போகிறது?

சோவின் நாடகங்களில் கதை அம்சம் என்றைக்குமே பலவீனம்தான். இதிலும் அப்படியே. திரைப்பட எழுத்தாளர் தாசானு தாசனைத் தண்டிக்க சரஸ்வதி தேவியே சபத மெடுக்கிறாள் என்பதுதான் கதை. இறுதியில் எழுத்தாளர்களுக்குக் கிடைக்கும் தண்டனை, நாலு திரைப்படங்களுக்கு அவர் கதை வசனம் எழுத வேண்டும் என்பதே. அவருடைய தொழிலே அவருக்குத் தண்டனை தான் என்று சரஸ்வதி கருதுகிறாள்.

குத்தல் இலக்கியம் அல்லது நையாண்டி நகைச்சுவை கொஞ்சம் இலை மறைவு காய் மறைவாக இருக்கும்போதுதான் மெருகு கூடி நிற்கும். ஆனால் நாடகத்தில் நாம் கேட்பவையெல்லாம் முழுக்க முழுக்கச் சோவின் நகைச்சுவையல்ல; தாசானு தாசனின் ஹாஸ்யங்கள் என்பதை மறவாமல் பார்த்தால் வெகுவாக ரசிக்கலாம். அது எப்படியானாலும் நாடகாசிரியர் 'சோ' திரைப்பட எழுத்தாளர் தாசானு தாசன் வேடம் தாங்கிச் சிரிப்பு அலைகளை இடைவெளியில்லாது ரசிகர்களிடையே எழுப்புகிறார். "சும்மா சொல்லப்படாது: இந்த இடத்தை நான் நன்றாகவே எழுதியிருக்கேன்" என்று அவர் கூறுவது ஒன்று போதுமே!

சுழலும் நாடக மேடையைப் பல நாட்களுக்குப் பிறகு மீண்டும் காண்கிறோம். இப்புதுமை கதை ஓட்டத்தில் விறுவிறுப்பைப் புகுத்துகிறது. கதாநாயகி சச்சுவாகத் தோன்றிக் கொண்டிருக்கும்போதே அவ்வப்போது சரஸ்வதியாகவும் மாறி, சுழலும் உலகுக்கு மேலே போய் உட்காரும் குமாரி கலகலப்பாக நடிக்கிறார்.

ஒலிப் பின்னணியில் படாதிபதியிடம் கதையைக் கூறி வரும் தாசானு தாசன், கதையைத் தொடராமல் தர்க்கத்தில் ஈடுபடும் போது கதாபாத்திரங்கள் அசையாது நிற்பதும், மேலே அவர் கதையைத் தொடரும் போது இவர்களும் தொடர்ந்து நடிப்பதும் நல்ல உத்தி.



தாசானுதாசன் தன் இஷ்டம் போல் ஆட்டி வைக்கும் கற்பனைக் கதாபாத்திரங்களாகத் தோன்றியபோதும், அவர்களே, சரஸ்வதியின் தயவினால், ஆசிரியரை ஒழித்துக் கட்ட முற்படும், உயிர் பெற்ற பாத்திரங்களாக மாறும்போதும், 'சோ'வின் நடிக நண்பர்கள் குழாம் வழக்கம்போல் திறம்பட ஒத்துழைக்கிறார்கள்.

நீதிமன்றக் காட்சி அசல் கதையுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் தாசானு தாசன் தான் எழுதிய கதை ஒன்றின் பெயரால் நீதிபதியையே மிரட்டும்போது அதுவும் சினிமாக் கதையில் ஒரு பகுதிதானோ என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

குறைகள் சில இருப்பினும் சோவுக்கு இந்நாடகம் மற்றொரு வெற்றி என்பதில் சந்தேகமே கிடையாது. சும்மா சொல்லப்படாது: நன்றாகவே எழுதியிருக்கார், மனுஷன்!



சூரன் பீட்டர் 7


வால்ட் டிஸ்னி





மண்டையோட்டுப் பாறை நடுக் கடலில் உள்ளதொரு மலை. அதன் உள்ளே கடல்நீர் போகும்படியாகப் பல குடைவுகள் உண்டு. அந்தப் பாறையின் குடைவுகளுக்குள் அங்கங்கே குத்துக் கற்களும் மலை முகடுகளும் அதற்கு ஏறிச் செல்லக் கரடுமுரடான பாதைகளும் உண்டு. சுற்றிச் சுழன்று போகும் அதன் வழிகளில் ஒருவர் ஏறி வருவதை மற்றவர்களால் காண முடியாது. அந்தப் பாறையின் தரையோ கடல்நீரால் நிறைந்திருக்கும். அலைகள் உயரும் போது கடல் நீர் அதனுள் பெருகிக் குடைவுகளை எல்லாம் மூழ்கடித்து விடும்.

ஹூக்கைப் போருக்கு அழைத்த நமது சூரன் பீட்டரை அவன் எதிர் பாராத வகையில் ஹூக் பின்னால் வந்து தன் கத்தி முனையால் இடுக்கிட வைக்கிறான். ஆனால்

பீட்டரோ அடுத்த விநாடியே கத்தியின் மேலாகப் பறந்து விடுகிறான்.










மணக்கோலம்

மூன்றாவது பரிசு நாவல்

அத்தியாயம் 8



பாரதியின் சிந்தனை ஓடியது. பிள்ளையைப் பெண் பார்க்க வேண்டும் என்று முந்தின நாள் அலமேலுவிடம் — ரகுபதியைச் சீதா பார்த்துவிட வேண்டியது நலம் என்று — சொல்லி யிருந்தது நினைவுக்கு வந்தது. சீதாவைப் பார்க்க வேண்டிய சரியான இடம் ஆபீஸ்தான் என்று அலமேலு தீர்மானம் செய்து, அதற்கேற்ப ஏற்பாடும் செய்து விட்டாளா? ஏன், இதை அவள் இது வரையில் தன்னிடம் சொல்லவில்லை?

''என்ன சொன்னார்?''

''என்ன சொன்னால் என்ன? நீ சரசரவென்று என்னைக்கூடக் கேட்காமல் நிச்சயம் பண்ணி விட்டே!''

''இன்னும் நிச்சயம் பண்ணவில்லை'' என்று சொல்லப் பாகிரதி வாயெடுத்தாள். ஆனால் அடுத்த கணமே, ''ஏன் உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்று கேட்டாள். சந்தானம் சொன்னபடி குண்டாக, குள்ளமாக, தொந்தி தெரிய இருந்தால் பிடிக்கி இருக்குமா?

''ஏன், அம்மா என் வாயைக் கிளர்றே? நான் கலியாணம் பண்ணிண்டாகணும்னு நீ உன் மனசிலே தீர்மானிச்சாச்சு. எனக்குக் கலியாணத்திலே விருப்பம் இருக்கா, இல்லியான்னு நீ கேட்கவில்லையே? இதெல்லாம் ஆரம்பிச்சு இவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டதே! எல்லாத்தையும் ரகசியமா வைச்சிருந்தே. இல்லியா?''

''சேச்சே! சீதா — என்னைப் பத்தி அவ்வளவு மோசமா நினைக்காதே. உன்னை ஏமாத்தி, உன்னை ஒருத்தன் கையிலே பிடிச்

பி.வி.ஆர்

கக் கொடுக்கணும்னு நான் சொப்பனத்திலே கூட நெனைக்க மாட்டேன். ரகுபதி என்ன சொன்னார்!''

சீதா சிரித்தாள். வெறுப்புத் தெறித்த சிரிப்பு.

''அந்த மனிதருக்குக் கலியாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்னு ஏன்தான் தோணித்தோன்னு நான் யோசனை பண்ணினேன். ஆனால் அவரே அதுக்குப் பதிலைக் கேட்காமலேயே சொல்லி விட்டார். தனிமை வெறுத்து விட்டதாம். இருக்கிற ஐசுவரியத்தைக் குடும்பத்துடன் அநுபவிக்க வேண்டுமாம்! எப்படியிருக்கு?''

''உம்.... அப்புறம்.....!''

''இன்னும் என்னவெல்லாமோ சொன்னார். ஏதோ மரக்கட்டை மாதிரி கேட்டுண்டே வந்தேன். கடைசியிலே சந்தானத்துக்கும் நமக்கும் என்ன உறவுன்னு கேட்டார்.''

தன் அறையிலிருந்து கொண்டே சந்தானம் தன் காதுகளைத் தீட்டிக் கொண்டான்.

''நீ என்ன பதில் சொன்னே?''

''என்ன சொல்லுவா....! கூடப் பிறக்காத அண்ணா என்றேன்!''

''அதுக்கு அவர் என்ன சொன்னார்?''

''அதிகமா ஒண்ணும் சொல்லாவிட்டாலும், சந்தானத்தைத அவருக்குப் பிடிக்க வில்லைன்னு தெரியறது.....!''

''என்ன காரணமோ?'' என்றாள் பாகீரதி.

''அவர் எப்போது இந்த வீட்டிலிருந்து தனி ஜாகைக்குப் போகிறார்னு கூடக் கேட்டார்.......!''

''ஓ !''

''நான் சொன்னேன், 'நாங்க காலி பண்ணச் சொல்லப் போறதில்லே. அவராகவும் இப்போதைக்குப் போகமாட்டார்'னு. இதைச் சொன்ன போது அவர் முகம் சின்னதாகப் போச்சு......!''

''நீ அப்படிச் சொல்லியிருக்கப்படாது !''

''நான் அப்படிச் சொல்லியிருக்காவிட்டால் அவர் என்ன பண்ணியிருப்பார் தெரியுமா?''

''என்ன ?''

'' 'முதல்லே சந்தானத்தைக் காலி பண்ணச் சொல்லணும். அப்படியானால்தான் இந்தக் கலியாணம் நடக்கும்'னு சொல்லியிருப்பார். நானாகவே அடித்துச் சொன்னது ஒரு விதத்துக்கு நல்லதாகப் போச்சு.''

''இப்போ நீ இப்படிச் சொல்லியிருக்கியே, அவர் என்ன நினைச்சுண்டிருக்காரோ......!''

''நீ ஏன் அதைப் பத்திக் கவலைப்படறே? ஏதாவது இது சம்பந்தமா அவரோ அல்லது அவமேளு மாமியோ கேட்டுக் கொண்டு வரட்டும். நான் பதில் சொல்லிக் கொள்கிறேன். ஆனால் ஒண்ணு மட்டும் நிச்சயம். சந்தானத்தைப் பிடிக்காம இருக்கிறதுக்குக் காரணம், ஒரு வேளை பயமாக இருக்கலாம்!''

சந்தானம் தன்னுள் இலேசாகச் சிரித்துக் கொண்டான்.

''பயமா? சந்தானத்தைக் கண்டு, ரகுபதி ஏன் பயப்படணும்?''

''யாருக்கு என்ன தெரியும்? ரகுபதியின் மடியிலே என்ன கனம் எப்போ இருந்ததோ, இல்லை இருக்கிறதோ!''

'' ஏண்டி.... இப்படி யெல்லாம் பேசறே ?''

''உனக்கு அவர் 'ஹஸ்பெண்டா' வரப் போகிறவர்!'' என்றாள் கமலா.

''வரட்டும்.... வந்தப்புறம் அந்த ஸ்தானத்துக்கு உண்டான மதிப்பையும் மரியாதையையும் கொடுத்துக் கொள்ளுகிறேன் !'' என்றாள் சீதா.

தன் பெண் சீதாவா இப்படிப் பேசுகிறாள் என்று தன்னுள் பயந்த பாகீரதி, தைரியத்தை வரவழைத்துக் கொண்டே, ''ஏன் சீதா! அவர்தான் இந்த வீட்டு முதல் மாப்பிள்ளைன்னு நான் தீர்மானம் பண்ணி விட்டேனே!'' என்றாள்.

''அப்போ நான் என்ன சொல்றதுக்கு இருக்கு. கழுத்தை நீட்டறேன். தாலியைக் கட்டட்டும்....!'' சீதாவின் குரலில் விரக்தி தோய்ந்திருந்தது.

சந்தானம் தனிமையில் உட்கார்ந்து கொண்டு சீதாவுக்காக அழுதான்.

ஃ ஃ ஃ

செவ்வாய், புதன், வியாழன் என்று மூன்று நாட்கள் ஓடின.

சந்தானத்துக்கு ஓய்ச்சல் ஒழிவு இல்லாமல் வேலைக்கு மேல் வேலை குவிந்தது. சாதாரணமாக மானேஜர்களை விட உதவி மானேஜர்களுக்குத்தான் எந்தக் கம்பெனியிலும் அதிக வேலை இருக்கும். ஆனால் தேவி அண்டு கம்பெனியில் மானேஜர்கூடக் கிடையாது. சந்தானத்துக்கு உதவி மானேஜர் பட்டமே தவிர, அவன்தான் ஹெட் கிளார்க், சூபரின்டெண்ட் எல்லாம். முதலாளி தாம்தான் மானேஜர் என்று சொல்லி, அதற்கான சம்பளத்தைப் பற்று எழுதிக் கொண்டாரே தவிர, எந்த வேலையையும் செய்பவரல்ல. அவருக்குத் தம்முடைய பொழுது போக்குகளுக்கே நேரம் போதவில்லை. அதுவும் சமீபத்தில் ஒரு பெரிய குதிரைப்

பந்தயத்தில் அவருடைய குதிரை தங்கக் கோப்பையையும், முப்பதாயிரம் ரூபாய் பரிசையும் வாங்கிக் கொடுத்ததி லிருந்து தலைகால் புரியாமல் அவர் அலைந்து கொண்டிருந்தார்.

சந்தானம் மணியைப் பார்த்தான். ஆறு அடித்து விட்டது. கடைசித் தபாலில் சேர்க்க வேண்டிய கடிதங்களி லெல்லாம் கையெழுத்தை வாங்கின குமாஸ்தா சேஷன் வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு ஒரு நிமிஷம் நின்றான்.

''என்ன வேணும் சேஷா?''

''வீட்டுக்குப் போழத்துக்கு முன்னே பாருன்னேனே..''



''யெஸ் யெஸ்... முதல்லே இதை யெல்லாம் 'டெஸ்பாட்ச்' பண்ணி விட்டு வா....''

''ஷரி...''

''வாயிலிருக்கிறதைக் கொட்டி, நன்னு அலம்பிண்டு வா... ஆபீஸ் முழுதும் பன்னீர் தெளிக்காதே!''

அவனுடைய பூதாகாரமான உடல் குலுங்கிச் சிரித்தது.

சேஷன் திரும்பி வந்தபோது சந்தானம் மணிபர்ஸிலிருந்த பணத்தை எண்ணிக் கொண்டிருந்தான்.

''எனக்குக்கூடக் கொஞ்சம் பணம் தேவைப்படறது சார்.....'' என்றான் பர்ஸைப் பார்த்துக்கொண்டே.

''ஏன், இது கண்ணை உறுத்திவிட்டதோ...?''

''கடைசியிலே கேட்கலாம்னு இருந்தேன்...''

''உனக்கு எதுக்குப் பணம்? ஒண்டிக் கட்டை. கணக்கிலே காப்பி, சாப்பாடு, வெற்றிலை பாக்கு எல்லாம் வாங்கிக்கிறே...''

''ஊருக்குப் பத்து ரூபா அனுப்பணும். அம்மாகிட்டேயிருந்து ரெண்டு கடிதாசு வந்தாச்சு...''

''அட, நீ அம்மாவுக்கு வேறே அனுப்பறியா? அவதான் கும்பகோணத்திலே உன் அண்ணாகிட்டே இருக்கிறான்னு சொன்னியே...?''

''மன்னிக்கும் அம்மாவுக்கும் சேரலே.''

''அது ரொம்ப நாளைய சமாசாரம் ஆச்சே!''

''இத்தனை நாளா அண்ணா அம்மா பக்கம் இருந்தான்.''

''இப்போ என்னாச்சு? கட்சி மாறிட்டானா?''

''மன்னிக்கு ஸ்ரீதனமா இரண்டு வேலி நிலம் வந்திருக்கு. அம்மா எழுதியிருந்தாள். அது வந்த உடனே இன்னமே நூல் புடவை கட்டிக்கிற தில்லேன்னு அவ சங்கற்பம் பண்ணி விட்டாளாம்....''

''அது கிடக்கட்டும். இப்போ அம்மா எங்கே இருக்கா? இங்கே வர்றதாக உத்தேசம் இருக்கா?''

''அதெல்லாம் கிடையாது. இங்கே வந்தால் என் சம்பளத்திலே என்ன குடித்தனம் பண்ண முடியும்? வர வர அம்மாவுக்குச் சில்லறைச் செலவுக்குக் கூட அண்ணா பணம் கொடுக்கிற தில்லையாம்...''

''சரி சரி! போறபோது ஞாபகப் படுத்து. தரேன்!''

''தாங்க்யூ... ஆமாம். எதுக்கு வரச் சொன்னீர்கள்?''

''பத்து வருஷங்களுக்கு முன்னாலே இங்கே நீயும் நானும் வர்றதுக்கு முன்னாலே ரகுபதின்னு ஒரு குமாஸ்தா இருந்தான் தெரியுமா?''

''சொல்லுங்கோ...''

''அவனைப் பத்திய எல்லா விவரங்களும் எனக்கு வேணும்.''

''அந்த ஆளை நான் பார்த்ததுகூட இல்லையே...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இரண்டு நாளிலே எனக்கு அவனுடைய பூர்வோத்திரமெல்லாம் தெரியணும். இப்போ அவன் 'ஷா' அண்டு ஷா' கம்பெனியிலே பிராஞ்சு மானேஜராக இருக்கிறான். இதுதான் வீட்டு விலாசம். ஆனால் அவன் வீட்டுக்கு மட்டும் போயிடாதே. ராஜபாளையம் உன் சதையைக் கொதறிவிடும்...''

சேஷன் அவன் கொடுத்த விலாசத்தைப் பார்த்துவிட்டு எழுந்தான்.

''ஆல் ரைட்... இந்த ஆபீஸிலே எனக்கு 'டிடக்டிவ்' வேலையும் இருக்கு!''

''இது ஆபீஸ் வேலை இல்லை. என் சொந்த வேலை...''

''உங்களுக்கு ரகுபதியை நன்றாகத் தெரியுமா?''

''அதைப் பத்தி உனக்கு என்ன? இந்தா நீ கேட்ட பத்து ரூபாய். இன்னொரு பத்து ரூபாயும் தர்றேன்... இந்த வேலை விஷயமா டாக்ஸிக்கும், பஸ்ஸுக்கும் செலவழிக்க வேண்டியிருந்தால் உபயோகமாயிருக்கும்....''

''ஓ. கே!'' என்றான் சேஷன்.

சேஷனும், டைப்பிஸ்ட் அமிர்தமும், டெஸ்பாட்ச் அட்டெண்டரும் சென்றபின் சந்தானம் மெதுவாக எழுந்து, ஒரு பீரோவைத் திறந்தான். அதில் பழைய காகிதங்களும் தஸ்தாவேஜுகளும், கணக்கற்ற பைல்களும் தாறுமாறாகக் கிடந்தன. ஒவ்வொரு படியாக அவன் பைல்களை எடுத்துப் புரட்டலானான்.

ஆறரை, ஏழு, ஏழரை என்று மணி ஓடிக்கொண்டிருந்தது. சந்தானத்துக்குத் தான் தேடும் 'பைல்' கிடைக்கவில்லை. மூன்று படிகள் முடிந்தபோது அவனுக்கு அலுத்தது. ரகுபதியைப் பற்றி அவனுக்குத் தெரியாத விவரம் ஆபீஸைப் பொறுத்தமட்டில் கிடையாது என்றாலும், அவன் இருந்தபோது எப்படி இருந்திருக்கிறான் என்று அறிய ஆவல் பிறந்தது. இரண்டு வருட சர்வீஸுக்குப் பிறகு அவனை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டார்கள் என்று தெரியும். பணம் களவாடியிருப்பான் என்றுதான் சந்தானம் ஊகித்தான். ஆனால் பிதிரார்ஜிதச் சொத்து ஏராளமாக உள்ள அவன் குமாஸ்தா பதவிக்கு வருவானேன்? பணம் களவாடுவானேன்? இந்தக் கேள்விகளுக்குத்தான்


அன்றாடம்
இருபது
லட்சத்திற்கு
மேற்பட்ட மக்களை
மகிழ்விப்பது
கோல்டு
ஸ்பாட்
GOLD
SPOT
REGISTERED TRADE MARK
இந்தியாவின்
உன்னத
விற்பனையுள்ள
பானம்
Creative Unit-GS-113

அவனுக்குச் சரியான பதில்கள் கிடைக்கவில்லை. அவற்றைத்தான் அவன் பைல்களில் தேடினான்.

நான்காவது படியில் திடீரென்று காலத்தால் மங்கிப்போன ஒரு பச்சை நிறப் பைல் அவன் தேடிய விவரங்களை அளித்தன. அதில் இருந்த விவரங்களைப் படித்தபோது, சந்தானம் திடுக்கிட்டான். சம்பந்தப்பட்ட ஒரு பெயரைப் பார்த்தபோது அவனுக்குத் தலை சுற்றியது. கோதண்டராமன்! அவனைப் பொறுத்தவரையில் கோதண்டராமன் நல்லவர்தான். வியாபாரத்தில் அவருக்கு நேர்மையும் நாணயமும் கிடையாது என்றெல்லாம் அவன் கொண்டுள்ள கருத்து. ஆனால் அவர் ரகுபதியை உபயோகப்படுத்திக் கொண்டவிதமும், ரகுபதி தேவி கம்பெனியில் குமாஸ்தா பதவியில் ஒளிந்துகொண்டே அவருக்குச் செய்துவந்த காரியங்களையும் அறிந்தபோது சந்தானத்துக்கு ரகுபதி மீதுகூட ஆத்திரமோ கோபமோ உண்டாகவில்லை. கோதண்டராமன்மீது தான் வெறுப்பு எல்லை மீறிப் பிறந்தது. இந்த இருவர் இப்படி ஒரு பெரிய ஏமாற்றுத் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நாட்களில் தான் கோதண்டராமன் கம்பெனியில் குமாஸ்தாவாக இருந்திருக்கிறான் என்ற உண்மை தெரிந்தபோது சந்தானத்துக்கு அவமானமாகக்கூட இருந்தது. எந்த அளவுக்கு அவன், அவனறியாமலேயே இருவருடைய சதிகளுக்கு உடந்தையாக இருந்திருக்கிறான் என்று அவனுக்கு விளங்கவில்லை.

'பைலை' முழுவதும் படித்து உள்ளே வைத்துவிட்டு எழுந்தபோது மணி எட்டு. உடம்பு கொதித்தது அவனுக்கு. பீரோவைப் பூட்டிய பின் மின்சார விசிறியை நிறுத்தி விட்டு அவன் வெளியே வந்தான்.

எட்டே முக்காலுக்கு வீட்டை அடைந்தபோது என்றுமில்லாத அதிசயமாகக் கமலா பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தாள். கடந்த மார்ச்சிலும், செப்டம்பரிலும் கைநழுவிப் போன 'பி.ஏ'யைப் பிடிக்க அவள் மீண்டும் ஆயத்தமாகிறாள்!

கைகால்களைக் கழுவிக் கொண்டு அவன் அறைக்குத் திரும்பியபோது, ரேழியில் நின்று கொண்டிருந்த சீதா, ''மிஸ்டர் சந்தானம்! நான் சாதம் போடட்டுமா? இல்லை, அம்மா வந்த பின்னால் சாப்பிடுகிறீர்களா?'' என்று கேட்டாள்.

''அம்மா வரட்டும். இன்னிக்கு என்ன கதை ?''

'' குசேலர் உபாக்கியானம்......'' என்ற அவள், ''நான் கேட்கிறேனே என்று நினைக்காதீர்கள். அம்மா ஏதாவது பணத்துக்கு உங்ககிட்டே ஏற்பாடு செய்திருக்கிறாளோ?'' என்று கேட்டாள்.

''ஏன், கேட்கிறாய் சீதா?''

'' இரண்டு மூன்று நாட்களாய்த் தினம் தினம் அலமேலு மாமி வந்து போகிறாளே, தெரியாது?''

''தெரியும். அதுக்கென்ன?''

''அதுக்கென்னவா? அவள் எதற்கு வருகிறாள்னு தெரியும் இல்லியா ?''

''உன் கல்யாண விஷயமாகத் தானே!''

''அலமேலு மாமிக்கு வேறு என்ன விஷயம் இருக்கு பின்னே? எல்லாம் நிச்சயமான மாதிரிதான். அதுக்குத் தான் பணம் ஏற்பாடு செய்திருக்கிறாளான்னு கேட்கிறேன்....''

''ஆமாம்னே வைச்சுக்கோயேன்.''

''எத்தனை ரூபாய்?''

''நீ ஏன் சீதா, இதைப் பத்தியெல்லாம் கவலைப்பட்டுக் கொள்ளறே? உன் கல்யாணத்திலே மற்றவர்கள்தான் சிரமமும் சிரத்தையும் எடுத்துக் கொள்ளணும்....!''

''எத்தனை ரூபாய் கேட்டிருக்கிறான்னுகூட எனக்குத் தெரியப் படாதுன்னு, நான் கேட்டதற்கு என்னை மன்னித்து விடுங்கள், சந்தானம்!''

'' இந்தக் கல்யாணத்துக்குன்னு இப்போ சமீபத்திலே கேட்கல்லே. நாலைந்து மாசங்களுக்கு முன்னாலே சொல்லி வைச்சிருந்தாள். 'சீதாவுக்குக் கலியாணம்னு ஒண்ணு நிச்சயமானால் சந்தானம் நீதான் எனக்கு உபகாரம் செய்யணும். எப்படியாவது உடம்பாலே உழைச்சாவது கடனைத் திருப்பித் தந்து விடுகிறேன்'னு சொல்லியிருந்தாள்.''

''எவ்வளவு?''

''அப்போ கேட்டது இரண்டாயிரம் ரூபாய்......''

''நீங்க என்ன சொன்னீர்கள்?''

''எனக்கு யார் இருக்கா சீதா ! அம்மாவா, அக்காவா, தங்கையா ? நான் சம்பாதிக்கிற பணம் முழுவதும் என்னுடையது. செலவழிந்தது போகப் பாக்கியெல்லாம் பாங்கியிலே கிடக்கு. அது உங்களுக்கெல்லாம்தான் தெரியுமே? 'சீதா கலியாணம்னு நீங்க கேட்டுத்தான் நான் தரணுமான்னு' கேட்டேன்......!''

''அப்போ கொடுக்கப் போகிறீர்கள், இல்லியா?'' என்றாள் சீதா. (தொடரும்)

வெள்ளிவிழா இரண்டாவது பரிசு நாவல்



கல்லுக்குள் ஈரம்

ர. சு. நல்லபெருமாள்

அத்தியாயம் 20

பரம இரகசியம்

"இந்தக் கன்னிமுனை தவத்துக்குத் தான் லாயக்கா?" என்று கேட்டான் சிவானந்தம்.

"ஏன்?" — முத்தையாபிள்ளை கேட்டார்.

"கரையில் அம்மன் தவமிருக்கிறாள்; கடல் பாறையில் விவேகானந்தர் தவமிருந்தார். நாம்கூட இங்கு தவமிருந்து விடலாம்" என்றான் சிவானந்தம்.

"ஆனால் இங்கு தவம் பலிக்காது போல் இருக்கிறதே!" என்றாள் கமலவாசகி.

"ஏன் பலிக்காது? தீவிர பக்தனாகி விட்டால் வரம் வலியக் கிடைக்காமலா போய்விடும்?" என்று கூறிவிட்டு ஓரக் கண்ணால் கமலவாசகியைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தான். கமலவாசகியின் முகம் குங்குமமாகச் சிவந்து விட்டது.

விவேகானந்தர் பாறையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த போது சிவானந்தம், கமலவாசகியின் பக்கத்தில் வந்து விளையாட்டான ஒரு நீண்ட பெருமூச்சுடன் "காதல் சுழலில் அகப்படாமல் தப்பித்த அதிர்ஷ்டசாலி இந்த விவேகானந்தர்...." என்றான்.

"காதல், ஒரு சுழலா?" என்று கேட்டாள் கமலவாசகி, அவன் முகத்தை உற்றுப் பார்த்தவாறு.

அவன் அவள் கண்களைப் பார்த்தான். பிறகு சிரித்தான். சொன்னான்: "சுழல் தான். மூச்சுக்கூடத் திணறும்போல் இருக்கிறதே!" கமலவாசகி கடலைப் பார்த்துக் கொண்டு சிரித்தாள்.

மறுநாள் காலையில் சிவானந்தமும் ஜமீந்தாரும் நாகர்கோயிலுக்குப் போயிருந்தார்கள். பங்களாவில் கமலவாசகியும் வெங்குவும் இருந்தார்கள். வெங்கு கேட்டான்: "கமலா, காதல் என்றால் என்ன?"

இந்தக் கேள்வி கமலவாசகியை அதிர வைத்துவிட்டது. வெங்குவை முறைத்துப் பார்த்தாள். அவனோ அப்பாவியாக உட்கார்ந்திருந்தான். மீண்டும் கேட்டான். "சொல்லேன், காதல் என்றால் என்ன?"

ஒளிவு மறைவின்றிப் பிறந்த மேனியாகத் தோன்றிய அந்தக் கேள்வி அவளைக் கூச்சமடைய வைத்து விட்டது. வெங்கு சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, "நான் சொல்லட்டுமா? எனக்குத்தான் தெரியுமே!" என்றான்.

"உளறாதே, மண்டு!" என்றாள்.

"எனக்கு எல்லாம் தெரியும். ஒன்றும் தெரியாது என்று நினைத்தாயா? புத்தகத்திலேதான் படித்தேனே!" என்றான் வெங்கு.

"என்னவாம்?"

"ஒரு பெண்ணைக் கண் கொட்டாமல் பார்த்தால், அதுதான் காதல். இப்போது வந்திருக்கிறாரே சிவானந்தம், அவருக்கும் காதல்!" என்றான். ஒன்றும் புரியாமல் விழித்தாள் கமலவாசகி.

"நீ என்ன சொல்லுகிறாய்?"

"ஓகோ, உனக்கு ஒன்றுமே தெரியாதா? ப்பூ... நீ சுத்த மோசம். சிவானந்தம் காதல் செய்கிறார். வந்த நாள் முதல் உன்னையே கண் கொட்டாமல் பார்க்கிறாரே! இது உனக்குத் தெரியாதா? அசடுதான் நீ!"

"என்னடா உளறுகிறாய்?" என்று எரிந்து விழுந்தாள் கமலவாசகி.

"நீ வேணுமானால் பாரேன். சிவானந்தம் உன்னைக் கண் கொட்டாமல் பார்க்கிறார். இதுதானே காதல்? நான் அவரிடம் கேட்டு விட்டேன்!"

"என்னடா கேட்டாய்?"

"சார், நீங்கள் காதல்தானே செய்கிறீர்கள் என்று அவரிடமே கேட்டேன். 'அதெல்லாம் ஒன்றுமில்லை. எதையாவது உளறாதே!' என்றார். எனக்குத் தெரியாது என்று நினைத்து விட்டார். நான்தான் புத்தகத்தில் படித்திருக்கிறேனே!" என்றான் வெங்கு. பிறகு அவன் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

"உனக்குப் பைத்தியந்தான். டேய், மண்டு, இப்படி வேறு யாரிடமாவது உளறாதே!" என்றாள் கமலவாசகி மிகுந்த கோபத்துடன்.

"ஏன் இது என்ன இரகசியமா?"

"ஐயோ, ஐயோ... இப்படி ஒரு பித்துக்குளி வந்து வாய்த்தாயே. இதையெல்லாம் யாரிடமும் சொல்லக் கூடாதுடா!"

''சித்தப்பாவிடம்கூடவா?''
''யாரிடமும் சொல்லக் கூடாது.''
ஆனால் முத்தையா பிள்ளைக்கு இதெல்லாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமா என்ன? சிவானந்தத்துக்கும் கமலவாசகிக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கத்தை அவர் சற்றுத் தள்ளி நின்று பார்த்தார். பாராதது போல் இருந்தார்.

அவர் எதிர்பார்த்ததுபோல் சிவானந்தத்தின் வரவு, கமலவாசகியிடம் மாறுதலை ஏற்படுத்தி விட்டது. மன வேதனையில் சோம்பிக் கிடந்தவள் சிவானந்தம் வந்தபிறகு தெம்படைந்து விட்டாள்.

சென்னையில் எங்கோ இருளில் சுற்றிக் கொண்டிருக்கும் அந்தப் புரட்சிக்கார இளைஞனைவிட இந்தச் சிவானந்தம் கமலவாசகிக்குப் பொருத்தமானவன்தான். இவளுடைய பாதைக்கு ஏற்ற கைவிளக்கு இவன்.

ஒரு மாதத்துக்குள் சிவானந்தம் — கமலவாசகி திருமணம் நடந்தேறியது! முத்தையா பிள்ளையின் மனப்பாரம் இறங்கி விட்டது. ஆனால் கமலவாசகி?

முதல் நாள் சிவானந்தத்தின் அணைப்பில் அவள் ஒடுங்கிய போது, எதற்காக அவள் நினைவில் அந்தப் புரட்சிக்காரன் தோன்ற வேண்டும்; திருமண வீட்டில் இழவு நடந்த மாதிரி ? காலப்போக்கில் சிவானந்தத்தின் அன்பில் கடந்த காலத்தை மறந்துவிடலாம் என்று நினைத்தாள். ஆனால் நாளாக ஆக அந்த நினைவு பெருகிக் கொண்டுதான் இருந்தது.

உடல் ஒரு பக்கமும், உள்ளம் ஒரு பக்கமுமாகப் பிரிந்து வாழும் வேதனையில் இப்போது சிக்கிக் கொண்டாள். என்னதான் முயன்றும் பழைய நினைவுகளை அகற்றவே முடியவில்லை. கிடைக்காத பொருளைத்தான் மனம் நினைத்துக் கொண்டே யிருக்கிறது.

கண் பட்டு, கை தொட்டு, மனம் விட்டுப் பழகிய காதலை மறந்துவிட முடியுமா? தோண்டத் தோண்ட ஊறும் ஊற்று மாதிரி நினைக்க நினைக்க அந்தச் சம்பவங்களின் இனிமை இதயத்தில் ஊறிக்கொண்டுதானிருந்தது. அவள் என்ன செய்வாள்? இந்த இரட்டை வாழ்வில் அவளாகத் தான் சிக்கிக் கொண்டாள். அதிலிருந்து எப்படி மீள முடியும்? பொய்யாக இப்படியே வாழ்ந்து தீர வேண்டியதுதான்.

சிவானந்தத்தின் மனைவி என்ற முறையில் அவளுக்கு என்ன குறை? பெரிய போலீஸ் அதிகாரி என்ற பெருமை இருந்தது. சிவானந்தத்தின் அன்பு இருந்தது. அவனுடைய கண் நிறைந்த அழகும், அழகை ரசிக்கும் தன்மையும், யாரையும் புண்படாதபடி பேசும் இனிமையும், பெருந்தன்மையான குணமும் அவளை ஆட்கொண்டன. ஆனாலும் பழைய நினைவில், பழைய காதலின் சாயல் நிழலாடும்போது அவள் உள்ளம் தீயாகத் தகிக்கும். மண வாழ்க்கையில் நிறைவிருந்தாலும், மனத்தில் நிறைவில்லை. அது எங்கெல்லாமோ அடங்காப்பிடாரியாகச் சுற்றி வருகிறது. இழந்த பொருளைத்தான் தேடி ஓடுகிறது. அந்த ஏமாற்றத்தையே எண்ணிக் கசந்து கொள்ளுகிறது.

''அப்பா என்ன நினைக்கப் போகிறார்? அருமை மகள், ஆனந்தமாக ஒரு போலீஸ் அதிகாரியின் மனைவியாகப் பெருமையுடன் வாழ்கிறாள் என்றுதான் திருப்தி அடைந்திருப்பார்.... இல்லை, அப்பா, இல்லை. உங்கள் மகளின் வாழ்க்கை கசந்து போய். உண்மைக்கு அதில் இடமே இல்லை. நான் என்ன செய்வேன்? பழைய நினைவு, என்னைப் பற்றிக் கொண்டு அலைக்கழிக்கிறதே. பொய்யாக நூறு வருஷங்கள் வாழ்வதை விட உண்மையாக ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும் என்றீர்களே. என் மன நிறைவை அடையப் போவதில்லை. உயிர் இருக்கும் வரைக்கும் இந்த நினைவும் இருக்கும்; நினைவு இருக்கும்வரைக்கும் என் வேதனையும் இருக்கும்... புரட்சியாம், சுதந்திரமாம்.... மண்ணாங்கட்டி. ஒரு பெண்ணைப் புரிந்துகொள்ள முடியவில்லை, அந்தப் புரட்சிக்காரராம். எல்லாம் இந்தப் புரட்சி வெறியால் வந்த வினைதானே... இந்தப் புரட்சிக்காரர்களையே பழி வாங்குகிறேன். ஒழித்துக் கட்டுகிறேன். பழிக்குப் பழி.... பழி ..... பழி .....''

கமலவாசகி தன்னை மறந்து கத்தினாள்.

ஃ ஃ ஃ

வெளியே சென்றிருந்த சிவானந்தம் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தபோது கமலவாசகியின் வெறிக் கூச்சலைக் கேட்டான். பரபரப்புடன் அவள் அருகில் ஓடி வந்து ஆதரவோடு அணைத்துக் கொண்டான்.

''என்ன கமலா, என்ன கனவு கண்டாயா?'' — பரபரப்புடன் கேட்டான். பதில் ஒன்றும் கூறாமல் மிரள மிரள விழித்தாள். பிறகு சிவானந்தத்தின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள். அவளுடைய கண்ணீருக்குக் காரணம் தெரியாமல் குழம்பினான் சிவானந்தம். ஏதோ ஒரு பெரிய வேதனை அவள் இதயத்தை அரிக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொண்டிருந்தான். ஆனால் அது என்னவென்று அவள் சொல்லவே இல்லையே. அன்போடு அவளை அணைத்துக் கொண்டான். அந்த இறுக்கத்தில் கமலவாசகியின் வேதனைகள் சிறிது கரைந்தன.

''ஏன் அழுதாய்?'' — மெதுவாக அவன் காதில் கிசுகிசுத்தான்.

''ஒன்றுமில்லை.''

''அப்பாவைப் பார்க்க வேண்டும்போல் இருந்திருக்கும். வேண்டுமானால் கொஞ்ச நாள் இருந்துவிட்டு வாயேன்.''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. எதையாவது நினைத்துக் கொண்டு மனத்தை அலட்டிக் கொள்ளாதீர்கள்.''

''நானா மனத்தை அலட்டிக்கொள்ளுகிறேன்? நீயல்லவா அழுகிறாய்?''

''சரி, சரி, உங்கள் வேலை உயர்வுக்கு வேண்டியதைப் பாருங்கள்'' என்று கூறிவிட்டு அவன் அணைப்பிலிருந்து திமிறிக்கொண்டு போய்விட்டாள் கமலவாசகி.

சில வேளைகளில் அவள் இப்படித்தான் சோம்பிக் கிடப்பதைச் சிவானந்தம் கவனித்திருக்கிறான். சில சமயங்களில் தலையணையை அவள் கண்ணீர் நனைத்திருப்பதையும் பார்த்திருக்கிறான். ஆனால் அதன் கார



ணத்தை அவன் கூறியதே யில்லை. கடந்த கால நினைவில் ஏதோ வேதனை என்று மட்டும் புரிந்துகொண்டாள். ஒரு நாள் பொறுமை இழந்து அவனே கேட்டுவிட்டான். ''ஏன் இப்படிப் பிரமை பிடித்தவளைப் போலிருக்கிறாய்? என்னை உனக்குப் பிடிக்கவில்லையா, கமலா?''

இதைக் கேட்டு அதிர்ந்துவிட்டாள், கமலவாசனி. பரபரப்புடன் தன் கையினால் அவன் வாயைப் பொத்தினாள்.

''அப்படி யெல்லாம் சொல்லாதீர்கள். எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. நீங்கள் இப்படிச் சாதுவாக இருந்து வேலை உயர்வு கிடைப்பதைக் கெடுத்துக் கொள்ளுகிறீர்களே என்ற கவலை ஒன்றுதான்'' என்று கூறிக் கொண்டு அவன் கழுத்தை அணைத்துக் கொண்டாள்.

மனதாரப் பொய்யும் சொல்லிவிட்டாள்.

வாழ்வுதான் பொய்யாக இருக்கிறது; வாக்கிலும் பொய்யாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

அவனுடைய வேலை உயர்வில் அவளுக்குத் தான் எவ்வளவு அக்கறை! இதைச் சிவானந்தம் நம்பினான். ஜில்லா அதிகாரியாகி விட்டால் அவளுக்கும் மதிப்புத்தானே. இந்த மனக் கவலையில்தான் கமலவாசனி இருக்கிறாள் என்று நினைத்தான் சிவானந்தம்.

நேற்று நடந்த கள்ளுக் கடை மறியலில், தான் கடுமையாக நடந்துகொள்ளவில்லையோ என்ற சந்தேகம் அவனுக்கே தோன்றி விட்டது. டி. ஐ. ஜி. கூட அப்படித்தான் அவன்மீது குற்றம் சாட்டினார். ஆனால் அவனுடைய உள்ளுணர்வு அதை ஏற்க மறுக்கிறதே. வாழ்க்கை நம்மோடு நின்றுவிட வில்லை. மற்றவர்களுக்காகவும் வாழ வேண்டியிருக்கிறது.

கமலவாசனிக்காக, கொடுமையானவனைப் போல் நடித்துப் பொய்யாக வாழவா? வீணாக மக்களை அடித்துக் கொடுமைப்படுத்தவா? சேச்சே, கொடுமைக்காரனாக, பயங்கர அதிகாரியாக தான் மாற முடியாவிட்டாலும் இவர்களுக்காக அப்படி நடித்துத்தான் தீர வேண்டுமா?....''

பொய்யாக நூறு வருஷங்கள் வாழ்வதை விட உண்மையாக ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும்......

ஃ ஃ ஃ

திருநெல்வேலி ரயில் நிலையத்துக்குள் ரங்கமணியும், சர்தார் சொக்கலிங்கம்பிள்ளையும் நுழைந்த போது அங்கு சிவானந்தத்தைச் சந்தித்தார்கள். போலீஸ் மேல் அதிகாரியை ரயிலில் ஏற்றிவிட வந்திருந்தான் சிவானந்தம்.

''எந்த ஊருக்கு?'' என்று சிவானந்தம் கேட்டான்.

''சும்மா பத்திரிகை விஷயமாக ரங்கமணி போகிறான்'' என்றார் சர்தார்.

''ஓ.... நிருபர் என்ற முறையிலா ?''

ரங்கமணி தலையை அசைத்தான்.

'' திரிவேணிக்கு எப்படி இருக்கிறது ?'' என்று மெதுவாக இரகசியம் பேசுவது போல் கேட்டான் சிவானந்தம்.

''பரவாயில்லை, ஒரு வாரத்துக்குள் குணமாகிவிடும்'' என்றார் சர்தார்.

ரங்கமணியிடம் திரும்பி, ''எந்த ஊருக்கு?'' என்று கேட்டான் சிவானந்தம்.

''பட்டணம் வரைதான்'' என்று குறுக்கிட்டார் சர்தார். ரங்கமணி பதில் ஒன்றும் சொல்லாமல் பேசாமல் நின்றான். சிவானந்தத்தின் பார்வை ரங்கமணியின் விரலில் கிடந்த பச்சைக் கல் மோதிரத்தின் மீது விழுந்தது.

''மோதிரம் பிரமாதமா யிருக்கிறதே!''— என்று கூறிக் கொண்டே அவனுடைய கையைப் பிடித்துத் தூக்கி மோதிரத்தைப் பார்த்தான் சிவானந்தம்.

'' உங்கள் விரலுக்கு இந்த மோதிரம் பொருத்தமா யிருக்கிறது!'' என்று கூறிக் கொண்டே ரங்கமணியின் கையை அப்படியும் இப்படியும் திருப்பி, மோதிரத்தையும் கையையும் அழகு பார்த்தான். ரங்கமணியின் நினைவு இனிப்புக் கடலில் குதித்து மூழ்கியது.

''எந்தச் சீதைக்காகக் காத்திருக்கும் கணையாழியோ ?'' என்றான் சிவானந்தம். இதைக் கேட்டு ரங்கமணி இலேசாகச் சிரித்தான். ஆனால் அதில் உணர்ச்சி இல்லை—சீதை கொடுத்த கணையாழிதான். ஆனால் சீதைதான் இல்லை. இது புது ராமாயணம். சீதையே ராமனை உதறிவிட்டுச் சென்றுவிட்டாள். இந்த ராமன் அவள் கணையாழியைப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறான்.

''பாலகாண்டமே இன்னும் ஆரம்பமாக வில்லையா ?'' என்று கேட்டான் சிவானந்தம்.

''பாலகாண்டம் எல்லாம் முடிந்து விட்டது. இப்போது, ஆரண்ய காண்டம் முடிந்து கிஷ்கிந்தா காண்டம் நடக்கிறது '' என்றான் ரங்கமணி.

'' அவ்வளவு தூரம் வந்து விட்டதா ? அட பாவமே! நான் வேண்டுமானால் அனுமானாக இருக்கட்டுமா?''

''அனுமான், என்னைத் தேடி வர வேண்டிய கட்டம் இது!''

''ஓஹோ....! இந்த ராமாயணம் தலைகீழாக இருக்கிறதே !'' என்று கூறி உரக்கச் சிரித்தான் சிவானந்தம்.

இந்தச் சமயத்தில் வண்டி புறப்படுவதற்காக மணி அடிக்கப்பட்டது. பிளாட்பாரத்தில் அங்கும்இங்குமாகப் பேசிக்கொண்டிருந்தவர்கள் பரபரப்புடன் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். சிவானந்தம் மேல் அதிகாரி இருந்த முதலாவது வகுப்புப் பெட்டியை நோக்கி விரைந்தான். ரங்கமணி வண்டியில் ஏறிக் கொண்டான்.

''தைரியமாகப் போய்விட்டு வா !'' என்றார் சர்தார். வண்டி நகரும் போது, பிளாட்பாரத்தில் சோமு ஓடி வருவது தெரிந்தது. வியப்புடன் பார்த்தான் ரங்கமணி. சோமுவை ரங்கமணியிருந்த பெட்டிக்குள் தள்ளிக் கதவை இழுத்து அடைத்தார் சர்தார். வண்டி வேகமாக ஓடத் தொடங்கி விட்டது. பிளாட்பாரத்தில் சர்தார் நின்று கொண்டு கையை ஆட்டிக் கொண்டிருந்தார். வண்டிக்குள்ளிருந்து ரங்கமணியும், சோமுவும் பதிலுக்குக் கையை அசைத்துக் கொண்டிருந்தார்கள்.

''நீ எங்கே போகிறாய் ? திடீரென்று புறப்பட்டாயா?'' என்று ரங்கமணி கேட்டான்.



வண்ண ரோஜாப் பூவினிலே
வாழ்பவர்தான் யாரு?
சின்னஞ்சிறு நெஞ்சங்களிலும்
சிரிக்கும் பண்டிதநேரு!

பாரதத்தின் ஜோதியென்ற
பெருமை பெற்றவர் யாரு?
நேருமாமா என்னும் போது
நெஞ்சங் குளிரும் பாரு!

கடலில், காற்றில், மண்ணில்,
விண்ணில்
கலந்திருப்பவர் யாரு?
உடலம் இன்றி உள்ளந்தோறும்
உலவுகின்றார் நேரு!

பலரும் புகழும் பண்புகொண்ட
பாரின் குழந்தை நேரு!
உலகம் இருக்கும் வரையில்
இருக்கும்
உயர்ந்த மேதை பேரு!

"ஆமாம். திருச்சியில் மாமா இருக்கிறார். அவருக்குத் திடீரென்று உடம்புக்குச் சௌகரியமில்லை என்று தந்தி வந்தது. பார்த்து விட்டு நாளையே திரும்பி விடுவேன்" என்றான் சோமு.

ரங்கமணி தலையைச் சன்னலுக்கு வெளியே நீட்டிப் பார்த்தான். பிளாட்பாரம் பார்வையிலிருந்து மறைந்து விட்டது. பிறகு பெட்டிக்குள் பார்வையைச் செலுத்தினான்.

அந்தப் பெட்டிக்குள் கூட்டம் அதிகம் இல்லை. இவர்கள் இரண்டு பேரைத் தவிர வேறு மூன்று நபர்கள்தாம் இருந்தார்கள். அவர்கள் அந்தப் பெட்டியிலே உள்ள அடுத்த பகுதியில் இருந்தார்கள். பலகை இடுக்கு வழியாக அவர்கள் முகத்தை நன்றாகப் பார்க்க முடியவில்லை.

"இன்று என்ன கூட்டமே இல்லை?" என்று ரங்கமணி கேட்டான்.

"இன்று செவ்வாய்க்கிழமை, வடக்கே சூலம் அதனால்தான்!" என்றான் சோமு.

"இந்தச் சூலத்தினால் நமக்கு நன்மைதான். வசதியாக உட்கார முடிகிறது" என்று கூறி இன்னும் நன்றாகப் பெஞ்சு முழுதும் கால்களை நீட்டி உட்கார்ந்து கொண்டான் ரங்கமணி.

"சூலம் வாழ்க. இந்த நம்பிக்கையும் நீடூழி வாழ்க!" என்று சொல்லிக் கொண்டே பெஞ்சில் கால்களை நீட்டிச் சாய்ந்தான் சோமு.

"காலத்தை எதிர்த்தாலும் சூலத்தை எதிர்த்துப் போகக் கூடாது என்பார்களே" என்றான் ரங்கமணி.

"அதற்குத்தான் சூல பரிகாரம் இருக்கிறதே. வடக்கு சூலத்துக்குப் பால் குடித்து விட்டுப் புறப்பட வேண்டும் என்று பஞ்சாங்கம் விதி சொல்லும்."

"அப்படியானால்தான் எல்லாரும் பாலைக் குடித்துவிட்டுப் புறப்பட்டு விடுவார்களே?"

"அப்படித் தைரியமாகப் புறப்பட்டதாகத் தெரியவில்லையே. அப்படிப் புறப்பட்டிருந்தால், இதற்குள் வெள்ளைக்காரன் ஆறுயிரம் மைல்களுக்கப்பால் ஓடியிருப்பானே" என்றான் சோமு.

வண்டி கோவில்பட்டியை அடைந்தபோது சன்னலுக்கு வெளியே தலையை நீட்டிப்

பார்த்த ரங்கமணி வியப்புடன், ''நிட்சிதர் வருகிறார் !'' என்று கூவினான்.

ரங்கமணியைக் கண்டவுடன் அவன் இருந்த பெட்டிக்குள் ஏறினார் நிக்ஷிதர். அவரோடு இன்னொருவரும் ஏறினார்.

''எந்த ஊர் வரை ?'' — ரங்கமணி ஆவலோடு கேட்டான்.

''பட்டணத்துக்குத்தான்'' என்றார் நிக்ஷிதர்.

''என்னிடம் நீங்கள் இதைப் பற்றிச் சொல்லவில்லையே ?''

''திடீரென்று புறப்பட்டேன்.''

''சத்தியாக்கிரகம் பண்ணவா ?'' என்று கேட்டான் சோமு சிரித்துக் கொண்டே.

''எல்லாம் இப்போது சிரிப்பாய். நீயும் சத்தியாக்கிரகம் செய்யும் காலம் வரும்'' என்றார் நிக்ஷிதர். பிறகு தம்மோடு வந்தவரை அறிமுகம் செய்து வைத்தார்.

''இவன்தான் 'வெற்றி வீரன்'. பெரிய எழுத்தாளன். இவன் கதைகளைக் கயேச்சைப் பத்திரிகையில் போடுங்களேன்'' என்றார்.

''இவருடைய கதைகளை நீங்கள் படித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டான் சோமு.

''இல்லை. ஆனால், இவன் பெரிய எழுத்தாளன் என்று தெரியும். இவனுக்கு என்னுடைய ஊர்தான்'' என்றார் நிக்ஷிதர்.

''இவருடைய கதைகளை நம் பத்திரிகையால் தாங்க முடியாது!'' என்றான் சோமு.

''ஏன், அவ்வளவு பயங்கரமாக இருக்குமா ?'' — நிக்ஷிதர் கேட்டார்.

''ஊஹூம்.... அவ்வளவு ஆபாசமாயிருக்கும்.''

''வாழ்க்கையின் உண்மைகளைத் தத்ரூபமாக எழுதினால் அப்படித்தான் தோன்றும்'' என்றான் 'வெற்றி வீரன்'.

''அதைத்தான் ஏற்கனவே மிஸ் மேயோ என்ற ஒருத்தி செய்து விட்டாளே. நீங்கள் எதற்கு?'' என்றான் சோமு.

''வாழ்க்கையைத் தத்ரூபமாகக் காண்பதில் என்ன சார், தவறு? வாழ்க்கை அப்படி இருக்கிறது. சேரியில் வாழும் குப்பச்சியும் அம்மாசி சாம்பானும் அப்படித்தான் வாழ்கிறார்கள். அதைப் பற்றி உங்களுக்கு அக்கறை இல்லை. நான் அதை எடுத்துக் காட்டுகிறேன்'' என்றார் எழுத்தாளர்.


''அந்தச் சாம்பானையும், குப்பச்சியையும் பற்றி எழுத வேறு விஷயம் உங்களுக்கு அகப்படவில்லையா? அவர்களுடைய கற்பு எப்படியெல்லாம் இரையாகிறது என்பதைப் பற்றிக் கூறி அவர்களுடைய மானத்தை வாங்குவது தான் தத்ரூப எழுத்தாளரின் கடமையா?'' என்று கேட்டான் ரங்கமணி.

''அதுவும் அவர்களுடைய வாழ்க்கையில் ஓர் அம்சம்...'' என்று ஆவேசமாகக் கூறினார் தத்ரூப எழுத்தாளர். (தொடரும்)

இவரேதான் அவர்!

சுதந்திரக் கட்சியின் தலைவரும் சமீபத்தில் ஆந்திராவில் ஸ்ரீகாகுளத்தில் மகத்தான வெற்றி பெற்றுத் தில்லி மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸ்ரீ ரங்காவும் அவர் மனைவியும்தான். ஜனநாயகத்தைக் காக்கும் காவலர்களில் ஒருவரான ஸ்ரீ ரங்காவின் ஆவேசப் பேச்சை இனி நாடாளுமன்றத்தில் மறுபடியும் கேட்கலாம் என்று மகிழ்ச்சியடைவோம். ஸ்ரீ ரங்கா ஆந்திராவில் உள்ள நிடுபொரோலுவில் 1900ம் வருஷம் நவம்பர் 7ந் தேதி பிறந்தார். நாகய்யாவுக்கும் அச்சமாம்பாவுக்கும் புதல்வராகப் பிறந்த ஸ்ரீ ரங்கா நிடுபொரோலு உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போதே தமது பதினாறுவது வயதிலேயே இரவுப் பள்ளி நடத்தி, கல்வியறிவில்லாதவர்களுக்குப் போதித்து வந்தார். அது மட்டுமல்ல; ஒரு நூலகம் ஏற்படுத்திக் கல்வியறிவு பெற வகை செய்தார். இவர் ஏற்படுத்திய நூலகம் கண்டு பக்கத்துக் கிராமங்களிலும் ஏற்படுத்தினர்; இரவுப் பள்ளிகளும் பல கிராமங்களில் ஏற்பட்டன.

1920ம் வருஷம் ஆக்ஸ்போர்டு சென்ற ஸ்ரீ ரங்கா, ஐ. ஸி. எஸ். பரீட்சைக்கு எழுத மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். சம்பரான் குடியானவர் இயக்கமும், அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற சுயராஜ்ய இயக்கமும் உச்சநிலையை அடைந்தன. இந்திய சுதந்திரப் போராட்ட உத்வேகத்திலே ஐ. ஸி. எஸ். பரீட்சை எழுதுவதைத் துறந்தார். அதற்குப் பதிலாகப் பொருளாதார ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டார். ஆக்ஸ்போர்டில் அகில உலகத் தொழிலாளர் குழுவின் காரியதரிசியாக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது மனைவியார் ஸ்ரீமதி பாரதி தேவியோடு கூட்டுறவு முறை, சோஷலிச முறை ஆகியவை பற்றி விசேஷப் படிப்புப் படித்தார். பொருளாதாரத்தில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்று ஸ்ரீ ரங்கா இந்தியா திரும்பினார். ஸ்ரீ ரங்கா ஆரம்பித்த கிஸான் இயக்கம் வலுப்பட்டது. 1930 — 32ம் ஆண்டில் காந்திஜி ஆரம்பித்த சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்து கொள்வதற்காகத் தம் வேலையைத் துறந்தார். 1934ம் ஆண்டில் பேராசிரியர் ரங்கா மத்திய சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1935ம் ஆண்டில் ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவின் ஆதரவுடன் அகில இந்திய கிஸான் சம்மேளனத்தைச் சென்னையில் நடத்தினார். இவை ஒருபுறமிருக்க ராஜாஜி அவர்கள் தாம் ஆரம்பித்த சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஆசாரிய ரங்கா அவர்களுக்குத் தானே கொடுத்தார்? அப்படியானால் அவர் எத்தகைய ஒழுக்கசீலர் என்பதைச் சொல்லவும் வேண்டுமா ?



திரு என். ஜி. ரங்கா



புதியது!

வசதியானது

வைடமின் ஸி செறிந்துள்ள

இனிப்பான பானம்!



நாசூக்கான வாழ்வைச் சுவைக்க இன்றைய நவீன வழி பால்டாப். அது அலாதியான சுவையுள்ள இனிப்பு பானம். பாட்டில்கள் இல்லை. சேமிப்புத் தொல்லைகளும் இல்லை. ஒரு தம்ளர் குளிர்ந்த நீரில் ஒரு பால்டாப் வில்லையைப் போட்டாலே போதும்! தயாராகிவிடும்! புத்துணர்ச்சியூட்டும் பானம்! அதி உன்னதம்!

மறவாதீர்கள், சர்க்கரை கலவாத பால்டாப். உடம்பைப் பெருக்கவைக்கும் தாதுப்பொருள்கள் இல்லாதது. அருந்தி, அருந்தி, மகிழுங்கள் ஆசை தீர!

பால்டாப்

இனிப்பான பான வில்லைகள்

எல்லா முக்கிய கடைகளிலும் கிடைக்கிறது

உங்கள் நம்பிக்கைக்குகந்த Boots பூட்ஸ் தயாரிப்பு

செய்திப் படங்கள்



மேட்டூரில் ஐந்து கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள கெமிக்கல்ஸ் அண்ட் பிளாஸ்டிக்ஸ் தொழிற்சாலையைப் பெட்ரோலியம், ரசாயனத் தொழில் மந்திரி திரு அசோக் மேத்தா தொடங்கி வைத்தார். இந்தத் தொழிற்சாலையை அவர் தமிழக முதல் அமைச்சரோடு சென்று பார்வையிடுகிறார்.


★



பீஹார் பஞ்ச நிவாரண கமிட்டியின் கூட்டுறவோடு பக்ரி பரவான் ஆர்ய சமாஜின் இளைஞர் பஞ்சாப் சோளத்தைப் பீகாரில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட ருல்னி கிராம மக்களுக்கு வழங்குகின்றனர்.

★

கலா நிகேதன் பதின்மூன்றும் ஆண்டு விழா ஏப்ரல் 28ந் தேதி ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடந்தது. திரு அண்ணாதுரை தலைமையில் மேயர் சம்பந்தம் விழாவைத் தொடங்கி வைத்தார். படத்தில் கலா நிகேதன் தலைவர் திரு எஸ். என். மூர்த்தியையும் செயலாளர் திரு என். பாலசுப்பிரமணியம், அறிஞர் அண்ணாதுரை அவர்களுக்கு மலர் மாலை அணிவிப்பதையும் காணலாம்.



வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

அத்தியாயம் 7

வேலவன் தந்தை

இரவு நேரத்தில் எதிர்பாராத வகையிலே பலகணி வழியாகச் சிறைக் கூடத்துக்குள் வந்து விழுந்த நூற் கண்டைக் கண்டதும், அதன் நுட்பத்தை கணித்து உணர்ந்த வேலவன் கோதை மிகுந்த மனத் திட்பத்தோடு செயல் புரிந்தான்!

வெளியே சென்ற நூல் சற்று நேரத்துக்கெல்லாம் அசைவு கொடுத்தது. உடனே அதை மறுபடியும் 'விறுவிறு' என்று உள்ளே இழுக்கத் தொடங்கினான் வேலவன்.

மெல்லிய நூல் இழையிலே இப்போது சற்றுத் திடமான கயிறு கட்டப்பட்டு அது மேலே வந்தது. பலகணி வழியாக அதை இழுத்தான். மறுபடியும் அதன் நுனியைப் பிடித்துக் கொண்டு மீண்டும் அந்தக் கயிற்றுச் சுருளை வெளியே எறிந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தக் கயிற்றையும் விட வலிமை பொருந்திய பெரிய கயிறு ஒன்று அதன் நுனியிலே கட்டப்பட்டு மேலே வந்தது. அதை இழுத்தான்.

'விறு விறு' என்று சிறிய நூலிலே பெரிய நூல், அந்தப் பெரிய நூலிலே அதைவிடப் பெரிய கயிறு, பிறகு அதன் நுனியிலே இன்னும் கனமான கயிறு என்று மளமளவென்று மேலே பலகணி வழியாக வந்தது.

வேலவன் கோதைக்கு இப்போது உறுதி ஏற்பட்டது. இந்தப் பெரிய கயிறு தன்னைத் தாங்கிக் கொள்ளும். பிடித்து ஏறுவதற்குப் போதுமான உறுதியும் கனமும் வாய்ந்தது அது.

வேலவன் அந்த உறுதியான கயிற்றைப் பலகணிக் கம்பியிலே கொடுத்து வாங்கி, அதைப் பிடித்துக் கொண்டு விறுவிறுவென்று ஏறினான். இதோ பலகணியைப் பற்றிப் பிடித்தான். அடுத்து அந்தப் பலகணி வழியாக வெளியே பார்த்தான். உயரமான கவுதத்திலிருந்து கீழே பார்த்தால் ஒரு மனித உருவம் மதிலுக்கு வெளியே சிறைக்கூடத்து மாஞ்சோலையிலே நின்று கயிறுகளை இயக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

வேலவன் கயிற்றைக் கீழே விட்டான். சற்று நேரத்தில் அந்தக் கயிற்றிலே ஒரு நூலேணி பிணைக்கப்பட்டு வேகமாக மேலே வந்தது. விறுவிறு என்று அந்த நூல் ஏணியை மேலே இழுத்து, மூடி விழிக்கும் நேரத்தில் 'சரசர' வென்று மதிற் சுவரோடு



சுவராகக் கீழே இறங்கிச் சரிந்தான் வேலவன்.

வணக்கம் செலுத்தியவாறு சேர நாட்டுத் தானைத் தலைவனை வரவேற்றான் கீழே காத்துக் கொண்டிருந்த வீரன்.

''நாம் இப்போது வேகமாக வெளியே தப்பிச் செல்கிறோம். கருணை கூர்ந்து என்னோடு வாருங்கள்!''

இவ்வாறு கூறினான் அந்த வீரன். இருவரும் மாஞ்சோலையில் நடந்தார்கள் விரைவாக!

பொய்கையின் கரையிலே நீண்டு படர்ந்திருந்த படிக்கட்டுக்கு அருகிலே ஒரு பெரிய பாவைச் சிலை நின்றது. வீரன் அந்தப் பாவைக்கருகிலே சென்று அதன் பாதங்களைப் பிடித்துத் திருகினான். என்ன வியப்பு! நிலத்திலிருந்து அந்தப் பாவை பெயர்ந்து வந்தது. அதன் அடியிலே ஒரு பெரிய தாமரைக் கல். அகலமான அந்தத் தாமரைக் கல்லை மிக எளிதாகப் பெயர்த்து எடுத்து அப்புறம் வைத்தான் வீரன். கீழே ஒரு பெரிய சுரங்கப் பாதை!

வேலவனும் அந்த வீரனும் சுரங்கப் பாதை வழியாக 'மளமள' வென்று படர்ந்தார்கள். கீழே கீழே போய்க் கொண்டிருந்த பாதை இருளாக இருந்த போதிலும் ஒரே நேராகச் சென்று இடதுபுறம் திரும்பியது. தயங்காமல் நில்லாமல் வீரன் முன்னால் நடந்தான். வேலவன் அவனைப் பின் தொடர்ந்தான்.



இடது புறம் பாதை திரும்பியதும் அங்கே தீவட்டி ஏந்தியவர்களாக இரு வீரர்கள் நின்றார்கள்! இப்போது அந்தப் பாதை முழுவதும் நெருப்பின் ஒளி பாய்ந்தது.

வீரர்கள் அனைவரும் சுரங்கப் பாதையிலே இடது புறம் திரும்பி விரைவாக நடந்தார்கள்.

பாதை இப்போது மேலே ஏறியது. இதோ அந்தச் சுரங்கப் பாதை ஒரு பெரிய கானகத்தில் விரிந்து படர்ந்திருந்த ஆலமரத்தின் அடியிலே வந்து வாய் திறந்தது!

வேலவனும் வீரர்களும் வெளியே வந்தார்கள்.

எத்தனை பெரிய காடு அது! துளு நாட்டுச் சிறைக் கூடத்துக்கு அப்பால் அதைச் சுற்றி இத்தனை பெரிய கானகமா இருக்கிறது என்று வேலவன் கோதை வியப்போடு பார்த்துக் கொண்டு நிற்கும்போதே இரண்டு வெண் புரவிகளை நடத்திக் கொண்டு வந்தார்கள் இரண்டு வீரர்கள்.

"என் பெயர் அழலாடி! நாம் இருவரும் இப்போது ஆகனரின் மற்கூடத்துக்குச் செல்லுகிறோம்!"

இவ்வாறு வேலவனிடம் கூறினான் வேலவனை வெளியேற்றி அழைத்து வந்த அந்த வீரன்.

இருவரும் குதிரைகளிலே ஏறினார்கள். மற்ற வீரர்கள் இவர்களுக்கு வணக்கம் செலுத்தினார்கள். தீவட்டிகள் அணைந்தன. அந்தக் கானகத்திலே மறுபடியும் இருள் கவிந்தது. அந்தக் கரிய இரவைக் கிழித்துக்கொண்டு மிகுந்த விரைவோடு பாய்ந்தன வெண் புரவிகள். முன்னால் சென்ற புரவியிலே அழலாடி ஒரே மௌனமாக அமர்ந்து குதிரையின் விரைவை மேலும் ஊக்கினான்.

ஃ ஃ ஃ



"அழலாடியை நீங்கள் இதற்கு முன் பார்த்திருக்கமாட்டீர்கள். புதிய அறிமுகம்தான்!" என்றார் ஆகனர்.

"ஆமாம்; புதிய அறிமுகம்தான். ஆனாலும் நெடுநாள் அறிந்த முகம் போல் ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. சில விநாடிகளிலேயே அவருடைய உள்ளம் எனக்கு நன்கு அறிமுகமாகி விட்டது" என்றான் வேலவன்.

"தமிழகத்தின் எதிர்காலப் போர்களிலே சேரர்களுக்கு வலக்கரமும் இடக் கரமுமாக இயங்க வேண்டிய வீரர்கள் நீங்கள்! ஒத்த உணர்ச்சியும் ஒத்த குறிக்கோளும் இருப்பதால் மிக விரைவில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டுவிட்டீர்கள்!" என்றார் ஆதன் ஆசிரியர்.

"தாங்கள் முதன் முதலாக எனக்கு அனுப்பி வைத்த மடக்கோலைதான் எல்லாவற்றுக்கும் காரணம்! நம்பிக்கையை இழந்து, ஏதும் புரியாமல் உள்ளம் மிகவும் குழம்பி நின்ற நிலையிலே சிறைக்கூடக் காவலர் தலைவன் அந்த அன்புச் செய்தி தாங்கிய அரிய மடக்கோலையை என்னிடம் கொடுத்தான். இழந்த உள்ளத்தை மீண்டும் தருவது போல!"

இவ்வாறு நன்றி ததும்பிய குரலிலே கூறினான் வேலவன் கோதை.

"மிஞிலியின் வீழ்ச்சியும், துளு நாட்டின் மறு வாழ்வுமே இந்த வீரர்கள் அனைவரும் ஒருமித்துக் காண்கிற அன்புக் கனவு! இளநன்னன் அத்தனை நல்ல குழந்தை! தப்பிப் பிறந்த பிள்ளை. அந்த அரச குடும்பத்திலே இப்படி ஒரு தங்கமான இளவரசன் பிறந்திருப்பதால்தான் இன்னும் துளுநாட்டின் எதிர் காலத்தில் எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. அந்தச் செய்திகளையெல்லாம் ஓய்வோடு இருந்து பேச வேண்டும். அழலாடி அதையெல்லாம் உங்களுக்குச் சொல்லுவான். நீங்கள் இப்போது சற்று இளைப்பாறிவிட்டு மீண்டும் ஒரு நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இருவருடைய வரவையும் எதிர்பார்த்து மிகுந்த ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார் கொங்குச் சேரர்! அவரை நீங்கள் சந்திப்பதுவரை என்னுடைய பொறுப்பு பெரியதொரு அரசப் பொறுப்பு. அவரிடம் நீங்கள் சேர்ந்துவிட்டால் பிறகு துளு நாட்டு நன்னர்களை எதிர்த்து ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் மும்முனைப் போரிலே நன்றாகச் சூடு பிடித்துவிடும்!" என்றார் ஆகனர்.

"மும்முனைப் போரா?" என்று கேட்டான் வேலவன் கோதை.

"ஆமாம். ஆய் எயினனுடைய தலைமையிலே பாழியிலே நடந்த போரில் மிஞிலியின் வேல் எயினனைக் கொன்று மதிப்பு மிகுந்த அந்த நல்ல உயிரைக் குடித்துவிட்டதல்லவா? அதிலிருந்து, நார்முடிச் சேரல் துயரமும் ஆத்திரமும் அடைந்து வெகுண்டு போயிருக்கிறார். முடி சூடிய புதிதில் ஒரு வேகத்தில் சற்று அவசரப்பட்டு எயினனைப் போருக்கு அனுப்பித் துளு நாட்டைத் தாக்கிவிட்டதாகவும், இனி அப்படி

அவசரப்படக் கூடாது என்றும், சேர மன்னர் நன்றாக உணர்ந்து கொண்டு விட்டார். அதனால்தான் உங்களைப் போன்ற தானைத் தலைவரின் மீட்சியிலே இத்தனை விரைவோடு சடுபட்டுச் செயல்களை இயக்கினார் அவர்!''

ஆதன் ஆசிரியர் இவ்வாறு சொன்னதும் மிகுந்த ஆவலோடு அவரை வேலவன் கேட்டான்:

''ஆசிரியர் பெருமானே! அப்படியானால் எங்கள் அரசருக்கு நான் சிறை புகுந்த வரலாறும், புன்னாட்டின் உள் நிலையும் முழுமையாகத் தெரியுமா இப்போது? உங்கள் மாணவர்கள் அத்தனை விரைவோடு பணி புரிகிறார்களா?''

ஆதன் ஆசிரியர் சிரித்தார்.

''வேலவரே! அழலாடியைப் போல் வீரமும் உளவு ஆற்றலும் நிரம்பிய பல வீரர்களை மாணவர்களாகப் பெறும் பேறு எனக்கு இறைவன் வழங்கியிருக்கிறான். எல்லோருடைய குறிக்கோளும் ஒன்றாக இருப்பதால் இத்தனை விரைவோடு இவர்கள் வீரமாகச் செயல் புரிகிறார்கள். கொங்கு நாட்டுக்குப் போய்ச் சேர்ந்த பிறகு அங்கு உருவாகிக் கொண்டிருக்கும் ஆனைப் படையை நீங்கள் பார்த்தால் வியப்பும் உவகையும் மேலும் மேலும் அடைவீர்கள்!''

''ஆனைப் படையா? கொங்கு நாட்டின் ஆனைப் படை பற்றி ஏற்கனவே ஓரளவு தெரியும் எனக்கு. அகப்பா நகரத்தை வென்று தீயிட்டபோது அந்த ஆனைப் படை எத்தகைய வீரச் செயல் புரிந்தது என்பது பற்றி எங்கள் பழைய அரசர் அடிக்கடி வியப்போடு பேசுவதுண்டு!'' என்றான் வேலவன் கோதை.

''வேலவரே! அந்த வீரம் மிகுந்த ஆனைப் படையை மேலும் விரிவுபடுத்தியிருக்கிறார் கொங்குச் சேரர். மும்முனைப் போரிலே கொங்குச் சேரரின் ஆனைப் படை முக்கியமான பங்கு கொண்டு துளு நாட்டைத் தாக்கப் போகிறது. அந்தப் பெரும் போரிலே தான் என்னுடைய மாணவன் அழலாடியை இந்தத் தமிழகம் நன்கு புரிந்து கொள்ளப் போகிறது'' என்று உள்ளக் களிப்போடு கூறினார் ஆதனார்.

இதன்பின்னர், வேலவனும், அழலாடியும் மற்கூடத்திலே ஆதனாரின் அன்பிலும் உபசரிப்பிலும் இளைப்பாறிவிட்டு மறுபடி கொங்கு நாட்டுக்குப் புறப்பட ஆயத்தமானார்கள். அப்போது ஆதன் ஆசிரியர் சொன்னார்:

''வேலவரே! சில நாட்களுக்கு முன் அழலாடியைக் கொங்கு மன்னரிடம் நான் ஒப்படைத்தபோது தன்னந் தனியாக இருக்கிறானே மாணவன் என்று தயங்கினேன். இன்றிலிருந்து அந்தத் தயக்கமும் நீங்கிற்று. உங்களுடைய வரவும், உங்களுடைய உள்ளப்பாங்கும் பார்த்து இதயம் களிக்கிறது. நீங்கள் இருவரும் இணை பிரியாத இரட்டையர்களாக என்றென்றும் விளங்கி, இந்தத் தமிழகத்தின் மறுமலர்ச்சியிலே வீர நறுமணம் பரப்ப வேண்டும் என்பதே என் ஆசை! கொற்றவை துணை செய்வாளாக!''

ஆதன் ஆசிரியர் இரண்டு வீரர்களையும் எல்லையில்லாத அன்போடு வாழ்த்தினார்.

''அழலாடி! சேர நாட்டுத் தானைத் தலைவரின் மீட்சி பற்றிய செய்தியை நார்முடிச் சேர மன்னருக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு என்னுடையது. அதையொட்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டு இன்னும் ஒரு வாரத்தில் நான் கொங்கு வஞ்சிக்கு வருகிறேன். மன்னரிடம் என் வணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவிப்பாயாக!'' என்றார் ஆதனார்.

புரவிகள் புறப்பட்டன!

* * *



''துளு நாட்டிலிருந்து உன்னை நேரே நார்முடிச் சேரரிடம் சேர்ப்பிக்கவே முதலில் இட்டமிட்டிருந்தேன். ஆனால் அப்படிச் செய்யாமல் இங்கே அழைத்துக்கொண்டதில் ஒரு முக்கிய நோக்கம் இருக்கிறது!'' என்றார் கொங்குச் சேரர் வேலவனைப் பார்த்து.

கொங்கு வஞ்சி நகரத்தின் வேனில் மாடத்து உம்பரில் வேறு யாரும் அப்போது இல்லை. கொங்குச் சேரர் வேலவன் கோதையிடம் ஏதோ தனியுரையாக ஒரு முக்கிய செய்தியைக் கூற விரும்பி அவனை அழைத்து அவ்வாறு பேசத் தொடங்கினார்.

''மன்னர் பெருமானே! தங்களுடைய நோக்கம் எதுவானாலும் இந்தத் தருணத்தில் கொங்கு நாட்டுக்கு நான் வர நேர்ந்தது குறித்து மட்டில்லாத மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் கொங்கு நாட்டை நீங்கள் பிடிப்பதற்கு முன் நமது சேர நாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் இடையே உள்ள உம்பல் காட்டைக் கைப்பற்றிய வரலாற்றைப் பற்றி நமது பழைய மன்னர் அடிக்கடி வியந்து வியந்து பேசியதுண்டு. உம்பல் காட்டைக் கைப்பற்றிய வரலாறும்,


VT VOILES
வாயில்களில்
ஒரு புதிய பெயர்
தென்றாடு அளிக்கும்
முதல் வாயில்
எழில் மங்கையர்க்கேற்ற
எழில் வாயில்கள்
மீனாக்ஷி மில்ஸ்
குரூப்பைச் சேர்ந்த
விருதுநகர்
டெக்ஸ்டைல்ஸின்
தரமான தயாரிப்பு.
விற்பனையாளர்கள் :
பி. ஆர். அண்டு சன்ஸ் (பி) லிமிடெட் மதராஸ்—ஊட்டி
Nalin-VT-157-TM

பெரிய பெரிய மதில்களை உடைய அகப்பா நகரத்தைத் தாக்கிப் பிடித்து அதைத் தீயிட்டுக் கொளுத்திய வரலாறும் அரசருடைய நினைவிலே என்றென்றும் பசுமையாக இருந்தன. அந்தப் போரை நேரிலே சென்று காணவில்லையென்றாலும் அதிலே பங்கு கொண்டு செயலாற்றிய வீரர்கள் எல்லாரும் அத்தனை வியப்போடு சேரலாதனிடம் அதுபற்றிக் கூறியிருக்கிறார்கள். அதனால் மன்னர் உள்ளத்தில் அந்தப் போர் அத்தனை உறுதியோடு பதிந்து விட்டது!'' என்றான் வேலவன்.

''அதுமட்டுமில்லை!'' என்று சொல்லிக்கொண்டே புன்முறுவல் செய்தார் கொங்குச் சேரர்.

''வேலவா! அகப்பா நகரத்தைத் தீயிட்டுக் கொளுத்திய அந்த மாபெரும் போரிலே இமய வரம்பனுடைய தம்பிக்குப் பெரும் துணையாக இருந்தது யார் என்று உனக்குத் தெரிந்திருக்காது. ஏனென்றால் அந்தப் போர் நடந்தபோது நீ சிறியவன்கூட இல்லை. தவழும் குழந்தையாக இருந்திருப்பாய்!''

சேர மன்னர் அந்த வேனில் மாடத்திலே நடந்து கொண்டே புன்முறுவலினூடே ஏதேதோ பழைய நினைவுகளை மலர விட்டார். அவருடைய முகத்தையே ஆவலோடு பார்த்தவாறு வேலவன் நடந்தான்.

''தம்பி, வெள்ளைத் தீவிலே நீ சென்று உளவு கண்டதும், பிறகு நேர்ந்த நிகழ்ச்சிகளும், அதன் பின்னர் செங்குட்டுவனும் நீயும் கடல் மீது சென்று வீரம் மிகுந்த போர் நிகழ்த்தி வான மண்டலக் கடம்பனை அழித்ததும், தமிழக வரலாற்றில் அழியாது நிற்கப் போகிற அரிய நிகழ்ச்சிகள். ஆனால் இத்தனை நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படையிலே மற்றொரு முக்கிய நிகழ்ச்சி மறைந்துள்ளது. உன்னை வெள்ளைத் தீவுக்கு அனுப்பும்போது அதை உன்னிடம் சேரலாத மன்னர் கூறியிருக்க மாட்டார் என்றே நினைக்கிறேன். ஏனென்றால் வீர உவகையோடு ஒரு பெரிய பணியிலே செல்ல முனைந்து நிற்கும் காளைத் தலைவனிடம் துயர நிகழ்ச்சிகளை நினைவு படுத்துவது மரபில்லை அல்லவா?''

இவ்வாறு சொல்லி ஒரு விநாடி மௌனமாக இருந்தார் அரசர். பிறகு வேலவனைப் பார்த்துக் கேட்டார்.

''கொற்றவைக்கு விழாக் கொண்டாடி, அந்த விழாவில் புனிதமான சூழ்நிலையிலே உன்னைத் தனியாக அழைத்து, உன்னிடம் வெள்ளைத் தீவைப் பற்றிக் கூறிய அரசர் உன் தந்தையைப் பற்றி என்ன சொன்னார் என்று உனக்கு நினைவு இருக்கிறதா?''

இவ்வாறு கேட்டார் மன்னர். வேலவன் சொல்லுவான்:

''மன்னர் பெருமானே! சேர மன்னர்களுக்குச் சம்பந்திகள் என்ற உறவு முறையிலே திகழ்கிற எங்கள் குடும்பத்தையும், மறைந்து போன என் தந்தையையும் பற்றி மிகுந்த பெருமையோடு பேசினார் சேரலாத மன்னர். அதோடு நான் மேற்கொண்டுள்ள அந்த வெள்ளைத் தீவுப் பணியிலே எனக்குக் கொற்றவைத் தெய்வத்தின் வாழ்த்தோடு என் தந்தையின் வாழ்த்தும் கலந்து நிற்பதாகச் சொல்லி, எனக்கு ஊக்கமூட்டினார்'' என்று சொன்ன வேலவன் அப்படியே ஒரு விநாடி அந்த நினைவிலே வசமாகி நின்றான். அயிரை மலையும், அந்த மலையிலே மிகுந்த பெருமைகளோடு 'பம்பம்' என்று முழங்கிய இசை ஒலிகளுக்கு நடுவே நடைபெற்ற கொற்றவை விழாவும், வானகத்துத் தேவதைகள் வையத்திலே வந்து நின்று வழங்கிய வாழ்த்தொலிகளும், ஆயிரம் ஆயிரம் மக்கள் மொய்த்து நின்ற விழாக் காட்சியும்—எல்லாம் வேலவன் கண் முன் நின்றன. இரவு அகன்றதும் வானிலே வெள்ளி முளைத்ததும். செங்கோட்டு யாழிலே உதயப் பண் எழுந்து இசைத்ததும் எல்லாம் நினைவிலே வட்டமிட்டன. மலைக் கோயிலுக்குச் சற்றுத் தொலைவிலே அருவிக் கரையும், பாறைமீது நின்ற கடம்ப மரமும், அந்தக் கடம்ப மரத்தின் அடியிலே தன்னை மட்டும் தனியாக அழைத்துப் பேசிய சேரலாத மன்னரும், வேலவனுக்கு எதிரே வந்து நிற்கவே அந்த ஆயமான அரச மொழிகள் . இப்போது வேலவன் கோதையின் செவிகளிலே ஒலித்தன.

''வேலவா! உன் தந்தை எங்கும் போய்விடவில்லை. சேரப் பேரரசு தன்னுடைய பகைவர்களை யெல்லாம் வீழ்த்தி வெற்றி வாகை சூடுகிறவரை அவர் நமக்கு உறுதுணையாக, கண்களுக்குத் தெரியாமல் நம்முடனேயே இருக்கிறார்.''

சேரலாத மன்னர் கூறிய இந்தச் சொற்கள் நினைவு மண்டலத்திலிருந்து அப்படியே தெளிவாக ஒலித்தன வேலவனுக்கு. கொங்குச் சேர மன்னனிடம் அவன் சொன்னான்.

''என் தந்தை வெள்ளைத் தீவு உளவுப் பணியிலே தோன்றாத் துணையாக இருந்து உதவிபுரிவார் என்று என்னை வாழ்த்தினார் மன்னர். அந்த வாழ்த்து மொழிகள்

இப்போதும் என் செவியில் ஒலிக்கின்றன.''

வேலவன் இப்படிக் கூறியதும் கொங்கு மன்னர் முக மலர்ச்சியோடு சொல்லுவார்:

''வேலவா! அது முற்றிலும் உண்மையான உறுதிமொழி! ஏனென்றால் உன்னுடைய தந்தையின் வாழ்வுக்கும் வெள்ளைத் தீவுக் கடம்பர்களின் வீழ்ச்சிக்கும் அத்தனை நெருங்கிய இணைப்பு இருக்கிறது!''

''மன்னர் பெருமானே! அப்படியா சொல்லுகிறீர்கள்? என் தந்தைக்கும் வெள்ளைத் தீவுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறதா என்ன?'' என்று ஆவல் பொங்கக் கேட்டான் வேலவன்கோதை.

''உண்மையில் சேரர் படையிலும் அரசச் சுற்றத்திலும் எத்தனையோ வீரர்கள் இருந்தும்கூட வெள்ளைத் தீவுப் பணியிலே உன்னைத் தேர்ந்தெடுத்து ஈடுபடுத்தினார் சேரலாத மன்னர். அதற்குக் காரணமே உன் தந்தையின் வாழ்விலே நேர்ந்த அந்தத் துயரநிகழ்ச்சி தான்! அதனால்தான் நீ அங்கே செல்ல வேண்டிய கடமை உனக்கு நேர்ந்தது!'' என்று சொல்லி வேலவனுக்கு அந்த நிகழ்ச்சியைக் கூறத் தொடங்கினார் கொங்கு மன்னர். **(தொடரும்)**

உலகமெல்லாம் தமிழோசை

அகில உலகத் தமிழ் மகாநாடு சென்ற ஆண்டு மலேயாவின் தலைநகரான கோலாலம்பூரில் விமரிசையாக நடந்தேறியதைத் தமிழர்கள் இதற்குள் மறந்திருக்க முடியாது. அந்த மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களுள் ஒன்று இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இதே போன்ற அகில உலகத் தமிழ் மகாநாடு கூடித் தமிழின் தொன்மை, சிறப்பு வளர்ச்சி ஆகியவை குறித்து ஆராயவும் விவாதிக்கவும் வேண்டும் என்பதாகும். அதோடு இரண்டாவது மகாநாடு தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் நடைபெற வேண்டும் என்றும் முடிவாயிற்று.

1968 தொடக்கத்தில் சென்னையில் நடைபெறவிருக்கும் இந்த மகாநாடு பற்றிய ஒரு பூர்வாங்கக் கூட்டம் சென்னை அசோகா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. இம்மாநாட்டின் பிரதம காரியதரிசியும் பொருளாளருமான ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார் அனைவரையும் வரவேற்றார். மகாநாட்டின் இயக்குநர்களுக்குத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள நாவலர் நெடுஞ்செழியன் இந்த விழாவின் அருமை பெருமைகளையும் நோக்கங்களையும் எடுத்துரைத்தார். மலேயாவில் நடந்ததைவிடச் சிறப்பாக இல்லாவிட்டாலும் அதற்கு இணையாக வேனும் இரண்டாவது மகாநாட்டை நடத்த வேண்டும் என்றார். தமிழின் பெருமையையும் தமிழரின் தொன்மையான பண்பாட்டுச் சிறப்பையும் உணர்த்தும் வகையில் ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்ய வேண்டும்; அயல்நாடுகளிலிருந்தும் பாரதத்தின் பல்வேறு ராஜ்யங்களிலிருந்தும் வருவோரைத் தமிழகத்தின் கலைச் சிறப்புமிக்க ஊர்களுக்கெல்லாம் அழைத்துச் சென்று காட்ட வேண்டும்; மகாநாடு நடக்கும் தினங்களில் மாலை நேரங்களில் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் — இப்படியெல்லாம் நல்ல யோசனைகளைக் கூறினார் நாவலர் நெடுஞ்செழியன். ''அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இதற்கு நிச்சயம் இருக்குமென்றாலும் இதில் மக்களும் பங்கெடுத்துக் கொண்டால்தான் முழுமை பெற்றுச் சோபிக்க முடியும்'' என்றார்.

''அகில உலகத் தமிழ் மகாநாட்டுக்குச் சுமார் எட்டு லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அயல்நாடுகளிலிருந்தும் பாரதத்தின் பகுதிகளிலிருந்தும் வரும் ஏராளமான அறிஞர் பெருமக்களை நல்லபடியாக வரவேற்று வசதியாக அவர்களைத் தங்கி இருக்கச் செய்து உபசரிக்கவும்; மற்றும் சுற்றுலா, கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யவும் மகாநாட்டின் பிற செலவினங்களுக்கும் இந்தத் தொகை அதிகமல்ல. அப்படி அதிகம் என்று நினைப்பவர்கள் இதனால் தமிழுக்கும் தமிழரின் பண்பாட்டுச் சிறப்புக்கும் உலகம் முழுவதும் கிடைக்கும் புகழை எண்ணிப் பார்க்க வேண்டும்'' என்றார் திரு நெடுஞ்செழியன்.

இக்கூட்டத்திலேயே சென்னைத் தொழிலதிபர்கள் பலர் தமிழ்த் தாய்க்குத் தங்கள் காணிக்கையாக இந்தத் தமிழ் மகாநாட்டுக்குத் தாராளமாக நன்கொடை அறிவித்தனர். தாராப்பூர் கம்பெனி வி. எஸ். லோகநாத முதலியார் அவர்களும், ஸவுத் இந்தியா ஷிப்பிங் கார்ப்பொரேஷன் டி. எஸ். நாராயணசுவாமி அவர்களும் தலா ரூபாய் இருபத்து ஐயாயிரம் தருவதாகக் கூறினார்கள். ஸிம்ஸன் குரூப் கம்பெனிகளைச் சேர்ந்த ஸ்ரீ சிவசைலம் ரூபாய் பத்தாயிரம் நன்கொடை அறிவித்தார். ஈஸன் இன்ஜினீரிங் ஸ்ரீ ஈசுவரன், என்பீல்ட் இந்தியா ஸ்ரீ கே. ஆர். சுந்தரம் அய்யர் ஆகியோர் ரூபாய் ஐயாயிரம் தருவதாக அறிவித்தனர்.


மேற்படி பட்டியலைப் படித்த நேயர்கள் பயந்துவிட வேண்டாம். தமிழார்வம் காரணமாக அன்புடன் தரப்படும் தொகை எதுவாக இருந்தாலும் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும். சிறுதுளி பெருவெள்ளமென அவை பெருகி நலம் பயக்கும்.

மகாநாடு சம்பந்தமாக யோசனைகள் கூறவோ நிதி உதவி செய்யவோ விரும்புவோர்: ''இரண்டாவது அகில உலகத் தமிழ் மகாநாடு காரியாலயம்'' சவுத்திரி காலனி, சென்னை—34 என்ற விலாசத்துக்கு எழுதித் தொடர்பு கொள்ளக் கோருகிறோம்.





எம்ஜிஆர்
நடிக்கும்
சத்யராஜாவின்
சென்னை
பாரகன்
மகாராஜா
சயானி
சீனிவாசா
மற்றும்
தென்னகமெங்கும்
அரசகட்டளை
டைரக்ஷன்
M.G.சக்ரபாணி
தயாரிப்பு
M.C.ராமமூர்த்தி
ELEGANT



உணவு படைத்துத் தண்ணீரும் தந்து அடியார்களை உபசரித்து வந்தார் பரஞ்சோதியார். சிவபெருமானுடைய திருத்தொண்டர்களை வழிபடும் அன்பின் மிகுதியால் அடியவர்களின் திருமுன்பு பரஞ்சோதியார் மிகவும் அடக்கமாக உடம்பை வணங்கிச் செல்லுவார். அதனால் இவரைச் சிறுத்தொண்டர் என்று உலகம் உரைப்பதாயிற்று.

சிவபெருமானுடைய திருவருளினால் நிறைந்த தவமுடைய சிறுத்தொண்டருடைய மனைவியார் கருக் கொண்டார். வலம்புரிச் சங்கில் ஆணிமுத்து கருவடைந்தது போன்ற அக்கரு முதிர்ந்து நாளும் கோளும் நன்னிலை பெற்ற ஒரு நன்னாளில் சீராளதேவர் என்ற திரு மைந்தர் அவதரித்தார். சீராளதேவர், தாய் களிக்கத் தந்தை களிக்கத் தமர்களிக்க வளர்ந்துவந்தார்.

அந்நாளில் புகலியில் வந்து அவதரித்த திருஞானசம்பந்தர் தமது தொண்டர் குழாத்துடன் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளினார். சிறுத்தொண்டர் தமது திருமாளிகையில் அவரை இருத்தி அவருடைய திருவடி பூஜை செய்து ஞானபோனகருக்கும் உடன்வந்த அடியார்களுக்கும் பல நாட்கள் திருஅமுது அளிக்கும் பேற்றினைப் பெற்றார்.

சிறுத் தொண்ட நாயனார் பற்றற்ற தொண்டின் பெருமையை உலகத்துக்கு உணர்த்தி உய்விக்கத் திருக்கயிலாயபதி திருவுளங் கொண்டருளினார். அவ்வாறு திருவுளங் கொண்ட தேவ தேவர் வைரவ சந்நியாச வடிவம் கொண்டருளினார்.

சிவந்த சடா மகுடமானது, கரிய முகிலினம் மொய்த்து எழுந்ததுபோல் சுருண்ட கரிய மயிர் முடி கவின் செய்தது; அம்முடியில் உடுக்குலங்களைப் பதிய வைத்தாற் போன்று தும்பை மலர்கள் துலங்கின; திருநீற்றுப் புண்டரத்துக்கு இடையே பிறை மதியைச் சிறியதாக்கி வைத்தது போன்ற பொட்டு பொலிவு செய்தது. திருச்செவியில் இரத்தின மணியுடன் கூடிய சங்க 'வெண் குழையும், அதில் செருகிய செவ்வரத்தம் பூவும் இரு பக்கங்களிலும் எழில் புரிந்தன. திருக் கழுத்திலே உள்ள நீலகண்டம் மறையும்படி, அமுதக் குமிழி போன்ற பளிங்கு மணிவடங்கள் கட்டப்பெற்று, கண்டார் உயிரையும் உடம்பையும் உருக வைத்து ஒளி செய்தன. செய்ய மேனியில் கஞ்சுகமும், சங்கு மாலையால் ஆகிய சன்ன வீரமும், தோள் வளையங்களும் கடி சூத்திரமும் திருவடியில் பொற்கலனும் அழகு செய்தன. 'உலகினரே! அடியவர்கட்கு அரனார் புரியும் திருவருளின் எளிமையை உணர்ந்து உய்மின்கள்; அன்பின் வழியில் நிற்பீர்களாக' என்று அறைவன போன்று திருவடிகளில் மணிச் சிலம்புகள் இனிது ஒலித்தன. இடத் திருக்கரத்தில் திரிசூலமும், வலத்திருக் கையில் தமருகமும் விளங்கின. நிலஞ்செய் தவத்தால் திருவடித் தாமரை நிலத்தில் ஆடவும், அழகு பொழியும் திருமுகத்தில் புன்முறுவலின் ஒளி வீசவும், மும்மலத்தின் வலியைக் கெடுக்கும் முச்சூலத்தின் வெயில் பரவவும் இறைவர் இத்தகைய திருக்கோலங் கொண்டு திருச்செங்காட்டங்குடியை அடைந்தருளினார். நாடோறும் ஆயிரக் கணக்கான அடியார்கள் அன்னம் உண்ணும் மனையில் அன்று ஒருவரும் வந்தாரில்லை. அடியார்களுக்கு அமுது செய்விக்கும் குறிக்கோளுடைய நாயனார் அது பற்றிப் பெரிதும் வருந்தினார்.

தமது விரதத்துக்கு இடையூறு வரக் கூடாதே என்று பெரிதும் அஞ்சினார். அதனால் அடியாரைத் தேடிக் கொண்டு வெளியே போயிருந்தார்.

வைரவத் துறவியாக வந்த சிவபெருமான் மிகுந்த பசி உடையவர்போல், எதிரிலே கண்டவர்களை, ''சிறுத்தொண்டர் திருமனை எங்கே?'' என்று கேட்டுக் கொண்டு, அவருடைய திருமாளிகைக்கு முன்னே வந்து நின்றார். ''சிறுத்தொண்டர் உள்ளே இருக்கின்றாரோ ?'' என்று அழைத்தருளினார்.

மனைக்குள் இருந்த சந்தன நங்கை என்ற வேலைக்காரம்மை முன் வந்து, வைரவர் திருவடியைத் தொழுது, ''பெருமானே! முடிவில்லாத அடியார்களைத் தேடிக் கொண்டு நாயனார் வெளியே போயிருக்கிறார். உள்ளே வந்து இருங்கள்'' என்று கூப்பிட்டார்.

வைரவர் அம்மாதின் முகம் நோக்கி, ''அம்மா! பெண்கள் தனித்திருக்கின்ற இடத்துக்கு நாம் வரமாட்டோம்'' என்றார்.

இச்சொல்லை உள்ளிருந்து கேட்ட வெண்காட்டு நங்கையார், வந்த அடியார் சென்று விடுவார் போல் காணப்படுகின்றது என்று கருதி அஞ்சினார். மனைவாழ்வின் கடமை பூண்ட அவர் வாயிலிலே அடியார் முன்னால் வந்து தொழுதார்.

அம்பலவ ரடியாரை அமுதுசெய்விப்பார் இற்றைக்
கெம்பெருமான் அடியாரைக் கண்டிலர் ;
தேடிப் போனார்
வம்பெனநீர் எழுந்தருளி இருந்திரு வேடங்
கண்டால்
தம்பெரிய பேறென்றே மிக மகிழ்வர் ;
இனித் தாழார்

''அடிகளே! சிவனடியார்கள் ஒருவரும் அமுது செய்ய இன்று வாராமையால் அடியாரைத் தேடிக் கொண்டு அவர் வெளியே போயிருக்கிறார். தேவரீர் எழுந்தருளி யிருக்கின்றமை அறிந்தால் தமது பெரும் பேறு என்று மகிழ்ச்சியடைவார். இங்கு எழுந்தருளி யிரும்; விரைவில் வந்துவிடுவார். தாமதிக்க மாட்டார். இருந்தருளுவீர்'' என்று வேண்டிக் கொண்டார் அம்மை.

''அம்மா ! நாம் இருப்பது வட தேசம். புகலுதற்கரிய புகழுடைய சிறுத்தொண்டரைக் காணும் பொருட்டு வந்தோம். எவ்வகையானும் நாம் அவர் இல்லாத இவ்விடத்தில் இருக்க மாட்டோம். கணபதீச்சரம் கோயிலில் அழகிய மலர்கள் நிறைந்த ஆத்தி மரத்தின் கீழ் அமர்ந்திருக்கின்றோம். அவர் வந்தவுடன் நாம் இருக்கும் தன்மையைக் கூறுவீர்'' என்று உரைத்தருளி, கணபதீச்சரம் என்ற திருக்கோயில் சென்று திருவாத்தியின் கீழ் எழுந்தருளியிருந்தார் துறவி.

சிறுத் தொண்டர் அடியவர்களைத் தேடித் திரிந்தும், காணாது, வருத்தத்துடன் திருமாளிகை மீண்டு வந்தார்.

திருவெண்காட்டு நங்கையார் வைரவ சந்நியாசி வந்ததைக் கூறினார். நாயனார் அமுதுண்டார்போல் மகிழ்ந்தார். திருக்கோயிலை அடைந்து, திருவாத்தியின் கீழ் எழுந்தருளியுள்ள வைரவரைக் கண்டார். அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கி நின்றார்.

நின்ற தொண்டரை நோக்கி, ''பெரிய சிறுத்தொண்டர் என்பது நீர்தானோ ?'' என்று வைரவர் வாய் மலர்ந்து கேட்டருளினார்.

''எம்மையாள வந்த எந்தையே ! திருநீறணியும் அடியார்களை வணங்கும் திறம் அடியேனுக்கில்லை. ஆயினும், அடியார்கள் கருணையினால் அடியேனை அவ்வாறு கூறுவார்கள். குற்றமில்லாத சிவனடியார்களை அமுது செய்விக்கும் பொருட்டு இன்று இவ்வூரில் எங்கு தேடியும் அடியார்கள் கிடைக்கவில்லை. அடியேன் செய்த தவத்தினால் தங்களைக் கண்டேன். இனி தாமதிக்க வேண்டாம். அடியேனுடைய மனைக்கு எழுந்தருளி வந்து அமுது செய்ய வேண்டும்'' என்று தொழுது கூறினார் சிறுத்தொண்டர்.

''நிறைந்த தவமுடையீர் ! உம்மைக் காணும் பொருட்டே வந்தோம்; உண்ணும் பொருட்டல்ல. எமக்கு அமுதூட்ட உம்மால் முடியாது !'' என்றார் வயிரவர்.


''சுவாமீ! அடியேன் சிந்தியாமல் எதையும் செய்ய மாட்டேன். தேவரீர் அமுது செய்யும் தன்மையை அருளிச் செய்யும். சிவனடியார் முயற்சி செய்து தேடினால் இல்லாதனவும் உளவாகும். அருமையில்லை. உரைத்தருளும்'' என்றார் சிறுத்தொண்டர்.

''அன்பரீர் ! நாம் ஆறு மாதத்துக்கு ஒரு முறைதான் உண்போம்; பசு வதைத்து உண்போம். அதற்குரிய நாள் இன்று. அதனால்தான் உம்மால் எமக்கு உணவு செய்விக்க இயலாது என்றோம்'' என்றார் வைரவர்.

''பெருமானே ! சாலவும் நன்று. மூன்று வகையான பசுக்களும் அடியேன் வீட்டில் உண்டு. ஒரு குறையுமில்லை. அடியவராகிய தங்கள் அமுதுக்குரிய பசு இன்னது என்பதை அருளிச் செய்யும்'' என்றார் சிறுத்தொண்டர்.


''நண்பு மிக்கீர் ! உமது அன்புக்கு மகிழ்ச்சி. நாம் உண்பது நரப் பசுவாகும். அதுவும் ஐந்து வயதுக்குள் இருக்க வேண்டும். அங்கப் பழுதில்

இது ஒரு காஸெல்ஸ் யுகம்



கோடையின் திணறவைக்கும் வெப்பத்தை காஸெல்ஸ் மின்விசிறியின் மூலம் விரட்டியடியுங்கள். வலுவானதும், மிடுக்கான தோற்றமுடையதும் சிறந்த செயல் திறன் கொண்டதுமான காஸெல்ஸ் இன்றைய மின் விசிறிகளில் மேன்மையானது. வருடக்கணக்கான தொல்லையற்ற சேவைக்கு நீங்கள் நிச்சயமாக காஸெல்ஸ் மின் விசிறியை நம்பலாம்.

எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
45-47, வீர்நாரிமன் ரோடு, பம்பாய்-1.
இந்தியா முழுவதிலும் கிளைகளுண்டு



லாயம் இருக்க வேண்டும். புண்ணில் வேல் எறிந்தது போன்று மற்றொரு செய்தியுளது'' என்றார் வைரவர்.

''எந்தையே! உமது அருளினால் எதுவும் அரியதில்லை. இனி அருளிச் செய்யும்'' என்றார் சிறுத்தொண்டர்.

''ஒரு குடிக்கு நல்ல ஒரு மகனாக இருக்க வேண்டும். தாயார் மடியில் வைத்துப் பிடிக்கும்பொழுது தந்தை மனமகிழ்ச்சியுடன் அரிந்து, குற்றமின்றி அமைத்த கறி நாம் உண்பது; தாய் தந்தை மகன் மூவரும் உவப்புடன் இருத்தல் வேண்டும்'' என்றார் வைரவர்.

''சுவாமீ! தேவரீர் அமுது செய்வதானால் இதுவும் அரியதில்லை. சற்று இரும். தாங்கள் கூறியபடியே அமைத்து வந்து அழைப்பேன்'' என்று கூறி அவரைத் தொழுது புறப்பட்டார் சிறுத்தொண்டர்.

சிறுத்தொண்டர் அங்கிருந்து புறப்பட்டுத் திருமனையை அடைந்தார். மனைவியாரை நோக்கி, ''பெண்மணியே! வந்த மாதவர் அமுது செய்ய இசைந்தார். நற்குடியில் ஒருமகனாய்ப் பிறந்த ஐந்தாண்டு உடைய அங்கப் பழுதில்லாத அழகிய குமாரனைத் தாய் பிடிக்கத் தந்தையரிந்து சமைத்தால் உண்பேன் என்று கூறியிருக்கிறார்!'' என்றார்.

''ஒரு குடிக்கு ஒரு மகனை எவ்வாறு எங்கு தேடுவோம்?'' என்றார் அரிய கற்புடைய மனைவியார்.

''மாதரசே! இதென்ன கேள்வி? நான் உய்ய நீ பெற்றெடுத்த புத்திர மணியை அழைப்போம்'' என்றார் சிறுத்தொண்டர்.

இவ்வாறு கணவர் கூறக் கேட்ட அந்த உத்தமி சிவனடியார் அமுது செய்ய, அதனால் உய்வு பெற்று மகிழும் கணவர் திருமுகத்தைக் காண்பதே கடமை என்று நினைந்து, ''குழந்தை சீராளனைப் பள்ளியினின்றும் அழைத்து வாரும்'' என்றார். சிறுத்தொண்டரின் பெருமைக்கு அம்மையே காரணம்.

சிறுத்தொண்ட நாயனார் பேருவகையுடன் பள்ளிக்குச் சென்று மகனைத் தோளில் வைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார். திருவெண்காட்டம்மையார் எதிர்சென்று மாணிக்க மணி போன்ற குழந்தையை வாங்கினார். தலைமயிரைத் திருத்தி, முதுகு தடவி, உள்ளம் உவந்து வாச நீரால் திருமஞ்சன மாட்டிக் குறைவற ஆடைஅணிகலன்களால் அழகுபடுத்திக் கணவனார் கரத்தில் எடுத்துக் கொடுத்தார்.



நாயனார் குற்றமில்லாத நற்றவருக்கு அமுது செய்ய உரிய உடம்பு என்று மகனை உச்சி மோந்தாரில்லை; முத்தமிடவில்லை. தமது திருமாளிகையில் உலகர் அறியாவண்ணம் ஒரு புறத்தில் கொண்டு போனார். திருவெண்காட்டு நங்கையார் பாத்திரங்களை ஒருபுறத்தில் நன்கு கழுவி வைத்தார். உலகை வென்ற தந்தையார் மகனது தலையைப் பிடித்தார். தாயார் இனிய மழலைக் கிண்கிணியுடைய பாதங்கள் இரண்டையும் மடியில் இடுக்கிக் கொண்டு கரங்கள் இரண்டையும் கையில் பற்றிக் கொண்டார். சிவனடியாருக்குத் தன்னை நிவேதிக்கும் பொருட்டு இச்செயல் நிகழ்கிறது என்பதை அறிந்த சின்னஞ்சிறு சீராள தேவர், ''நாய்க்கும் பேய்க்கும் இரையாகும் இந்த ஊன் உடம்பு அடியார் அமுது செய்யப் பயன்பட்டதே'' என்று எண்ணி மகிழ்ச்சியுற்றார்.

சீராளதேவர் பெருமை சிறுத்தொண்டர் பெருமையினும் பன்மடங்கு உயர்ந்தது. இவர் தோன்றும் போதே தெய்வத் தன்மையுடன்

தோன்றினார் என்பதைச் சேக்கிழார் பெருமான் மிகவும் கௌரவமாகக் கூறுகிறார். "சீராளதேவர் என்னுந் திருமைந்தர் அவதரித்தார்" என்பது அவரது வாக்கு. சிறுத்தொண்ட நாயனாருக்கும் தேவர் என்ற சிறப்பு இல்லை.

மகன் மகிழ்கிறான் என்பதை அறிந்த தந்தையார் வாள் கொண்டு ஒப்பற்ற மகனது தலையை அரிந்தார்.

உயிருள்ள ஆடு கோழிகளை 'அறுக்க' என்றும், உயிரில்லாத கத்திரிக்காய், வாழைக்காய் முதலியவைகளை 'அரிய' என்றும் கூறுவது மரபு. 'அவன் தலையை அறுத்தான்' என்றும், 'பாகற் காய் அரிந்தான்' என்றும் வழக்காற்றில் கூறுவதைக் காணலாம். வயிரவராக வந்த சிவபெருமான், 'தாதையரிய' என்ற சொல்லினால், 'நீ பிள்ளையை அரியும்போது அப்பிள்ளைக்கு வேதனையின்றி, காய்களை அரியும்போது காய்களுக்கு வேதனை யின்மை போல், அப்பிள்ளை முகமும், அகமும் மலர்ந்து மகிழ்ச்சியுடன் அச்செயலுக்கு உடன்பட வேண்டும்' என்ற கருத்துக்கள் விளங்குகின்றன. இக்கருத்தை யொட்டியே, 'வாளால் மகவரிந்து' என்கிறார் பட்டினத்தடிகள்.

சீராளதேவர் சிவயோக முதிர்ச்சியுடையாராதலின் தாதையார் அரிந்தபோது, உடம்பில் உணர்வின்றி, சிவத்தை நினைந்துப் புன்முறுவலுடன் இருந்தார்.

"....மகிழ்ந்து நகைசெய் அத்
தனி மாமகனைத் தாதையார் கருவிகொண்டு
தலையரிவார்!"

என்ற அரிய சொற்றொடரால் இக்கருத்து வலியுறுகின்றது.

'புத்திரன் என்ற சொல்லின் பயனை இவன் நமக்கு அளித்தான்' என்று நாயனார் மகிழ்ந்தார். 'அடியார் அமுது செய்யும் தொண்டுக்குத் தடை நேர்ந்தால் கணவனார் மாள்வார். ஆகவே, அவ்வாறு அவர் மாளாது உய்ய, நாயகன் உயிரை இவன் எனக்குத் தந்தான்' என்று தாயார் மகிழ்ந்தார். இவ்வாறு இருவரும் அகமும் முகமும் மலர்ந்து செயற்கு அரிய செயலைச் செய்தார்கள்.

'அன்புக்கும் சைவத்துக்கும் தொடர்பு உண்டா? உண்டாயின் சிவபெருமான் பிள்ளைக் கறி கேட்கலாமா? சிறுத்தொண்டர் செய்தது கொலைத் தொழி லன்றோ? அவ்வாறு செய்தது நீதியா? அரசியலார் இதற்கு இசைவார்களா? இப்பொழுது நாங்கள் செய்தால் அரசாங்கம் தண்டிக்காமல் புண்ணியத் தொழில் என்று பொறுத்திருக்குமோ? இங்ஙனம் கொலை புரிந்தவரை அருளாளர் என்று சொல்வதும் பொருந்துமோ?' என்று இவ்வாறெல்லாம் பலர் கேட்கக்கூடும். அதற்கு விளக்கம் தர வேண்டியது முக்கிய கடமையாகும்.

அன்பு வேறு, சிவம் வேறு இல்லை. அன்பே சிவம். பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் தந்த பிரானாகிய பரமசிவன் கருணைக்கடல். இதை முதலில் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

ஆசை மூன்று இடங்களில் மிகவும் அழுத்தமாகப் பதித்திருக்கிறது. முதலாவதாக, செல்வத்தின் மீது வைத்தல். இதனைத் தானேஷணை என்பார்கள். இரண்டாவதாக, மனைவி மீது வைத்தல். இதனைத் தாரேஷணை என்பார்கள். மூன்றாவதாகப் புதல்வர் மீது வைத்தல். இது புத்ரேஷணை எனப்படும். வடநூலார் ஈஷணாத்ரயம் என்பர். இம்மூன்று ஆசைகளுமே பிறவிக்குக் காரணங்களாகின்றன.

"மாவேழ் சன்மங்கெட மாயைவிடா
மூவேடணை என்று முடிந்திடுமோ?"

என்பது கந்தரநுபூதி.

இம்மூன்றில் பணத்தின் மீதுள்ள ஆசையையும், மனைவி மீதுள்ள ஆசையையும், நல்ல கல்வி கேள்விகளால் அகற்றி விடலாம். மக்கள் மீதுள்ள ஆசையை அகற்றுதல் மிகவும் அரிது.

கடந்த ஞானிகளும் கடப்பரோ
மக்கள் மேல் காதல்

இக்காதலை அறவே துறந்தவர் சிறுத்தொண்டர். யாராலும் அகற்ற முடியாத பிள்ளைப் பாசத்தை இவர் அகற்றினார் என்பதை உலகம் அறிந்து உய்யும் பொருட்டு, சிவபெருமான் வைரவ வடிவில் வந்து இவ்வாறு யாசித்தார். வைரவர்கள் புலையுணவு உண்பவராதலின் அவ்வடிவில் சிவபெருமான் வந்தார் என்பதையும் உணர வேண்டும்.

அறுபதினாயிரம் ஆண்டு அரசாண்ட தயரத மன்னன்பால் விசுவாமித்திர முனிவர் வந்து வேள்விக் காவல் புரிய நான்கு மைந்தர்களில் வலிமை மிக்க முதல் மகனைச் சிறிது துணையாக அனுப்புமாறு வேண்டினார். உயர்ந்த தவமுனிவர் பின்னே மகனை அனுப்புவதற்கே மன்னன் மனம் மறுகி வேதனையுற்றான். ஆனால் ஒப்பற்ற ஒரு மகனை அரிந்து கறி சமைத்து இடுமாறு வைரவர் கூறக் கேட்ட சிறுத்தொண்டர், ஒருசிறிதும் தயங்காது அப்பணியை மேற்கொண்டார்! (தொடரும்)



மார்க் ட்வெயின் ஒரு பத்திரிகையாசிரியராக இருந்த சமயம். ஒவ்வொரு நாளும் அவர் செலுத்த வேண்டிய தொகைகளுக்கான 'பில்' ஏராளமாக வந்து கொண்டிருந்தது. அவை வரவரக் குப்பைக் கூடைக்குள் எறிந்துவிடுவார் ட்வெயின்.

ஒரு நாள் ஒரு பில்லை ஆசிரியர் ட்வெயின் குப்பைக் கூடைக்குள் போடப் போகும் சமயத்தில் ஆபீஸ் பையன் குறுக்கிட்டு, ''அந்தப் பில்லின் மறுபுறம் எழுதியிருப்பதைப் பாருங்கள் சார்! 'உடன் பணத்தை அனுப்பாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்' என்று குறிப்பிட்டிருக்கிறது'' என்றான்.

மார்க் ட்வெயின் அந்தப் பில்லை ஆபீஸ் பையனிடமே திருப்பிக் கொடுத்து, ''இம்மாதிரி நம் காரியாலயத்துக்கு வரும் கையெழுத்துப் பிரதிகளை என்ன செய்ய வேண்டும் என்று உனக்குத் தெரியுமே! 'இருபுறமும் எழுதப்பெற்ற கையெழுத்துப் பிரதிகள் கவனிக்கப்படமாட்டா' என்ற நம் காரியாலயக் குறிப்பை அதோடு இணைத்துத் திருப்பி அனுப்பிவிடு!'' என்று கூறினார்.

ஆதாரம்: ''வாழ்க்கை அநுபவங்கள்'' தகவல்: காழி ஜெயா



பணக்கார நீதிபதி ஒருவர், மிகவும் எளிமையுடன் வாழ்ந்து வந்தார். அவரிடம் அவரது நண்பர்கள் கேட்டனர்:

''நீங்கள் இவ்வளவு எளிமையாக இருக்கிறீர்களே; உங்கள் பிள்ளைகள் எவ்வளவு ஆடம்பரமாக இருக்கிறார்கள் பார்த்தீர்களா?''


''என்ன செய்வது? நான் ஏழை விவசாயியினுடைய மகன்; அவர்கள் பணக்கார நீதிபதியின் மக்கள்!''

- பூம்பொழில்

ஆவடிக்கு அருகே 1968ம் ஆண்டு ஜனவரி முதல் பிப்ரவரிவரை நடக்கப் போகும் இந்திய சர்வதேச வர்த்தகத் தொழில் கண்காட்சியைப் பற்றிச் சில சுவையான தகவல்கள்:

- ☐ 300 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படும்.
- ☐ பத்தரை மைல் பாதை போடப்படுகிறது.
- ☐ கண்காட்சிக்கு மொத்தமாக 4,800 மிலியன் செங்கற்களும், 2 மிலியன் டன் சிமெண்டும், 25,000அடி (சதுர) பிளைவுட்டும் செலவழியும்.
- ☐ கண்காட்சி சாலைக்கு மின் வசதிக்கு 30 மைல் நீளம் கேபிள் போடப்படும்.
- ☐ கண்காட்சியின் நடுவே 150 அடி உயரத்துக்குப் பஞ்சசீல ஸ்தூபி உண்டாக்கப்படும். இதன் செலவு ரூ. 80,000 என மதிப்பிடப்படுகிறது.
- ☐ இந்தக் கண்காட்சிக்கு மொத்தச் செலவு ரூ. 20 கோடி ஆகும். ரூ. 50 மிலியன் அன்னியச் செலாவணி மிச்சப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதாரம்: 'எகனமிக் டைம்ஸ்' தகவல்: தி. சந்தானம்





உலகப் பேரறிஞரான சர்ச்சிலிடம் ஒரு விசித்திரமான பழக்கம் உண்டு. அவர் எப்போது ரயிலுக்கு வந்தாலும் வேண்டும் என்று நேரம் கழித்து வந்து வண்டி புறப்பட்ட பிறகுதான் ஓடிச் சென்று வண்டியிலே ஏறுவார்.

முன்கூட்டியே என்றாவது ரயிலடிக்கு வந்துவிட்டால்கூட வண்டி புறப்படும் வரை யாருடனாவது பேசிக் கொண்டிருந்து விட்டுப் பின்னர் ஓடும் வண்டியில் ஓடிச் சென்று தொத்திக் கொள்வார்!



''மனிதன் ஒரு விசித்திரப் பிராணி''


''எப்படி ?''

''வானத்தில் கோடி கோடி நட்சத்திரம் இருக்கிறது என்றால் நம்பி விடுவான்.''

''எதை நம்ப மாட்டான்?''

''பெஞ்சியில் ஈர வர்ணம் என்று எழுதியிருந்தால் நம்ப மாட்டான். அதைத் தொட்டுப் பார்த்தால்தான் நம்பிக்கை வரும்''

- பாலன்



குப்பைக் கிடங்கைப் பார்க்க நேர்ந்தால் முகம் சுளிக்கிறோம். ஆனால் மேற்கு ஜெர்மனியில் மூன்றரைக் கோடி ரூபாய் செலவில் குப்பைக் கிடங்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்றால் ஆச்சரியமாயிருக்கும். ஜெர்மனியில் உல்டன்பட்டல் என்னுமிடத்துக்கு அருகே ஏற்கனவே மூடப்பட்டிருந்த உப்புச் சுரங்கத்தை ரூ. 13,09,000 கொடுத்து வாங்கி அதனை இவ்விதம் அதிசயமான குப்பைக் கிடங்காக மாற்றியிருக்கிறார்கள்.

ஜெர்மனியில் அணுசக்தி பற்றிய ஆராய்ச்சியின்போது பயன்படுத்தப்படுகிற பல்வேறு பண்டங்களில் அணுக்கதிர் வீச்சு இருக்கிறது. குப்பைதானே என்று இவற்றை அலட்சியமாகத் தெருவில் போட்டுவிட முடியாது. அணுக்கதிர் வீச்சினால் மக்களின் நலனுக்கு ஆபத்து ஏற்படும்.


அணுசக்தி ஆராய்ச்சியின்போது சேர்ந்த குப்பைகளை 80 பீப்பாய்களில் அடைத்து முதல் தடவையாக ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் உப்புச் சுரங்கத்தில் தள்ளினார்கள். இனி தொடர்ந்து 1700 இரும்புப்பீப்பாய்கள் கொண்டுவரப்படும். சோதனைக்குப் பயன்படுத்தப்பட்ட செத்துப்போன எலிகள் முதற்கொண்டு சாதாரண ''பாண்டேஜ்'' துணிவரை பீப்பாயில் அடைத்து இத்துடன் பிட்டுமன் கலவை அல்லது சிமெண்ட் கலவையைச் சேர்க்கிறார்கள். இந்தப் பீப்பாய்களை உருட்டிவிட மாட்டார்கள். விசேஷ 'போர்க் லிஃப்ட்' மூலம் இவற்றை 750 மீட்டர் ஆழத்துக்குக் கீழே ஒன்றின் மீது ஒன்றாக வரிசையாக அடுக்குவார்கள். அவ்வப்போது இவை ஒழுங்காக இருக்கின்றன என்பதைக் கண்காணிக்க வழியும் விடப்படும். பூமி மட்டத்துக்குக் கீழாக அமைந்துள்ள இந்த உப்புச் சுரங்கத்தினுள் ஏராளமான இடவசதி இருக்கிறது. சுரங்கத்தினுள் நூற்றுக்கும் அதிகமான குகைபோன்ற அறைகள் இருக்கின்றன. அவற்றிலுள்ள அணுக்கதிர் வீச்சுள்ள குப்பைகளை வைத்திருக்கும் காலத்தில் உப்புப் பாறையில் என்ன மாறுதல் நிகழுகின்றன என்பதை அறிய விஞ்ஞானிகள் விரும்புகிறார்கள்.


— யூ. பி. எஸ்.


1938ல் நைலான் தோன்றியது. அதிலிருந்து ஆடை தயாரிப்புத் தொழிலில் எத்தனை எத்தனை அற்புதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நைலான் கண்டுபிடிக்க எவ்வளவு செலவாயிற்று தெரியுமா ? ஆராய்ச்சிக்கு ஒரு கோடி 10 லட்சம் டாலர். முப்பது விஞ்ஞானிகளின் அயரா உழைப்பு. நைலான் இழையானது நிலக்கரி, காற்று, தண்ணீர் ஆகியவை கொண்டு தயார் செய்யப்படுகிறது. முழுக்க முழுக்க மனிதனுடைய படைப்பு. நைலானுக்கு அதிக வலு உண்டு. பலப்பல வகையில் பயன்படக் கூடியது. அது நைந்து போகாது, கெட்டுப் போகாது, அதில் பூசணம் பிடிக்காது. விரைவில் உலர்ந்து விடும்.

'ஸயன்ஸ் நியூஸ் லெட்டர்' தகவல்: ரமணன்









ராஜி பிறந்தகத்துக்கு வந்து பத்து நாட்களாகியும் கணவனைப் பற்றிக் குறை கூறுவதை நிறுத்திக் கொள்ளவில்லை. அவனோடு ஒரு வருஷம் குடும்பம் நடத்தியதைக் 'குப்பை கொட்டினேன்' என்று குமைந்தாள். வேலையாட்களிடமெல்லாம் அவனைப் பற்றிக் குறை கூறினாள். அவன் மீது வெறுப்பு ஏற்படும்படி வார்த்தைகளைத் தொடுத்தாள்.

கணவன் செய்த 'மாபெரும் கொடுமை'களைக் கண்ணீரின் சாட்சியாகப் பெற்றோர்கள் முன் கொட்டிக் குவித்தாள்.

விம்மி அழுதாள். பெற்றவர்கள் பேசா மடந்தையாக இருந்தார்கள். பெற்றவள் மகளின் கண்ணீரைத் துடைக்கக் கரங்களை நீட்டினாளே தவிர அழுது ஓலமிடும் மகளுக்கு இதமாக ஒரு வார்த்தை பேச அவளுக்குத் தெரியவில்லை.

''உயிர் போனாலும் நான் இனி அங்கே திரும்பிப் போவதாக இல்லை. அப்பாவிடம் சொல்லி ஏதாவது ஆபீஸில் வேலை பார்த்துத் தரச் சொல்'' என்றாள் ராஜி தாயாரிடம்.


''அதெல்லாம் எனக்குத் தெரியாதம்மா. உன் பாடு, உன் அப்பா பாடு. இடையிலே நான் எதற்கு?''

வேளா வேளைக்குச் சாப்பாடு, தூக்கம்! பொழுதைக் கொல்லக் கதைப் புத்தகங்கள்! வேணுவுடன் குடும்பம் நடத்தியதை நினைத்து நினைத்து நெஞ்சு பொருமினாள்; வேதனைப் பெருமூச்சு விட்டாள்.

நீறுபூத்த நெருப்பைக் காற்று கனிய வைப்பதுபோல் பழைய நினைவுகளை வேதனை யெனும் காற்று நெஞ்சப் பரப்பில் மிதக்க விட்டது.

கதவை இலேசாகத் தட்டியவாறு, ''சார்!'' என்று கூப்பிட்டான் வேணு. யாரோ நடந்து வரும் காலடியோசை கேட்டதும் சற்று ஒதுங்கி நின்றான் அவன்.

கதவு திறந்தது.



வானவில்

வனமாலிகை

ராஜி நின்றாள்.

அவர்கள் விழிகள் சந்தித்துப் பிரிந்தன!

"நீங்கள்...." குரல் தேனாக இனித்தது.

காதோரம் சரிந்து விழும் கூந்தலை அலட்சியமாக ஒதுக்கிக் கொண்டு ஒயிலாக நின்றாள் அவள்.

"வேணு!"

"அது நீங்கள்தானா? அப்பாவும் அம்மாவும் கோவிலுக்குப் போயிருக்காங்க. உங்களை உட்காரச் சொன்னாங்க....நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுங்கள்."

அவள் அழகு அவன் உள்ளத்தில் நெருப்பை ஏற்படுத்தியது. இதழ் இதழாய் மலர்ந்திருக்கும் ரோஜாவின் எழிலை அவள் மேனியில் கண்டான். வாழைக் குருத்துப் போல் தளதளவென மின்னும் கரங்கள்... கவர்ச்சியூட்டும் கயல்விழிகள்!

அலுவலக அதிகாரியின் மகள் பட்டணத்தில் பி. ஏ. பரீட்சை எழுதிவிட்டு ஊருக்கு வருவதாகப் பியூன் சொன்னது வேணுவின் நினைவுக்கு வந்தது.

"இந்தாங்க காப்பி" என்ற ராஜியின் குரல் அவனை நிமிர்ந்து பார்க்க வைத்தது.

அவள் திரும்பிச் செல்லும்போது அவள் விழிகள் அவனைப் பார்த்துப் புன்னகை பூத்தன.

ராஜியின் அப்பா ராமாமிருதம் ஜில்லா அதிகாரி. அவரது 'கேம்ப் கிளார்க்' வேணு. அவன் பி. ஏ. படித்தவன்.

வேணு கேம்ப் கிளார்க் என்ற முறையில் அடிக்கடி அவர் வீட்டுக்குச் செல்வான். அவரது வீட்டு ஆபீஸ் அறையில் உட்கார்ந்து வேலை செய்ய வேண்டியதிருக்கும்.

ராஜி பட்டாம்பூச்சி போல வர்ணஜாலம் காட்டுவாள். தென்றலாக, 'குப்'பென்று மலர்ந்து வீசும் மலராக, அவன் இதயத்தில் இடம் தேடினாள்.

வளை குலுங்கும் ஒலியும், மார்பில் தவழும் பின்னலும், அதில் மண்டிக் கிடக்கும் மல்லிகைக் காடுமாக அவன் முன் வந்து நிற்பாள்.

"நீங்கள் பி. ஏ. படித்துவிட்டு இந்த வேலைக்குத்தானா வர வேண்டும்?" என்று கேட்பாள்.

"இந்த வேலை கிடைத்ததே பெரிய புண்ணியம்."

இரண்டு மூன்று மாதங்களில் அவள் தன் இதயத்தை அவனிடம் ஒப்படைத்துவிட்டாள். வேணுவும் அவளது கிறங்க வைக்கும் அழகில் தன்னையே மறந்தான். அவள் நினைவு அவனது இதயகலசத்தில் பொங்கி வடிந்தது.

"ராஜி!"

"ம்..."

அவள் கரத்தை அன்பாகப் பற்றினான் அவன். இரு இதயங்களையும் இன்பம் இதமாகத் தடவியது.

நாட்கள் பறந்தன.

"ராஜி, நன்றாக யோசனை பண்ணிச் சொல். நாளைக்கு நீ கண்ணைக் கசக்கிக் கொண்டு நிற்கக் கூடாது. வேணு தங்கமானவன். அவனுக்கு மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் கிடைக்கும். அதைத் தவிர வேறு எதுவுமில்லை. சொந்தமாக வீடுகூட இல்லை. அவன் வாங்கும் சம்பளத்தில் உன்னால் வாழ முடியாது. உன் ஆடம்பரச் செலவுகளுக்கு அது போதாதம்மா."

"போதும் அப்பா. உங்கள் ஆபீஸ் பியூன் எழுபது ரூபாய் சம்பளத்தில் குடும்பம் நடத்தவில்லையா?"

"அதற்கு மனப் பழக்கம்தான் காரணம். குறைந்த வருமானத்தில் குடும்பத்தை நடத்தும் மனப் பக்குவம் அவனுக்கு இருக்கிறது. நீ அப்படியில்லை. பழகிவிட்ட வாழ்க்கையிலிருந்து மனத்தைத் திருப்புவது மிகவும் கடினம். நாளைக்கு நீதான் கஷ்டப்படப் போகிறாய்!"

"அப்படிக் கஷ்டப்பட்டாலும் உங்கள் தயவை நாடமாட்டேன்." முகத்தில் அடித்தாற்போல் பேசிவிட்டாள் ராஜி.

அதற்கு மேல் அவர் ஒன்றும் பேசவில்லை.

வேணுவைக் கலந்து பேசி, நல்ல ஒரு முகூர்த்தத்தில் ராஜியை அவன் கையில் ஒப்படைத்து விட்டார்.

ராஜியின் கைப்பிடித்த பாக்கியம் வேணு பதவி உயர்வு பெற்று 'ஹெட் கிளார்க்'காக மதுரைக்கு மாற்றலாகிச் சென்றான்.

தனிக் குடித்தனம் ஆரம்பமாயிற்று!

மூன்று மாதங்களை, புது மோகம் மூன்று நாட்களாகத் தின்றுவிட்டது.

மொட்டை மாடியில் மடித்த கைகளின் மேல் தலைவைத்து மல்லாந்து படுத்திருந்தான் வேணு. இயற்கை அளிக்கும் இன்பம் சுகமாக இமைகளை மூட வைத்தன. நிலவு பாலைப் பொழிந்து கொண்டிருந்தது. அவன் தலைமாட்டில் தரையில் உட்கார்ந்தாள் ராஜி.

"நாளை மறுநாள் என் பிறந்த நாள்" என்றவள் கொஞ்சலுடன் அவன் கன்னத்தை வருடினாள்.

"வருஷத்துக்கு ஒரு முறை பிறந்த நாள் வரத்தானே செய்யும்?"

"நீங்க எனக்கு என்ன பரிசு தரப் போறீங்க?"

"என்னையே உனக்குப் பரிசாகக் கொடுத்து விட்டேனே."

"அதிருக்கட்டும். காஞ்சீபுரம் புடவையா? இல்லே, வேறு ஏதாவது நகைகளா?"

அவன் பதில் சொல்லவில்லை.

அவன் சம்பளம் முழுவதையும் அவளிடம் கணையாகக் கொடுத்து விடுவான். தேதி பதினைந்துக்குள் அவள் பணத்தைக் கரைத்து விட்டுக் கையைப் பிசைந்து கொண்டு நிற்பாள். மனைவியின் மனம் புண்படக் கூடாதென்று நண்பர்களிடம் ஐந்து பத்து கைமாற்று வாங்கத் தொடங்கினான். அது அவனுக்குப் புது அனுபவமாக இருந்தது.

ராஜியின் பிறந்த நாள் பரிசாக மல்லிகைச் சரம் வாங்கிக் கொண்டான். ஒரு ஜாக்கெட் துண்டு.

ராஜி முகத்தைச் சுளித்தாள்.

"இது வேணும்னு யார் அழுதாங்க?" — அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவன் முகம் வாடியது.

"ராஜி, பொன்னையும் பொருளையும் கொடுப்பதில்தான் அன்பு இருக்கிறதா?

நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்வதில்தான் உண்மையான அன்பு இருக்கிறது'' என்றான் அவன்.

''வீண் வாய்ப் பந்தல் போட வேண்டாம்!''


அவளது மனநிலை சரியில்லை என்பதைப் புரிந்து கொண்ட வேறு பேசாமல் இருந்து விட்டான்.

வேறு ஒரு நாள்...

''சினிமாவுக்கு டிக்கட் 'புக்' பண்ணி விட்டீங்களா?''

''அங்கேயே வாங்கிக் கொள்ளலாமே.''

அகப்பட்டுக் கொண்டாயா!



''முதல் வகுப்பு டிக்கட் எல்லாம் புக் பண்ணி விருப்பாங்களே?''

''இரண்டாவது வகுப்புக்குப் போவது.''

''யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க?''

''ராஜி, நான் வாங்குகிற சம்பளத்துக்கு அதைவிடக் குறைவான டிக்கட்தான் எடுக்க முடியும். உனக்காகத்தான் இதுவும்.''

''எதற்கெடுத்தாலும் 'உனக்காகத்தான்' என்று சொல்றீங்க. உங்களுக்குன்னு எதுவுமே கிடையாதா?''

''உன் விருப்பம்தான் என் விருப்பம்.''

''இப்படிப் பேசிப் பேசி என்னை எப்படி ஏமாற்றுகிறீங்க?''

அவசியமற்றவைகளுக்கெல்லாம் அவன் மனத்தைச் சலிப்படையச் செய்தாள். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் இல்லை. ஆடம்பரமாக வாழ்ந்து விட்டு, இப்போது அளவாக அவளால் வாழ முடியவில்லை. வேண்டாத தொல்லைகளை யெல்லாம் மனத்தில் தேக்கிக் கொண்டாள். அவன் இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் விரிசல் ஏற்பட்டு விட்டது. அவள் நினைத்த மாதிரி வாழ முடியவில்லை. அவளது கற்பனைகள் அனைத்தும் இடித்து கொண்டிருந்தன.

''இந்தப் புடவையைப் பார்த்தீங்களா?'' என்றவள் புதுப் புடவை ஒன்றை எடுத்துக் கணவன் முன் நீட்டினாள். முகத்தில் பிடிபடாத பெருமை ஓடியது.

அதன் அழகை ரசிக்கும் நிலையில் அவன் இல்லை.

''இதன் விலை என்ன?''

''தொண்ணூறு ரூபாய்.''

''தொண்ணூறு ரூபாயா?''

''ஆமாம். மூன்று தவணைகளில் கொடுத்தால் போதும்.''

''ராஜி, உனக்கு இருபதுக்கு மேல் புடவைகள் இருக்கும்போது இது அவசியம் தானா? ஆபிஸ் போகும் எனக்கே நந்து ஜோடி டிரஸ்கள். நீ கடன் வாங்கினாலும் நாம் தானே கொடுக்க வேண்டும்?''

''எனக்கென்று ஒரு புடவை வாங்கிக் கொள்ளக்கூட எனக்கு உரிமை இல்லையா?''

''உரிமையைப் பற்றி யார் சொன்னது? நம்முடைய வருமானம் என்ன, செலவு என்ன?''

''நீ நினைத்த மாதிரி புடவை வாங்க உரிமை யில்லையென்று மறைமுகமாகச் சொல்றீங்க. ஆமாம், நீங்க நானெக்குப் பெரிய அதிகாரியாகிக் கைநிறையச் சம்பளம் வாங்கி வருவீங்க. அப்பொழுது வாங்கிக் கொள்ளலாம்.'' அவள் கேலியாகச் சொன்னாள்.

''என் நிலைமை உனக்கு முன்பே தெரியும். நீ ஒரு காலத்தில் அள்ளி அள்ளிச் செலவு செய்திருக்கலாம். இப்போது அளந்து செலவு செய்ய வேண்டும்.'' அவனும் கொஞ்சம் சூடாகப் பேசிவிட்டான்.

அவர்களது தாம்பத்திய வாழ்க்கையில் கலகலப்பு மறைந்து விட்டது. பத்து மாத வாழ்வுக்குள் அவனுக்குத் தாம்பத்திய வாழ்க்கையில் விரக்தி தட்டிவிட்டது.

ராஜி பிறந்த வீட்டுப் பெருமையை அடிக்கடி கூறி அவன் மனத்தைப் புண்ணாக்கினாள்.

''நானாக என் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டேன். அப்பா அப்போதே சொன்னார்... என் தலையெழுத்து.''

பேச்சின் திசை மாறி விபரீதம் ஏற்படும் என்று தெரிந்தால் வேறு பேச்சை அத்துடன் நிறுத்திக் கொள்வான்.

அன்றைக்கு ஆபீஸ் விஷயமாக என்னவோ எழுதிக் கொண்டிருந்தான் வேணு.

''அப்பாவுக்குக் கடிதம் எழுதணும். பேனாவைக் கொடுங்க.''

''இன்னும் கொஞ்சம் எழுத வேண்டியிருக்கிறது. கடிதத்தை நாளைக்கு எழுதிக் கொள்ளலாம்.''

''பேனாவைக் கொடுக்கிறீங்களா என்ன?''

''இப்போ என்ன அவசரம்?''

''என் பேனாவை நான் கேட்கிறேன். யாரும் சம்பாதித்து எனக்கு வாங்கிக் கொடுத்ததில்லை.''

வார்த்தையில் நெருப்பைக் கொட்டினாள். அவன் உள்ளம் துடித்தது.

கல்யாணமான புதிதில் ராஜி தனது விலை உயர்ந்த பேனாவை அவனுக்குக் கொடுத்திருந்தாள்.

வேணு பேனாவை மூடி மேஜையில் வைத்தான். அவன் இதயம் கனத்தது. நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

வேணு உலகம் தெரிந்தவன். அவள் வேண்டுமென்றே குற்றம் சுமத்தினாலும் ஏற்றுக் கொள்வான். அது அவனுக்கு உள்ளப் பாங்கு. இதயத்தில் ஆண்டவன் இரக்க உணர்ச்சியை வைத்துவிட்டான். என்ன நடந்தாலும் அது சுவர்களை விட்டு வெளியே போகக் கூடாது. நடப்பவைகளை யெல்லாம் இதயக் குழியினுள் புதைக்கும் வித்தையைக் கற்றுக் கொண்டான்.

அற்ப விஷயங்களுக்குக் கூட அவள் உரிமை கொண்டாடினாள்; குத்திப் பேசினாள்.

வேணு உறங்க வேண்டுமென்றால் விளக்கை அணைத்துவிட வேண்டும். அப்படியொரு

கெட்ட பழக்கம். விளக்கு வெளிச்சமிருந்தால் அவனுக்கு உறக்கமே வராது.

இரவு பதினொரு மணிக்கு ராஜி நாவல் படித்துக்கொண்டிருந்தாள். ''ராஜி, விளக்கை அணைத்துவிடு. எனக்குத் தூக்கம் வருகிறது.''

''தூக்கம் வருகிறது என்றால் தூங்குங்கள். நான் வந்து தாலாட்டுப் பாட வேண்டுமா என்ன?''

''அதெல்லாம் வேண்டாம். விளக்கை அணைத்தால் போதும்.''

அவள் விளக்கை அணைப்பதாக இல்லை.

தூக்கக் கிறக்கம் அவனுக்கு வெறி மூட்டியது. ''ராஜி, விளக்கை அணைக்கப் போகிறாயா என்ன?''

''வாழ்க்கையில்தான் சந்தோஷமில்லை. இப்படியாவது பொழுதை ஓட்டிவிடலாம் என்றால்....''

''பகலில் தூங்கும்போது படித்திருக்கலாமே?''

''அது என் விருப்பம்.''

''விளக்கை அணைக்க வேண்டும் — அது என் விருப்பம்.'' என்றவன் படுக்கையிலிருந்து எழுந்து விட்டான்.

ராஜிக்கு ஆத்திரம் கிளம்பி விட்டது. கையிலிருந்த புத்தகத்தை வீசி எறிந்தாள். அதுவும் குறி தப்பாமல் அவன் முகத்தில் போய் விழுந்தது.

வேணுவின் ஆண்மை விழித்துக் கொண்டது. ''அவ்வளவு தூரத்துக்குத் திமிர் பிடித்து விட்டதா?'' என்றவன் அவள் கன்னத்தில் 'பளீர் பளீர்' என்று அறைந்து விட்டான்.

ராஜி பொறி கலங்கிப் போனாள். அன்றிரவு முழுதும் அவள் விம்மிக் கொண்டிருந்தாள்.

'சேச்சே, அவளை அடித்து விட்டோமே' என்று இரக்கப்பட்டான் வேணு.

அதற்காக அவளிடம் போய் மன்னிப்புக் கேட்கவும் ஆண்மை இடம் கொடுக்கவில்லை.

மறுநாள் பொழுது விடிந்ததும் ராஜி ஊருக்குக் கிளம்பி விட்டாள்.

ராஜியால் அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பணத்தைப் புரிந்து கொண்டவர்கள் பிறர் மனத்தைப் புரிந்து கொள்வது கடினம். அதற்கு மனப் பக்குவம் வேண்டும்.

ராஜி ஊருக்கு வந்து ஒரு மாதமாகி விட்டது. அவள் அப்பா ராமாமிருதம் சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை. அப்படியே பேசினாலும் கலகலப்பிருக்காது.

ராஜி நிதானமாக யோசிக்கத் தொடங்கினாள்.

''அம்மா, 'திருவிளையாடல்' படம் வந்திருக்காம். கோமதியுடன் போய்விட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள் ராஜி.

''அது ஒண்ணுதான் இப்போ குறைச்சல். உன் திருவிளையாடலே போதும்டியம்மா. பேசாமே வீட்டிலே உட்கார்ந்திரு.''

ராஜியின் உள்ளத்தில் பலமாக அடி விழுந்து விட்டது.

ராஜி எதையெதையோ கற்பனை செய்து கொண்டு தாம்பத்திய வாழ்க்கையில் கால் வைத்தாள். அவளது கற்பனைகள் நிஜ வாழ்க்கையில் பொய்த்து விட்டதால், இதயத்தில் ஆற்றாமை குவிந்தது. இதயம் பலவீனமாகி விட்டது.

வேணுவைப் பற்றி அவள் மனம் அடிக்கடி நினைக்கத் தொடங்கியது. அப்படி நினைக்கும் போது அவளது மனச்சாட்சி அவளையே பயமுறுத்தியது. யோசித்துப் பார்க்கும் போது அவன் மேல் சுமத்திய குற்றங்கள் குற்றங்களாகவில்லை.

அன்பு என்று அவன் வெறும் வாய்ப் பந்தல் போடவில்லை. அவனது ஒவ்வொரு செயலிலும், அசைவிலும் அன்பின் முழுமை நிறைந்திருந்தது.

பிறந்த வீட்டில் அவளுக்குப் பெருமை யில்லை. வேண்டாத விருந்தாளியாகிவிட்டாள். மகள் என்ற உறவுக்காகச் சோறு போட்டார்கள்.

வேணுவின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதற வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

திடீரென்று ஒரு நாள் ''அப்பா, நான் நாளைக்கு ஊருக்குப் போகிறேன்'' என்றாள்.

ராமாமிருதம் மகளை நிமிர்ந்து பார்த்தார்.

''அவருக்குத் தந்தி கொடுத்திடுங்கப்பா.''

''மாப்பிள்ளை உன்னை ஏற்றுக்கொள்வாரா, அம்மா?''

''அவர் என்னைப் பிடித்து வெளியே தள்ளினாலும் அவர் காலடியில் விழுந்துதான் சாவேன்.'' ராஜியின் கண்கள் நிறைந்து விட்டன. விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள்.

ராஜியைத் தேற்றுவதற்குள் அவர் பெரும் பாடுபட்டார்.

''ராஜி, மாப்பிள்ளை எனக்கு வாரம் தவறாமல் கடிதம் எழுதுகிறார். உன்னை அனுப்பச் சொல்லிப் பல கடிதங்கள் எழுதி விட்டார்.''

''என்கிட்டே ஏன் சொல்லவில்லை?''

''ராஜி, நீ வெளி அழகை, ஆடம்பரத்தை மட்டுமே இவ்வளவு காலமும் தெரிந்து வைத்திருந்தாய். மனத்தை அறிந்துகொள்ள முடியவில்லை. உன்னை வேண்டும் என்றுதான் நானும் உன் அம்மாவும் ஒதுக்கி வைப்பது போல் நடந்து கொண்டோம். நிழலின் அருமை வெயிலில் சென்றால்தானே தெரியும்? நானும் உன் அம்மாவும் உன் பக்கம் சேர்ந்திருந்தால் அதனால் பாதிக்கப்படுவது நீதான். உன் வாழ்வு — கணவனைப் புரிந்துகொண்டு வாழ்வதில்தான் இன்பம் இருக்கிறது ராஜி'' என்றவர் மகளை அன்புடன் அணைத்துக் கொண்டார்.

''நாளைக்கு என்ன, இன்றைக்கே கிளம்பி விடலாம். நான் உடனேயே மாப்பிள்ளைக்குத் தந்தி கொடுக்கிறேன்.''

ராஜியின் இதயம் நிர்மலமாகி விட்டது.

குடும்பம் நடத்துவதற்கு வேண்டிய பக்குவத்தை அவள் மனம் பெற்றுவிட்டது. இந்தப் பிரிவு அவள் மனத்தை முழு வளர்ச்சி அடையச் செய்து விட்டது.


காற்றோடு...!

அது ஒரு சிறிய கிராமம். தேசப்படப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து, அந்த இடத்தைக் கண்டு பிடிப்பதென்றால் தோல்வி தான் கிடைக்கும். உள்ளூர்ப் படத்தில் சிறிய புள்ளி வைத்துக் கிரீடம் என்று குறிப்பிட்டிருக்கும். உள்ளூரிலிருக்கும் நண்பர்களில் யாரேனும் ஒருவரைக் கேட்டால் இந்த இடம் நவரத்தினக் கற்கள் நிறைந்த இடமென்றுகூடக் கூறுவார். அதற்குச் சான்றாக அக்கிராமத்தின் ஓரிடத்திலிருக்கும் களி மண்ணாலான ஒரு குதிரையைக் காண்பித்து விளக்கம் கூறுவார்கள்.

நல்ல நிமிர்ந்து, முன் இரு கால்களையும் தூக்கிய தோற்றத்துடன் அந்தக் குதிரை காணப்படும். அதன் பக்கத்தில் கூரிய மூக்குடன், கனல் கக்கும் பார்வை கொண்ட கண்களுடனும், பயங்கர மீசையுடன் ஒரு சிப்பாய் நின்று கொண்டிருக்கும் உருவமும் உருவாக்கப் பட்டிருந்தது.

பகலில் அந்தக் குதிரையைக் காணும்போது சூரியனின் கதிர்களால் ஒளி விட்டு மின்னும் பலவிதக் கற்களின் பிரகாசத்தைக் காணலாம். வைரக் கற்களோ, மரகதப் பச்சைக் கற்களோ, செவப்புக் கற்களோ என்று ஐயுறும் வண்ணம் அக் குதிரை சூரிய வெளிச்சத்தில் தோற்றமளிக்கும். நல்ல தூய்மையான வெள்ளை நிறக் குதிரை அது.

அந்தக் குதிரையினருகில் இப்போது பலவிதமான முட்செடிகளும், கொடிகளும் படர்ந்திருந்தன. அக்குதிரை



ஆர். கே. நாராயணன்

'சுவாமியும் சிநேகிதர்களும்', 'துலே', 'மால் குடியில்' போன்ற பல சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதிப் புகழ்பெற்ற இந்திய எழுத்தாளர் ஆர். கே. நாராயணனுக்குத் தொன்னூறு நாடுகளிலிருந்து வந்த கல்வி பயிலும் லீட்ஸ் சர்வகலாசாலை 1967 மே 26ல் கௌரவப் பட்டம் (டாக்டர் ஆப் லெட்டர்ஸ்) அளிக்கப் போவது இந்தியாவுக்கு ஒருதனி கௌரவம்.

யின் எழில்மிகு தோற்றத்தையும், அதன் அருகில்நிற்கும் சிப்பாயின் வீரத் தோற்றத்தையும் கண்டு களிப்பவர்களுமில்லை, பேசுபவர்களுமில்லை.

ஒரு நாள். வயதான ஒருவன் நிழலில் ஒதுங்கி, வயலில் மேய்ந்து கொண்டிருந்த இரு ஆடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் வீட்டுக்குத் திரும்ப இன்னும் நேரம் இருக்கிறது. மலையிலிருந்து மாலையில் கீழே இறங்கி வரும் பச்சை நிற பஸ் தென்பட்டதும், தான் வீட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அறிந்து கொண்டு கிளம்பி விடுவான்.

விபரீதமாக மோட்டாரிலிருந்து இறங்கிய ஒரு புதிய நபர் தூரத்திலிருந்த அந்த மண் குதிரையைப் பார்த்துக் கொண்டிருந்ததை, ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அற்புதம்!'' என்று கண்களை அகல விரித்துக் குதிரையைச் சுற்றிச் சுற்றி வந்தார் அந்தப் புதிய நபர். அவர் முகம் ஆப்பிள் போன்று சிவந்திருந்தது. காக்கி நிற உடைகள் மேனியை மூடியிருந்தன.

தன்னை நோக்கி வயதான ஆடு மேய்ப்பவன் வருவதைக் கண்டதும், ஆங்கிலத்தில் என்ன விஷயம் என்று கேட்டார்.

தமிழைத் தவிர வேறு ஒரு மொழியையும் அறியாத அந்த வயதானவன், ''என் பெயர் முனி. அதோ மேய்ந்து கொண்டிருக்கும் அந்த இரு ஆடுகளும் என்னுடையவை'' என்றான்.

இந்த ஆள் கூறியது அந்தச் செந்நிறக் காக்கி உடைகள் அணிந்த சிப்பாய்க்குப் புரிந்ததோ இல்லையோ, மலையை நோக்கிப் பார்த்தவாறே, சிகரெட்டை எடுத்து 'உங்களுக்கும் ஒன்று' என்று கொடுத்தார்.

கிழவனுக்கு உடல் நடுங்க ஆரம்பித்தது. ''எனக்கு ஒன்றும் தெற்றுவரை தெரியாதுங்க.'' காக்கி உடை அணிந்திருந்த அந்தப் புதிய நபரைக் கண்டதும் பக்கத்துக் கிராமத்தில் நடந்த கொலை வழக்கைப் பற்றித் தான் விசாரிக்கிறார் என்று அவன் நினைத்துப் பதில் கூறினான். அரசாங்கப் போலீஸ்காரர் என்று நினைத்து அவன் ஏமாந்து போய் விட்டான் பாவம்.

காக்கி உடைகள் அணிந்தவர், ''நான் நியூயார்க்கிலிருந்து வருகிறேன். நீ அதைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? அமெரிக்கா தெரியுமா உனக்கு?'' என்று கேட்டார்.

முனிக்கு அமெரிக்காவும் தெரியாது. நியூயார்க்கும் தெரியாது. என்ன பேசுகிறார் என்றே முனிக்குத் தெரியவில்லை.

''உலகம் கெட்டுக் கிடக்கிறது. பாழாய்ப் போன சினிமா நல்ல புள்ளைங்களெல்லாவற்றையும் பாழாக்கி, குட்டிச்சுவராக்கி விட்டது. கெட்ட வழிகளில் செல்லச் சினிமா ரொம்ப உதவி செய்கிறது. எது வேண்டுமானாலும் இந்த உலகில் நடக்குங்க.''

புன்முறுவலுடன் செந்நிற மனிதன், ''உனக்கு நிச்சயமாக அந்தக் குதிரையைப் பற்றித் தெரிந்திருக்கும்'' என்றார்.

தனக்கு அவர் கூறியது புரிந்துவிட்டது போன்று முகமலர்ச்சியுடன் ''அதெல்லாம் எனக்குத் தெரியாது. உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு வழி நடங்க. எவனாவது கெட்ட பயல் வந்தானென்றால் உங்களிடம் பிடித்துக் கொடுத்து விடுகிறேன். ஆனா இந்தக் கிராமம் நல்ல கிராமமுங்க. நல்லவங்க வாழுற இடம். வேறு ஏதேனும் பக்கத்துக் கிராமமாக இருக்கலாம்.''

''நான் மெதுவாக நிறுத்திப் பேசுகிறேன். தயைசெய்து நிதானமாக நான் சொல்வதைக் கேள். நான் மூன்று வாரங்களுக்கு முன்புதான் இங்கு வந்தேன். உன்னுடைய அற்புதமான நாட்டைக் காணவேண்டும் என்ற ஆவலில் ஐயாயிரம் மைல்களுக்கு மேல் பிரயாணம் செய்திருக்கிறேன்.''

முனி, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, தலையை ஆட்டினான். தான் சொல்லியவைகளெல்லாம் முனிக்குப் புரிந்துவிட்டது என்ற மகிழ்ச்சியுடன், தன்னுடைய நாடு, தான் இந்தியாவைக் காண வேண்டுமென்ற ஆவல் ஏற்படக் காரணம், தன்னுடைய நாட்டுக்கும் இந்தியாவுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் முதலியவைகளைப்



பற்றி நிதானமாக, வார்த்தை, வார்த்தையாக அடிக்கடி புன்முறுவலுடன் கூறினார் அந்தச் செந்நிற மனிதர்.

முனி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு சிரித்ததைக் கண்ட செந்நிற மனிதன் ''உனக்கு வயதென்ன? உன்னுடைய பற்கள் மிக அழகாக இருக்கின்றனவே. உண்மையானவையா? என்ன அதிசயம்! அதன் ரகசியம் என்ன?'' என்றார்.

புருவத்தைத் தாழ்த்தி வருத்தத்துடன் முனி, ''சில சமயங்களில் எங்களுடைய ஆடு மாடுகள் காணாமல் போவதுண்டு. அப்போது எங்க ஜோஸியரிடம் சூடம் கொளுத்திக் கேட்டால், எந்தத் திசையில் அவைகள் சென்றிருக்கின்றன என்று சொல்வார். சரி, நான் இப்போது வீட்டுக்குச் செல்ல வேண்டும்'' என்று கூறி விட்டுத் திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

செந்நிற மனிதன் உடனே முனியின் தோளைத் திருப்பி, ''என் மொழியை நான் பேசுவதை உனக்குப் புரியுமாறு கூறுபவர் இல்லையா? என்ன — இங்கு இந்த நிலையா?'' என்றார்.

மாலை நேர வெய்யில் மலையின் அழகை அதிகமாக்கியது. வேகமாக வீசிய காற்று, கீழே பாதையில் கிடந்த காய்ந்த இலைகளை சுருட்டிக் கொண்டு, மலையை நோக்கிக் குவிந்தது.

''இந்தச் சிலை உன்னுடையதுதானே? இதை எனக்கு விலைக்குக் கொடுப்பாயா?''

முனிக்கு இப்போது அந்தச் செந்நிற மனிதன் பேசியது புரிந்துவிட்டது. அந்தச் சிலையின் பாரம்பரியமே தனக்கு நன்கு தெரியும் என்ற இறுமாப்புடன், ''கைகளைத் தூக்கி எங்க தாத்தாவுக்குத் தாத்தாவோட மாமாவுக்குத்தான் இதைப் பற்றிய வரலாறே தெரியுமாம். ஆனால் எனக்கு அவரைத் தெரியாதே!'' என்றான்.

''எனக்கு இந்தச் சிலை மிகவும் பிடித்து விட்டது. அதிக விலை நீ சொல்ல மாட்டாய் என நான் நினைக்கிறேன்.''

''இந்த யுக முடிவில் பத்தாவது அவதாரமாக இந்தக் குதிரை தோன்றும்.''

செந்நிற மனிதனுக்கு அவதாரம் என்ற வார்த்தை தெரியும்போல் தன்னைக் காட்டிக் கொண்டு, 'அவதாரம்' என்றார். முனி அவரைப் பார்த்தவாறே தொடர்ந்து பெருமைகளைக் கூறிக் கொண்டே வந்தான். ''கலியுக முடிவில் உலகமே அழிந்துவிடும். இந்த உலகம் மட்டுமல்ல, எல்லா உலகமும் அழிந்து விடும். அப்போது குதிரை உருவத்தில் கல்கி தோன்றி, கெட்டவர்களை வெள்ளத்தில் அமுக்கிக் கொன்று, நல்லவர்களை மட்டும் காப்பாற்றுவார். இந்தக் குதிரைக்கு அன்று உயிர் வந்துவிடும். உலகத்திலேயே இந்தக் கிராமம்தான் மிகவும் உயர்ந்தது. புனிதமானது. ஏனென்றால் குதிரை இந்தக் கிராமத்தில்தானேய்யா இருக்கிறது?''

''என்ன விலை நீ கேட்டாலும் நான் தரத் தயார்.''

''இந்தக் கிராமத்துக் கோயில் பூசாரி 'மிக உயர்ந்த கடவுள் விஷ்ணுதான். உலகில் கெட்டது எது நடந்தாலும் விஷ்ணு வந்து விடுவார். இம்மாதிரி இதற்கு முன் ஒன்பது தடவைகள் வந்துவிட்டார்' என்று எங்களிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார்.''

''முனி, நீ நினைப்பது போல் நான் கோமக வரனல்ல.''

''முதல் அவதாரம் ஆமை வடிவம்.... இல்லைங்க, மீன் வடிவம். பெரிய மீனாக வந்து வெள்ளத்திலும் பாதிக்கப்பட்ட உயிர்களைத் தம் முதுகின் மேல் சுமந்து காப்பாற்றினார். இரண்டாவது ஆமை வடிவங்க. மூன்றாவது வராக உருவங்க. அந்தக் கொம்பாலே, கடலுக்கு அடியில் மறைந்து போகும் தறுவாயில் இருந்த உலகத்தைத் தூக்கிக் காப்பாற்றினார்.''

''எப்படி இதை எடுத்துக் கொண்டு போவது என்பது என்னுடைய பிரச்னை. அதைப் பற்றி இப்போது என்ன? சொல்லப்பா. நூறு ரூபாய் தந்தால் போதுமா? மீசை முறுக்கிய சிப்பாய் என்னை மிகவும் கவர்ந்தவனாக இருந்தபோதிலும் அடுத்த வருடம்தான் எடுத்துச் செல்ல வேண்டும். இப்போது அவனுக்கு இடமில்லை.''

''மகாவிஷ்ணு தெரியுமாங்க? அவர்தான் ஒவ்வொரு நேரத்திலும் வந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். ராமனாக அவதரித்து ராவணனைக் கொன்றார். ராவணன் எத்தனை பலவான் தெரியுமா? பத்துத் தலைங்க. உலகையே ஆட்டி வைத்தான். ராமாயணம் உங்களுக்குத் தெரியாதுங்களா?''

''என்னிடம் சுமைகளைத் தூக்கும் வண்டி இருக்கிறது. நீ ஒரு கை கொடுத்தால் போதும். குதிரையைச் சுலபமாக அதில் ஏற்றி விடலாம்.''


''மகாபாரதம் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? விஷ்ணுவின் எட்டாவது அவதாரம்தான் கிருஷ்ணன். ஐந்து அண்ணன் தம்பிகள் அதாங்க — பஞ்சபாண்டவர் ராஜ்யத்தை இழந்தபோது அதை மீட்டுத்தர உதவிபுரிய வந்தவர்தான் கிருஷ்ணன். சின்னக் குழந்தையாக இருந்த போதே ஆயிரம் படங்களை விரித்து ஆடிய பாம்பின் மீது ஏறி நின்று நடனம் ஆடி அதைக் கொன்று....''


சம்பாஷணை நின்றது. எதைச் செந்நிற மனிதன் கேட்டாலும் அதற்குப் பதிலாகக் கிழவன் முனியும் பேசி, விடை கொடுத்து விட்டான்!

''ஐயா, நான் இத்தனை நேரம் ஏன் உங்களோடு பேசினேன் தெரியுமா? நீங்க நல்லவங்க. ஒரு கிழவனோடு சேர்ந்து பேச உங்களுக்கு விருப்பமும் நேரமும் இருக்கிறதே. என்னோடு ஒருவனும் பேச மாட்டாங்க. யாராவது எப்பவாவது போதையிலே கேட்டிருப்போ, ஏதேனும் ஒன்று ரெண்டு வார்த்தைகள் பேசுவாங்க. சரிங்க. உங்களுக்கு எத்தனை குழந்தை. குட்டிங்க ஏதாவது?''

''லாபமும் இல்லை. நஷ்டமும் இல்லை. நூறு ரூபாய் சம்மதமா?''

''எத்தனை ஆண் பிள்ளைகள். எத்தனை பொட்டைகள்? அவர்களெல்லாம் எங்கே இருக்கிறார்கள்? உங்க பெண்ணுக்குக் கல்யா


Myers
Quality Water Systems



ணம் ஆயிடுச்சா? என்ன உங்க நாட்லே கூட மருமகப் பிள்ளே ஆப்படறது கஷ்டமாங்க?''

செந்நிற மனிதன் பையில் கையை விட்டு நூறு ரூபாய்த் தாளை எடுத்தார்.

முனிக்கு, அந்தச் செந்நிற மனிதன் ஏதோ வியாபார நோக்கத்தோடு இதுவரை பேசிக் கொண்டிருந்தார் என்பது தெரிய வந்தது. கண்களை அகல விரித்து அந்தப் பணத்தைப் பார்த்தான் முனி. பிறருடைய கையில் ஐந்து, பத்து ரூபாய்த் தாளை முனியன் பார்த்திருக்கிறான். நூறு ரூபாய்த் தாளை அவன் பார்த்ததேயில்லை. அவனுடைய ஊதியம் பித்தளே, செம்பு காசுகள் தான். எதற்காக நூறு ரூபாய்த் தாளைக் கொடுக்கிறார்! ''ஓ... சில்லறை வேணுங்களா? எங்க கிராமத் தலைவரு, லேவா தேவிக்காரர். அவரிட்டே லக்ஷ ரூபாய்க்குக்கூட தங்கமாகக் கொடுத்தும் மாற்றலாம். எல்லாம் பூஜை போட்ற அறையைத் தோண்டி அதுக்குள்ளே வைச்சிருக்கிறார்.''

''இது போதாது என்று தோன்றினால் கொஞ்சம் கூட வேண்டுமானாலும் கேள். தருகிறேன்.''

''ஐயா, நீங்களே அவரிடம் பேசுங்க. என்னைக் கண்டாலே அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடும். அவரிடமிருந்த பூசணிக்காய் திருட்டுப் போயிடுத்து. என் ஆடுகள் தான் சாப்பிட்டுவிட்டது என்ற நினைப்பு அவருக்கு. அதனால்தான் பயிர்கள் உள்ள இடத்திலேயே நான் ஆடுகளை மேய்ப்பதில்லே.''

அவனுடைய கண்கள் மேய்ந்துகொண்டிருந்த ஆடுகளை நாடின. ஆடுகள் வெகு தூரத்தில் மலையில் எங்கேயோ வளர்ந்திருந்த பச்சைத் துளிர்களைத் தின்று கொண்டிருந்தன.

செந்நிற மனிதனும், முனி பார்த்த இடத்தை நோக்கினான். முனி விரும்பிப் பார்க்கிறவைகளைத் தானும் ஆவலோடு பார்த்தால் தன்மேல் நம்பிக்கை ஏற்படும் என்ற ஓர் எண்ணம் அவனுக்குத் தோன்றியது. அந்த ஆடுகள் இருக்கும் இடத்துக்குச் சென்று அவைகளின் முதுகை வருடினார்.

முனிக்கு இப்போதுதான் அந்தச் செந்நிற மனிதன் எதற்காக நூறு ரூபாயைக் காட்டினார் என்று தெரிந்தது. வாழ்நாட்களில் கண்ட கனவு நினைவாகப் போகிறது என்ற மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அதை விற்று ஒரு சிறிய கடையை ஆரம்பிக்கலாம் என்ற நினைவோடு ஒவ்வொரு நாளையும் முனி கழித்து வந்தான். அந்தக் கடையில் பருப்பு வகைகள், இனிப்பு வகைகள், வழிப்போக்கர்களுக்காகத் தேங்காய்கள், இளநீர் — தாகமாக வந்தவர்களுக்கு — நினைவலைகள் மோதின. எல்லாவற்றையும் வாங்க ஓர் இருபத்தைந்து போதும். இந்த ஆடுகள் போட்டியில் ஒன்றும் பரிசுகள் பெறப் போவதில்லை. இதற்கு நானும் செலவழித்து இருக்கிறேன். மனத்துக்குள் பல எண்ணங்கள்.

''எல்லாம் உனக்காகத்தான். கூட்டாளி இருந்தால் அவருடன் பங்கு போட்டுக்

நீங்கள் சிரியுங்கள்

கொரியா போரின்போது ஓர் அமெரிக்க ராணுவ ஜெனரல் கொரிய ராணுவத்தினரிடையே பேசினார். முதலில் அவர் ஒரு நகைச்சுவைத் துணுக்கை எடுத்துரைத்தார், ஐந்து நிமிட நேரம்!

ஆனால் மொழிபெயர்ப்பாளர், ஏழு சொற்கள்தான் சொன்னார். கூட்டத்தில் சிரிப்பு எழும்பியது.

பிறகு, ஜெனரல் மொழிபெயர்ப்பாளரைப் பார்த்துக் கேட்டார்: ''எப்படி நீங்கள் எனது நகைச் சுவையை இவ்வளவு விரைவில் எடுத்துச் சொன்னீர்கள்?''

''உங்கள் நகைச்சுவை இவர்களுக்குப் புரியாது. ஆகவே, 'ஜெனரல் ஒரு நகைச் சுவைத் துணுக்குக் கூறுகிறார், நீங்கள் சிரியுங்கள்!' — என்றேன்; எனவே எல்லோரும் சிரித்தார்கள்.'' — 'பூங்கா'

□ □ □ □ □ □ □ □ □ □ □ □

கொள்'' என்று கூறிக் கொண்டு முனியிடம் நூற்றி இருபது ரூபாய்களைக் கொடுத்தார் செந்நிற மனிதர்.

''முதன் முதலாக இப்பொழுதுதான் மோட்டாரில் ஏறப் போகிறது. நான் சென்றவுடன் இவைகளை எடுத்துக்கொள்ளுங்கள். இல்லையெனில் என்னைப் பார்த்துவிட்டாலோ என் பின்னால் இவை வந்து விடும். சேலத்திற்குச் சென்றாலும் விடாது தொடர்ந்து வரும்'' என்று தன் இரு கரங்களையும் கூப்பி வணங்கிவிட்டு, புதர்களில் புகுந்து நடந்தான்.

செந்நிற மனிதன் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகளைப் பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்த குதிரையின் மீது ஏறி, அமர்ந்தார்.

மேலடிவானத்திலே மறைந்து கொண்டிருந்த ஆதவனின் ஒளி அந்தக் குதிரையின் மேல் விழுந்து புதிய நிறத்தை உண்டாக்கியது. 'தன் ஒரு ஆளால் தூக்க முடியாது என்று நினைத்துத் துணைக்கு வேறு நபர்களை அழைத்து வரச் சென்றிருக்கிறான் முனி. இதோ சிறிது நேரத்துக்குள் வந்துவிடுவான்' என்று தமக்குள்ளேயே கூறிக் கொண்டு காத்துக் கொண்டிருந்தார் அந்தச் செந்நிற மனிதர்.

■ அவர் மூச்சும், பேச்சும் காற்றோடு கலந்து கொண்டிருந்தது. வெகு தூரத்தில் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்த இலைகளையும் கொடிகளையும் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன.

('இல்லஸ்டிரேடட் வீக்லி' பத்திரிகையிலிருந்து தமிழாக்கம்: செல்லம் சீதாராமன்)

* பள்ளிக்கு வராத பிள்ளை
* இசைத்தொண்டுக்குக் கௌரவம்
* வரலாற்றுக்கு உதவுங்கள்
* ஒலிபரப்புவார்களா?

கல்வியின் மேம்பாட்டினையும், அவசியத்தையும் கிராம மக்கள் இன்னமும் உணர்ந்தார்களில்லை. பெற்றோர்கள் பள்ளிக்குப் பிள்ளைகளைச் சரிவர அனுப்புவது கிடையாது. பள்ளிக்குத் தொடர்ந்து வரும் பிள்ளையும் இடையே நின்றுவிடும். பின்னர் பெற்றோர்களிடம் கேட்டால் ஆடு அல்லது மாடு மேய்க்கப் போவதாய்ச் சொல்லிவிடுவார். அதிகாரிகள் வந்து பிள்ளைகளின் குறைவு பற்றிக் கேட்கிறார்கள். உண்மையை எடுத்து எவ்வளவு சொன்னாலும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஆசிரியர்கள் மேல்தான் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆசிரியர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இது இன்றுவரை நடந்து வருகிறது.

ஆசிரியர்கள் பள்ளிக்கு வராத குழந்தைகளை வீடுதோறும் சென்று அழைக்கிறார்கள். பெற்றோர் ஆசிரியரின் அழைப்பை ஏற்பதில்லை. கோபக் காரராகின்றனர். அத்துடன் இல்லாமல் ஆசிரியரை மிக இழிவாக நினைக்கிறார்கள். வலியச் சென்று பிள்ளைகளை அழைப்பதால். ஆசிரியர்கள் தம் நிலைமை எண்ணி வருந்த வேண்டியுள்ளது. வேறு எந்த நாட்டிலும் இந்நிலை இல்லை.

இராமநாதபுரம், க. ஜெயராமன்
13–4–67 ஆசிரியர்

*

திரு வி. எஸ். கோமதிசங்கர அய்யர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழிசைப் பணியில் ஆதியில் இருந்தே மிக ஊக்கத்துடன் இசைத் தொண்டு புரிந்து வருகிறவர். பல இசைத் தொகுதிகள் இவரது முயற்சியால் வெளிவந்துள்ளன.

சிலப்பதிகாரத்திலிருந்து நம் தமிழ்நாட்டின் நூற்றிமூன்று பண்களையும் அதன் இட்ப நுட்பங்களையும் விளக்குதலை முன் வைத்து இரவும் பகலும் பாடுபட்டு ஆக்க வேலைகளைச் செய்து வருகிறார். சிலப்பதிகாரத்தில் இசையை மட்டும் விளக்குவதான கானல் வரியை நூலாக்கியுள்ளார். சிலப்பதிகாரத்தில் கூறப் பெற்ற பழம் பெருமை வாய்ந்த 11991 ஆதி இசைகளைச் சமீபத்தில் கண்டறிந்துள்ளார். சிலம்பில் கூறும் இசை முறைப்படி நமது ராகங்களின் இலக்கணங்கள் வெகு தெளிவாகப் புலனாகின்ற முறைகளை இவர்கள் வாயிலாக அறியும் போது மிகுந்த மகிழ்ச்சியும் இசைக் கலையின் மேலான சிறப்புக்களும் தெற்றென விளங்குகின்றன.

இவ்வாறு இசைத்தொண்டினையே தமது குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வரும் வீணை வித்துவானும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து வீணை விரிவுரையாளருமாகிய திரு வி. எஸ். கோமதி சங்கர அய்யரவர்களுக்குச் சென்னை சங்கீத நாடக சங்கத்தார் கௌரவப் பட்டம் கொடுக்க முன்வந்தது போற்றத்தக்கதாகும்.

கோயமுத்தூர் திருப்பாம்புரம் என். சிவ
சுப்பிரமணியப் பிள்ளை
18–4–67 இசை விரிவுரையாளர்

*

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றினை எழுதும் பணியை மத்திய அரசினர் எனக்குத் தந்திருக்கிறார்கள்.

பெருமை மிக்கதும் பல அரிய சாதனைகளை உள்ளடக்கியதுமான அவரது வாழ்க்கையினைப் பல கோணங்களில் ஆராய்ந்து எழுத விரும்புகிறேன். ஆகவே, அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் போன்ற பலரும் சட்டம், அரசியல், சமூகம், ஆகிய துறைகளில் அவர் ஆற்றியுள்ள பணிகளில் தத்தமக்குத் தெரிந்தவற்றை எனக்கு எழுதி அனுப்பித் தந்து உதவுமாறு வேண்டுகிறேன். இவை அனைத்துக்கும் மேலாக அவரது மனிதாபிமானத்தைக் குறிக்கும் சம்பவங்களைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன். அவர் எழுதியுள்ள கடிதங்களைக் காண விழைகிறேன். ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரிடம் மதிப்புக் கொண்டவர்கள் பின்வரும் என் விலாசத்துக்கு எழுத வேண்டுகிறேன்.

பேராசிரியர் கே. ஆர். ஆர். சாஸ்திரி
5–4–67 29, துவாரகா காலனி
சென்னை–4

*

'சங்கத் தமிழ்'' என்ற கட்டுரையைப் படித்து மன மகிழ்ச்சி அடைந்தேன். தமிழர்கள் எங்கிருப்பினும் தாய்மொழியின் வளர்ச்சியிலும் அதைப் பரப்புவதிலும் காட்டும் அக்கறை தமிழ் இனத்துக்கே பெருமையாகும்.

''பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினரால் முதல் பரிசு அளித்துக் கௌரவிக்கப்பட்ட ''அருணோதயம்'' என்ற சூடாமணி அவர்களது நாடகத்தையும் மற்ற இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் பெற்ற நாடகங்களையும் அனைவராலும் அரங்கிலே காண முடியாது. மதராஸ் வானொலி நிலையத்தினர் இம் மூன்று நாடகங்களையும், ''விசேஷ நிகழ்ச்சி''களாக ஒலிபரப்புவார்களேயானால் தமிழ் மக்கள் இன்பமும் பெருமிதமும் அடைவர்.

புதுக்கோட்டை
11–5–67 பா. சுப்பிரமணியன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி